ஆதரித்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், 1972–இல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிரிந்து தனியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆரம்பித்தார்கள். ஆரம்பித்தவுடனேயே கலைஞர் மேலே 1974–இல் ஒரு ஊழல் புகார் கொடுக்கிறார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மத்திய அரசிடம் போய் ஊழல் புகார் கொடுக்கிறார். "இந்த மாதிரி கலைஞர் ஒரு ஊழல் செய்திருக்கிறார்; அதிகமாக சொத்து சேர்த்திருக்கிறார்" என்று ஊழல் புகார் கொடுக்கிறார். எங்கே தன்னை ஊழல் வழக்கில் சேர்த்து விடுவார்களோ என்று பயந்துபோய்தான், இந்தக் கச்சத் தீவை அன்றைக்கு மத்திய அரசிடம் எதுவும் கேட்காமல் தாரை வார்த்துக் கொடுத்தவர்தான் இந்தக் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இதைச் சொல்கிறேனென்றால், வரலாறு படித்ததனால், படித்து எனக்குத் தெரிந்ததனால்தான், அன்றைய நிலையை அறிந்ததனால் இதையெல்லாம் பேசுகிறேன். அதேபோல, கச்சத் தீவுக்கு நான் போனதனால் இதையெல்லாம் பேசுகிறேன். இன்றைக்கு நான் கச்சத் தீவுக்கு அந்த மாதிரி போக முடியவில்லை; வர முடியவில்லை.

அன்றைக்கு மேற்கு வங்கத்திலே பி.சி. ராய் என்று ஒரு முதலமைச்சர் இருந்தார். மேற்கு வங்கத்திலிருந்து பெருபாரியைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு மேற்கு வங்கத்திலிருந்து பிரித்துக் கொடுக்க முடியாது; ஒரு நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே இடமில்லை என்று பி.சி. ராய் சொல்லிவிட்டார். இதையே வழக்கறிஞர் ஷேத்தல்வாத் அவர்களிடம் கச்சத்தீவு சம்பந்தமாக கேட்டபொழுது அவரும், "பிரிக்க முடியாது; நீங்கள் பாராளுமன்றத்திலே சட்டத்தை இயற்றி, இரு சபைகளின் ஒப்புதலையும் பெற்று வந்தால்தான் முடியும்" என்று கூறினர். அன்றைக்கு இருந்த முதலமைச்சர் பி.சி. ராய்க்கு இருந்த தைரியம் ஏன் முதல்வர் கலைஞருக்கு இல்லை என்பதுதான் கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று அன்றைக்கே பேசிவிட்டார்களே! இவர் அதிகமாக சொத்து சேர்த்துக்கொண்டு, ஊழல் வழக்கில் மாட்டக்கூடாது என்று கச்சத் தீவைத் தாரை வார்த்துக் கொடுத்தார். தாரை வார்த்துக்

[திரு. விஜயகாந்த்] [2011 ஜூன் 9

கொடுத்தார் என்பதைவிட, நாடாளுமன்றத்தில் எந்தவித தீர்மானமும் நிறைவேற்றப்படாமல் இந்தக் கச்சத் தீவைத் தாரை வார்த்துக் கொடுத்தார்கள். அன்றைக்கு அனைத்துக் கட்சிக் கூட்டம் என்று ஒரு தீர்மானத்தை சட்டமன்றத்திலே போட்டு, சும்மா கண் துடைப்பு நாடகம்தான் கலைஞர் நடத்தினாரே தவிர, வேறு எதுவும் நடத்தவில்லை. ஏன் இதைச் சொல்கிறேனென்றால், இந்தச் சட்டமன்றத்திற்கு அவர்களும் வருவார்கள், பேசலாம் என்று நினைத்தேன். அவர்கள் இன்றைக்கு வரவில்லை. இருந்தாலும், கச்சத் தீவு குறித்த உண்மை நிலைமை எல்லோருக்கும் புரிய வேண்டும் என்பதற்காகத்தான் பேசுகிறேன். அன்றைக்கு நான் மட்டுமே ஒரு எம்.எல்.ஏ.—வாக இருந்தபோது என்னால் பேச முடியவில்லை. ஆனால், அறிக்கைகளாக நான் கொடுத்தேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு எனக்குப் பேசக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் நான் பேசுகிறேன். அன்றைக்கு நான் பேசினாலும் அவர்கள் 'கட்' செய்து விடுவார்கள்; நிறுத்தி விடுவார்கள்; அதைப் பற்றி நான் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. இன்றைக்குக் கச்சத் தீவைப் பற்றி ஏன் இவ்வளவு தூரம் நான் சொல்கிறேன் என்றால்—இன்றைக்குக் கச்சத் தீவைப் பற்றி எல்லோரும் என்ன சொல்கிறார்களென்றால், அதாவது இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையே உள்ள தூரம் 22 மைல்தான். இதிலே என்ன எல்லையைப் பிரிப்பது என்பது எனக்குப் புரியவில்லை. அன்றைக்கு இவர்கள் தாரை வார்த்துக் கொடுத்தார்கள். இன்றைக்கு அதனால் கஷ்டப்படுபவர்கள் இந்திய மீனவர்கள்தான். நியாயமாகச் சொன்னால், இந்திய மீனவர்கள், அதிலும் தமிழ்நாட்டு மீனவர்கள் போனால் வலையை அறுத்து விடுகிறார்கள்; மானபங்கப்படுத்தப்படுகிறார்கள்; வேறு ஏதாவது பண்ணுகிறார்கள், இம்மாதிரியான விஷயங்கள் நடக்கின்றன. இலங்கையில் இருக்கிற கடற்படை, இதுதான் இலங்கையுடைய எல்லை என்று அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்கள். ஆனால், இங்கே இருக்கிறவர்கள் யாரும் நம்முடைய தமிழக மீனவர்களுக்கு அறிவுறுத்தாததினால்தான் இவ்வளவு பிரச்சினை. இது காலங்காலமாக நடந்து வருகிறது. காலங்காலமாக நடந்து வருகிற இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இன்றைக்கு வருவாய்த் துறையைக் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக ஏற்கெனவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்



2011 ஜூன் 9] [திரு. விஜயகாந்த்]

வழக்குப் போட்டிருந்தாலும்கூட, திரும்பவும் வருவாய்த் துறையைச் சேர்க்க வேண்டும் என்று கொண்டு வந்துள்ள இத்தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதில் எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. தமிழக மீனவர்களுக்குக் கச்சத் தீவு திரும்ப வரவேண்டும். தினந்தோறும் செத்து மடிந்து கொண்டிருக்கிற மீனவர்களுக்கு, நல்ல விடிவு காலம் வர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்ஃப் தீவிற்கு தெற்கே 9 மைல் தொலைவிலும், இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே 10 மைல் தொலைவிலும் உள்ள பாக் ஜலசந்தி என்ற பகுதியில் கச்சத் தீவு அமைந்துள்ளது. ஓய்வெடுப்பதற்கும், வலைகளை உலர வைப்பதற்கும், பிடிபட்ட மீன்களை இனவாரியாக வகைப்படுத்துவதற்கும், மக்கள் வசிக்காத வறண்ட கச்சத் தீவை, பரம்பரைப் பரம்பரையாக, தமிழ்நாடு மீனவர்கள் பயன்படுத்தி வந்தனர்.

*முற்பகல் 10—25*

மீனவர்களின் புண்ணியப் புரவலராகக் கருதப்படும் புனித அந்தோணியாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட கத்தோலிக்க தேவாலயம் இந்தத் தீவில்தான் உள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சீனிகுப்பன் படையாச்சி என்பவர் இந்தத் தேவாலயத்தைக் கட்டினார். ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாத இறுதியில், வாரக் கணக்கில் நடக்கும் சமய விழாவில் கலந்து கொள்வதற்காக இந்தத் தீவிற்குத் தமிழக மீனவர்கள் செல்வது வழக்கம். இதுபோன்ற விழாக் காலத்தில் தொழுகை நடத்துவதற்காக, இராமேஸ்வரத்திற்கு அருகிலுள்ள தங்கச்சிமடத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மத குரு கச்சத் தீவிற்குச் செல்வது வழக்கம் என்று வரலாற்றுப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன.

1972—இல் வெளியிடப்பட்ட இராமநாதபுரம் மாவட்ட விவரச் சுவடி, அதற்குமுன் இராஜா இராமராவ் வெளியிட்ட இராமநாதபுர

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 9

மாவட்ட மானுவல் 1915, 1929 மற்றும் 1933 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட இராமநாதபுர மாவட்டத்துப் புள்ளிவிவரங்கள் அடங்கிய பின்னிணைப்பு, 1899–ல் ஏ.ஜெ. ஸ்டூவர்ட்டு எழுதிய சென்னை ராசதானியிலுள்ள திருநெல்வேலி மாவட்ட மானுவல் போன்ற பல்வேறு ஆதாரங்களைக் கொண்டு வெளியிடப்பட்டது. அதில் இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே, 10 மைல் தொலைவில் கச்சத் தீவு இருக்கிறது என்றும், ஜமீன் ஒழிப்பிற்கு முன்னர், இராமநாதபுரம் அரசர் இத்தீவைத் தனி நபர்களுக்குக் குத்தகைக்கு விட்டுக் கொண்டிருந்தார் என்றும், இந்தத் தீவின் சர்வே எண் 1250; பரப்பளவு 285.20 ஏக்கர் என்றும், இந்தத் தீவு இராமேஸ்வரம் கர்ணத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் வட்டத்திலுள்ள தீவு என்று கச்சத் தீவை அது குறிக்கிறது. இவையெல்லாம் கச்சத் தீவு மீது இந்தியாவிற்கு உள்ள பறிக்க முடியாத உரிமைகளுக்குச் சான்றாக விளங்குகின்றன.

இந்த விவரச் சுவடி வெளியிடப்பட்டபோது, திரு. மு. கருணாநிதி தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். அந்த விவரச் சுவடியில் கச்சத் தீவு பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதிலிருந்த வரைபடத்தில் கச்சத் தீவு இந்தியாவின் பகுதி எனக் காண்பிக்கப்படவில்லை. ஆனாலும், இந்த விவரச் சுவடிக்கு 14–6–1972–இல் முகவுரை எழுதிய அப்போதைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, அதைப்பற்றி விவரச் சுவடி தயாரித்த அதிகாரிகளிடம் எடுத்துக் கூறாமல், முகவுரை எழுதிக் கொடுத்துவிட்டார். இதுதான் கச்சத் தீவு மீது திரு. மு. கருணாநிதிக்கு இருந்த பற்று.

இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய கடலோர மாவட்டங்களில் வாழும் தமிழக மீனவர்கள், தொன்றுதொட்டு கச்சத் தீவின் அருகில் மீன் பிடித்து, அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தனர். 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக திரு. கருணாநிதி பதவி வகித்தபோது, அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின்படி, இரு நாடுகளும் பரம்பரைப் பரம்பரையாகத் தங்கள் நாட்டிற்குச் சொந்தமான கடல் எல்லைகளில் எந்தெந்த உரிமைகளை அனுபவித்து வந்தனவோ, அந்தந்த உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



2011 ஜூன் 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நான் முதலமைச்சராக இருந்தபோது, கச்சத் தீவைத் திரும்பப் பெறுவதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டேன். 15–8–1991 சுதந்திரத் தினத்தன்று தேசியக் கொடியைப் புனித ஜார்ஜ் கோட்டையில் ஏற்றி வைத்து, “கச்சத் தீவை மீட்போம்” என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல், இதுகுறித்து பலமுறை மத்திய அரசையும், பாரதப் பிரதமரையும் நேரிலும், கடிதம் மூலமாகவும் வற்புறுத்தியிருக்கிறேன். 16–9–2004 அன்று “Lease in Perpetuity” – அதாவது, நிரந்தரமான குத்தகை என்ற முறையில், தமிழக மீனவர்கள் கச்சத் தீவிற்குச் சென்று மீன் பிடிக்கும் உரிமையை மத்திய அரசு பெற்றுத் தரவேண்டுமென்று பாரதப் பிரதமரை நேரில் சந்தித்தும் வலியுறுத்தியிருக்கிறேன். இருப்பினும், தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் எந்தவித நடவடிக்கையையும் மத்திய அரசு எடுக்கவில்லை.

முற்பகல் 10–30

2006–ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலையடுத்து, தமிழகத்தின் முதலமைச்சராக திரு. மு. கருணாநிதி பொறுப்பேற்றுக் கொண்டார். மத்தியிலும் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வந்தது. எந்த மத்திய அரசும், மாநில தி.மு.க. அரசும், 1974–ஆம் ஆண்டு கச்சத் தீவைத் தாரை வார்த்துக் கொடுத்தனவோ, அதே அரசுகள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பை வகித்தன. ஆனால், கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. மாறாக, தமிழக மீனவர்களின் வலைகளை அறுத்தல், படகுகளைச் சேதப்படுத்துதல், அவர்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல், கழுத்தில் கயிற்றினால் சுருக்கிட்டுத் தமிழக மீனவர்களைக் கொல்லுதல் போன்ற ஈவு இரக்கமற்ற, மனிதாபிமானமற்ற செயல்களில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டனர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், உயிரைப் பணயம் வைத்துத் தொழில் செய்யக்கூடிய நிலைமைக்குத் தமிழக மீனவர்கள் தள்ளப்பட்டார்கள்.

மாநிலத்தில் தி.மு.க. ஆட்சி, மத்தியில் தி.மு.க. தயவில் காங்கிரஸ் ஆட்சி என்ற நிலை இருந்தபோதும் கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கையையோ அல்லது தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தும் தாக்குதலைத் தடுப்பதற்கான நடவடிக்கையையோ, அப்போதைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் திரு. கருணாநிதி எடுக்கவில்லை. கச்சத் தீவு,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 9

இலங்கை அரசுக்குத் தாரை வார்க்கப்பட்டதன் விளைவாக, இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இதுவரை நூற்றுக்கணக்கான மீனவர்கள் பலியாகி இருக்கிறார்கள்.

1960–ஆம் ஆண்டுக்கு முன்பு, 1950–களில், மேற்கு வங்காளத்தில் உள்ள பெருபாரி என்ற பகுதியை அப்போதைய கிழக்கு பாகிஸ்தானுக்குக் கொடுக்க மத்திய அரசு முயன்றபோது, அதை மேற்கு வங்க மாநில அரசு எதிர்த்ததோடு மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. அப்போதைய மேற்கு வங்க மாநில முதலமைச்சர் திரு. B.C. ராய், இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், “இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும்” என 1960 ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. மேற்கு வங்க அரசின் இந்த சமயோசித நடவடிக்கை காரணமாக, அதாவது, அன்றைய மேற்கு வங்க முதலமைச்சர் திரு. B.C. ராய் அவர்களின் சமயோசித நடவடிக்கை காரணமாக, பெருபாரி பகுதி இன்றும் இந்திய நாட்டின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பினை மேற்கோள்காட்டி, 1974-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் மனு செய்திருந்தால், கச்சத் தீவு இன்றும்கூட, இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்திருக்கும். ஆனால், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த திரு. மு. கருணாநிதி இதைச் செய்யத் தவறிவிட்டார்.

1974–இல் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவது குறித்து அன்றைய முதல்வர் திரு. மு. கருணாநிதிக்குத் தெரியும் என்றும், அதை அவர் ஏன் எதிர்க்கவில்லை என்றும் நான் பலமுறை கேள்வி எழுப்பி உள்ளேன். ஆனால், திரு. மு. கருணாநிதியோ 1974–இல் ஒப்பந்தம் போடுவதற்கு முன்னால் தனக்கு இதுபற்றி தெரியாது என்றுதான் கூறிக்கொண்டு வருகிறார். திரு. கருணாநிதியின் இந்தக் கூற்றில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

23–7–1974–இல் மாநிலங்களவையில் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது, “...I would like to get a clarification in this regard from the Hon. Minister. Just now I heard the views expressed



2011 ஜூன் 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

by my Hon’ble friend, Mr. S.S. Mariswamy, D.M.K., that in the agreement reached between the Government of India and the Sri Lanka Government, the Government of Tamil Nadu was not properly informed.

. . . There are two news items which appeared in ‘The Hindu’. One was on June 27:–

‘When pressmen asked the Tamil Nadu Chief Minister Mr. Karunanidhi, for his reaction to the agreement on Kachatheevu, he said he would prefer to wait until after the details had been announced. Mr. Karunanidhi said that Foreign Secretary, Mr. Kewal Singh, had met him last week during his visit to Madras and apprised him on the situation. Mr. Kewal Singh had told him that a favourable condition existed for agreement on Kachatheevu.’

On the 29th June, the Chief Minister stated the following to the Press:–

‘It was regrettable that before signing the agreement, the Centre had not invited him or any representative of the State Government for consultation. The Prime Minister had not even chosen to ascertain the views of the leaders of Parliament on this vital question’.”

என்று தெரிவித்து, இதில் எது சரி என்று வினவுகிறார். இதற்கு Thiru Bhupesh Gupta அவர்கள், “We know it for a fact that the State was consulted” என்று கூறியுள்ளார்.

முற்பகல் 10–35

இதுகுறித்து, 21–8–1974 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கச்சத் தீவு குறித்து கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது, “மத்திய அரசு உங்களோடு ஆலோசனை நடத்தியதா?” என்று திரு. ஆலடி அருணா, முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களைக் கேட்டபோது, திரு. கருணாநிதி, “வெளியுறவுத் துறைச் செயலாளர் கேவல் சிங் அவர்களை நான் டெல்லியில் சந்தித்தபோது இதைப்பற்றி அவர் என்னிடம் பேசினார். இதை ஆலோசனை என்று வைத்துக் கொண்டாலுங்கூட, நான் அவரிடம் சொன்னது: “தமிழ் மக்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்;

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 9

தமிழக அரசு இதை ஏற்றுக்கொள்ளாது. கச்சத் தீவு இந்தியாவுக்கே, தமிழகத்திற்குச் சொந்தமாக இருக்கவேண்டும் என்று எடுத்துச்சொல்லி, மறுநாள் பிரதமரைச் சந்தித்தபோது, இதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன்" என்று கூறியுள்ளார். அப்போது, ஆலடி அருணா, நாடாளுமன்றத்தில் ஸ்வரண் சிங் அவர்கள் பேசியதை எடுத்துச் சொல்கிறார்:

"The External Affairs Minister, Shri Swaran Singh said in Rajya Sabha today that very detailed consultations had been held with the Chief Minister of Tamil Nadu Mr. Karunanidhi by the Government of India on the issue of Kachatheevu. The consultations were held at least twice."

அதற்கு விளக்கம் அளித்து, திரு. மு. கருணாநிதி, ஸ்வரண் சிங் மேலும் என்ன சொன்னார் என்று குறிப்பிடும்போது, "May I say, because others might pick up – I would like to say categorically, that we had very detailed consultations with the Chief Minister Shri Karunanidhi of Tamil Nadu, not once, but at least two times." உடனே ரபிராய் என்ற உறுப்பினர் எழுந்திருந்து, "Had he agreed?" என்று கேட்டார். உடனே அமைச்சர் ஸ்வரண் சிங் அவர்கள் சொல்கிறார்– "the point raised was about consultation" என்று சொல்லி, தந்திரமாகத் தப்பித்துக் கொள்கிறார். தந்திரமாகத் தப்பித்துக் கொண்டது திரு. ஸ்வரண் சிங்கோ, மத்திய அரசோ அல்ல; கச்சத் தீவைத் தாரை வார்க்க துணைபோன திரு. கருணாநிதிதான் தந்திரமாகத் தப்பித்துக் கொண்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலில் "consultation" இல்லை; அதாவது ஆலோசனை கேட்கவில்லை என்று சொன்னவர், பின்னர் "consent" கொடுக்கவில்லை, அதாவது ஒப்புதல் அளிக்கவில்லை என்று கூறி தப்பித்துக் கொண்டுவிட்டார்.

கச்சத் தீவை இலங்கையிடம் இந்தியா ஒப்படைக்கும் முன்பு, மத்திய அரசு தமிழக அரசிடம் பல முறை விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது என்பது தெளிவாகிறது. உண்மையிலேயே, திரு. கருணாநிதிக்குத் தமிழக மீனவர்கள்மீது அக்கறை இருந்திருந்தால், இந்திய–இலங்கை உடன்பாடு கையெழுத்தாவதற்கு முன்பே, சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி மிகப் பெரிய போராட்டத்தை நடத்தியிருக்க



2011 ஜூன் 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வேண்டும். ஆனால், அதைச் செய்யத் தவறிவிட்டார் முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி. சட்டமன்றத் தீர்மானத்தில்கூட மத்திய அரசு செய்துகொண்ட ஒப்பந்தம், "வருத்தம் அளிக்கிறது" என்றுதான் திரு. கருணாநிதி குறிப்பிட்டிருக்கிறாரே தவிர, "எதிர்க்கிறோம்" என்ற சொல் எங்கேயும் இடம் பெறவில்லை. இந்தத் தீர்மானம், ஏதோ சம்பிரதாயத்திற்காக, சமாதானத் தொனியில், நிறைவேற்றப்பட்ட தீர்மானம் போல்தான் இருக்கிறதே தவிர, இழந்த உரிமையை மீட்கக்கூடிய போராட்டத் தொனியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் போல் இல்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், திரை மறைவில் கச்சத் தீவை காவு கொடுப்பதற்கு ஒப்புதல் அளித்துவிட்டு, கண்துடைப்பு நாடகமாகத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் திரு. கருணாநிதி என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தான் செய்த துரோகத்திற்குப் பரிகாரம் காணும்வகையில், 2006 முதல் 2011 வரை, மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தபோது, "தமிழக மீனவர்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து நடத்தினால், கடும் விளைவுகளை இலங்கை சந்திக்க நேரிடும்" என்று மத்திய அரசின் மூலம் இலங்கை அரசை எச்சரிக்கை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், அதைச் செய்யவில்லை. மாறாக, இலங்கையில் தமிழ் இனம் அழிவதற்குத் துணை போனார் திரு. கருணாநிதி.

நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியபடி, நான் எடுத்த பல்வேறு முயற்சிகளின் காரணமாக, கச்சத் தீவில் மீன் பிடிக்கும் உரிமை, நமது மீனவர்களுக்குக் கிடைக்காத நிலையில், 2008–ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்த 1974 மற்றும் 1976 ஆண்டைய ஒப்பந்தங்கள் 'சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல' என்று உத்தரவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்திருந்தேன். இந்த வழக்கில் மத்திய அரசுடன் தமிழ்நாடு அரசையும் ஒரு பிரதிவாதியாகச் சேர்த்திருந்தேன். இந்த வழக்கு 6–5–2009 அன்று உச்ச நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்காகப்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 9

பட்டியல் இடப்பட்டபோது, மீன்வளத் துறை ஆணையரால் தமிழக அரசுக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையில் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அதில் ஒரு கருத்தாக "...uniform stand has to be taken both by the Central and State Governments" என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது, மத்திய அரசும், மாநில அரசும் ஒரே நிலையை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

முற்பகல் 10–40

இந்த வழக்கிற்குப் பத்திவாரிக் குறிப்புகள் வைத்து, அதற்கு ஒப்புதல் கேட்டு 10–6–2009 அன்று அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதிக்குக் கோப்பு அனுப்பப்பட்டது. அந்தக் கோப்பினைச் சட்டத் துறை மூலமாக அனுப்பும்படி முதலமைச்சரின் செயலாளர் 13–7–2009 அன்று திருப்பிவிடுகிறார்.

சட்டத் துறை தனது குறிப்பில் தமிழக அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் எந்தவித வேண்டுகோளும் வைக்கப்படவில்லை என்றும், தமிழக அரசை ஒரு proforma respondent என்ற அளவில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்து, மத்திய அரசின் எதிர் உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டபின் அதையே பின்பற்றலாமா, அல்லது நம்முடைய நிலைப்பாடு பற்றி உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கலாமா என்பது குறித்து உரிய நேரத்தில் முடிவெடுத்துக்கொள்ளலாம் என்று கூறியுள்ளது. இந்தக் கருத்தை உள்ளடக்கி இந்த நிலைப்பாட்டை உச்ச நீதிமன்றத்தில் உள்ள தமிழக அரசின் Advocate on Record–க்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகச் சுற்றோட்டக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பிற்கு 14–8–2009–இல் முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த வழக்கிற்கான பத்திவாரி அறிக்கையில், 1974 மற்றும் 1976-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் ஷரத்து எண் 8–இன்படி, நாடாளுமன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறப்படாதது; சட்டத்திற்குச் சட்டத் திருத்தம் செய்யப்படாதது குறித்து வாதி எழுப்பிய வினாக்களுக்கு மத்திய அரசுதான் தெளிவுரை வழங்கிட இயலும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, இந்த ஒப்பந்தம் செல்லத்தக்கது என்பதே முந்தைய தி.மு.க. அரசின் நிலைப்பாடாக இருந்தது.



2011 ஜூன் 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கச்சத் தீவை மீட்க வேண்டும்; தமிழக மீனவர்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருக்குமானால், தன்னுடைய கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் உடனே எதிர் உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை. தமிழக மீனவர்களின் நலன் காக்க நடவடிக்கை எடுக்க மனம் இல்லாததால்தான், மத்திய அரசு எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்தபின் மாநில அரசு தாக்கல் செய்யலாம் என்று முடிவெடுத்துவிட்டார் திரு. கருணாநிதி.

1–4–2011 அன்று 2 மாதங்களுக்கு முன் மத்திய அரசு, உச்ச நீதிமன்றத்தில் எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்தது. அதில் 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டியது இல்லை என்றும், என்னுடைய ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

"தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ முடியும். தமிழர் வாழ்ந்தால்தான் தமிழ்ச் சமுதாயம் வாழ முடியும்" என்று கூறியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழன் அழிந்தாலும் பரவாயில்லை; தன் சமுதாயம் வாழ்ந்தால் போதும் என்பதை நிகழ்த்திக் காட்டியவர் "அண்ணாவின் பாசறையில் வளர்ந்தவர்" என்று தனக்குத் தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சுட்டிக்காட்டி, கச்சத் தீவு குறித்த வழக்கில் தமிழக மீனவர்களுக்குச் சாதகமான தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் அளிக்க வகை செய்யும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள இத்தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை எனக் கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். முதலில் திரு. இரா. காமராஜ் அவர்கள். உங்களுக்கு உரையாற்ற ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள்.

முற்பகல் 10–45

***திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி மீது வெற்றி வந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையே சேரும். அந்த வெற்றியை வாங்கித் தருகின்ற பெருமையெல்லாம் எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்களை மட்டுமே சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற வரலாற்றுக்குச் சொந்தக்காரர். 1½ கோடி கழகத் தொண்டர்கள் மட்டுமல்லாமல், உலகத்திலே வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழர்கள், உள்ளத்தால், உணர்வுகளால் அம்மா, அம்மா, அம்மா என்று அடிவயிற்றிலிருந்து அன்போடு அழைக்கின்ற எங்கள் அன்புத் தாய்.

"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே"

என்கின்ற வள்ளலாரின் வாய்மொழியை உள்வாங்கிய எங்கள் உன்னத தலைவியை, திராவிடப் பண்ணையின் நறுமலரை, ஏழைகளின் எழில் நகையை, காலம் நமக்காக ஒதுக்கிய கருணைத் தொகுப்பை, மூடுபனி வைகறையின் முகத் திரையைக் கிழியுமுன், மக்களின் நலனே என் நலன் என அக்கறை கொண்டு உழைத்திடும் எங்கள் தலைவியை, எந்த இராஜ திராவகத்திலும் கரைந்து





போகாத அந்த மூலகத்தை, மோத வந்தவர்கள் முடமாகிப் போனாலும், சேதம் அடையாத தென்னாட்டு இமயத்தை, "பெண்கள் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால், போரும் இல்லை; சாக்காடும் இல்லை" என்று சொன்ன பாரதிதாசனின் அந்த வரிகளின் ஆளுமையை, சிறுபடை காட்டும் சினத் தீக்கெல்லாம் சினந்து எழாமல் உறுபடைக் கொண்டே உலகை ஆளும் எங்கள் உன்னத தலைவியை, நான் வணங்குகின்ற தெய்வத்தை, என்னை வாழ வைக்கும் தெய்வத்தை, மாண்புமிகு எங்கள் குல தெய்வத்தின் பாதங்களைத் தொட்டு முதலில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு, நன்னிலம் சட்டப் பேரவை தொகுதியில் போட்டியிட்ட என்னை, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவைக்கு அனுப்பி வைத்த நன்னிலம் சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, மனமார்ந்த நன்றியை இந்த அவையின்மூலம் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இது என்னுடைய கன்னிப் பேச்சு. நான் எண்ணிப் பார்க்கிறேன்; தமிழகத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒரு சின்னஞ்சிறிய கிராமத்தில், எளிய குடும்பத்தில் பிறந்த நான், நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக 2001–ஆம் ஆண்டு எங்களுடைய தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டவன். அன்றைக்கு என்னுடைய கன்னிப் பேச்சில் நான் குறிப்பிடுகிறபோது, ஒன்றைக் குறிப்பிட்டேன். ஒட்டுமொத்த இந்தியத் திருநாட்டில் பத்து சின்னஞ் சிறிய சிற்றூர்களை எடுத்துக்கொண்டால், அதில் என்னுடைய ஊர்தான் மிகச் சிறிய ஊராக இருக்கும். அந்த ஊரிலிருந்து இந்த மாமன்றத்திற்கு என்னுடைய தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுப்பி வைத்தார்கள் என்று அன்றைக்கு என்னுடைய கன்னிப் பேச்சில் நான் கோடிட்டுக் காட்டினேன். அதைத்தான் இன்றைக்கும் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

ஒரு சாதாரண சிற்றூரில் சோத்திரியம் என்கின்ற சிற்றூரில் பிறந்த என்னை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற மாபெரும் இயக்கத்தின் ஒன்றியக் கழகத்தினுடைய இணைச் செயலாளராக, கோட்டூர் ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராக, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராக, இன்று வரை மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராக, இதற்கிடையில் எங்களுடைய தலைவி புரட்சித்

[திரு. இரா. காமராஜ்] [2011 ஜூன் 9

தலைவி அம்மா அவர்களுடைய நாமத்தைத் தாங்கியிருக்கிற புரட்சித் தலைவி அம்மா பேரவையினுடைய செயலாளராக, 1½ ஆண்டுகள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், இன்றைக்கு நன்னிலம் சட்டப் பேரவையினுடைய உறுப்பினராவதற்கான வாய்ப்பையெல்லாம் எங்களுடைய தலைவி தந்ததோடு மட்டுமல்லாமல், வரலாற்றுச் சிறப்புமிக்க 14–ஆவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் உரை மீதான விவாதத்தினை வழிமொழிவதற்கான வாய்ப்பினையும் அளித்த என்னுடைய தெய்வத்திற்கு என்னுடைய நன்றியை மீண்டும் நான் காணிக்கையாக்குகிறேன்.

மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களையெல்லாம், அடேயப்பா! எத்தனை திட்டங்கள் என மக்கள் இன்றைக்கு எண்ணி எண்ணிப் பார்க்கிறார்கள்; வியக்கிறார்கள்; பாராட்டுகிறார்கள். இதனால் சிலருக்கு வயிற்றெரிச்சல் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. அதற்குக் காரணம் கடந்த தேர்தலில் எங்குப் பார்த்தாலும் அவர்களுடைய பிரசாரம் என்னவாக இருந்தது என்று சொன்னால், "6–ஆவது முறை முதலமைச்சர், 6–ஆவது முறை முதலமைச்சர்" என்று எங்குப் பார்த்தாலும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சொல்லியே அவர்கள், ஆறாவது முறை முதலமைச்சராக ஒரு மாதம் வாழ்ந்துவிட்டார்கள், அதுதான் இதில் இருக்கிற வேடிக்கை. ஒரு மாதம் என்பதை நான், எதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், வாக்குப் பதிவு, வாக்கு எண்ணிக்கை, இதற்கிடைப்பட்ட ஒரு மாத காலம் இருக்கிறதே, இந்த ஒரு மாத காலத்தில் அவர்களுடைய கூட்டணிக் கட்சிகளினுடைய, இன்றைக்குக் காணாமல் போன தலைவர்கள், அவர்களுடைய உளவுத் துறையினுடைய அதிகாரிகள், அவர்களுக்குத் துதிபாடும் நண்பர்கள் என இவர்கள் எல்லாம் சேர்ந்து "நீங்கள்தான் முதலமைச்சர்; நீங்கள்தான் முதலமைச்சர்" என்று ஆளுக்கு ஒரு பொன்னாடையைப் போர்த்தி, வெளியே நிருபர்களுக்கெல்லாம் பேட்டி கொடுத்த காட்சியை நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். அதனாலே ஒரு மாத காலம் முதலமைச்சராகவே, 6–ஆவது முறை முதலமைச்சராக இருந்துவிட்டார். அதனால் இன்றைக்கு மிகப் பெரிய வயிற்றெரிச்சலோடு தினந்தோறும் உளறிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் மாறாகத்தான் இதயத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த மக்களுடைய



2011 ஜூன் 9] [திரு. இரா. காமராஜ்]

ஆதரவோடு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–50*

பொறுப்பேற்ற முதலமைச்சர் அம்மா அவர்கள், பொறுப்பேற்ற முதல் நாளே 7 திட்டங்களுக்குக் கையெழுத்து போட்டார்கள். ஒரு கோடியே 83 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 கிலோ அரிசி இலவசம். அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் 18 இலட்சத்து 62 ஆயிரம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 35 கிலோ அரிசி இலவசம். படித்த ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு ரூ.25,000 உதவித் தொகையுடன் தாலிக்கு 4 கிராம் தங்கம் இலவசம். இளநிலைப் பட்டம் அல்லது பட்டயம் பயின்ற பெண்கள் திருமண உதவித் தொகை, ரூ.25,000–இலிருந்து ரூ.50,000–ஆக அதிகரிப்பு; தாலிக்கு 4 கிராம் தங்கம் இலவசம். இதெல்லாம் எங்கள் தங்கத் தலைவியால்தான் முடியும் என்று நிரூபித்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* முதியோர் உதவித் தொகை ரூ.500–இலிருந்து ரூ.1,000; மீன்பிடி தடைக் காலத்தில் மீனவர்களுக்கு உதவிப் பணமாக ரூ.1,000–இலிருந்து ரூ.2,000–ஆக உயர்வு; அரசுப் பெண் ஊழியர்களின் மகப்பேறு கால விடுப்பு 6 மாதங்களாக உயர்வு; தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைக்கப்பட்டு, அதற்கெனத் தனியாக அமைச்சர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தத் திட்டங்களையெல்லாம் பாராட்டுகிற மக்கள்தான், கடந்த கால ஆட்சியை ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். கடந்த காலத்தில் ஆட்சியாளர்களுக்கும், மக்களுக்கும் ஒத்துப் போகவில்லை. எப்போது பார்த்தாலும் எகத்தாளமாகத்தான் இருந்தது. எகத்தாளம் என்கிற சொல் எப்படி வந்தது என்று சொன்னால், ஏக தாளம் என்பது பின்னாலே எகத்தாளம் என்று வந்ததாகச் சொல்வார்கள். இந்த ஏக தாளமும்—ஆதி தாளம், அடதாளம், திருவிட தாளம், ஜம்பதாளம், ரூபகதாளம் என்ற இந்த 5 தாளங்கள் சேர்ந்தது பஞ்ச தாளங்கள். இராகத்திற்குத் தகுந்த மாதிரி வாசிக்க வேண்டும். அதுதான் இந்த பஞ்ச தாளங்கள். வாசிப்பவருக்கும், பாடுபவருக்கும் ஒத்துப் போகவில்லையென்று சொன்னால் அது 'கடமுட, தடமுட' என்று அடித்து ஏக தாளமாக மாறிவிடும். அதனாலேதான் அது பின்னாலே எகத்தாளமானது. கடந்த காலத்திலேயெல்லாம்

எகத்தாளம்தான் நடந்தது. எகத்தாளம் நடக்கவில்லை என்று சொல்ல முடியுமா? அன்றைக்கு மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் ஒத்துப் போகவில்லை.

நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் தருகிறேன்; நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் தருகிறேன் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள், யாருக்குக் கொடுத்தார்கள்? நிலமற்ற விவசாயிகளுக்கு, நிலமற்ற தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டதா என்று சொன்னால் கொடுக்கப்படவில்லை.

கடந்த கால ஆட்சியிலே சட்டம்—ஒழுங்கு பற்றி கேட்கவே வேண்டாம். சட்டம்—ஒழுங்கு, அது இல்லவே இல்லை. காவல் துறை ஆய்வாளர் வெற்றிவேல் அவர்கள் அன்றைக்கு அமைச்சர்கள் முன்னாலே வெட்டி வீழ்த்தப்பட்டார். இதை எங்கேயாவது நாம் கேள்விப்பட்டதுண்டா? இது ஒருபக்கம். நேரடியாக அமைச்சர்கள் முன்னாலே வெட்டி வீழ்த்தப்படுகிறார்.

கடந்த காலத்தில் இடைத் தேர்தல்களைச் சந்தித்தோம். இடைத் தேர்தல் என்று சொல்கிறபோது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, பல இடைத் தேர்தல்களைச் சந்தித்தார்கள். எல்லா இடைத் தேர்தல்களிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்களைப் பார்த்து நான் கேட்டுக்கொள்கிறேன். அன்பிற்கினிய மாமன்ற உறுப்பினர்களே, அன்றைக்கு ஏதாவது ஒரு அத்துமீறலை, ஏதாவது ஒரு தொகுதியிலே சொல்லியிருக்க முடியுமா? கடந்த கால ஆட்சியிலே இடைத் தேர்தல் என்று சொன்னால் அதற்கு திருமங்கலம் ஃபார்முலா. முன்னாலே பேசிய எங்கள் அருமைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் திருமங்கலத்தைப் பற்றிப் பேசுகிறபோது, திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஏன் இன்னும் திருமங்கலம், திருமங்கலம் என்று சொல்கிறீர்கள், திருமங்கலத்தைத்தான் உடைத்து எறிந்தாகிவிட்டதே என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் திருமங்கலம் ஃபார்முலா என்று சொல்கிறபோது, மதுரைத் தேர்தல், திருமங்கலம் தேர்தல், இந்தத் தேர்தல்களில் எல்லாம் அண்ணா தி.மு.க.—காரர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள்; முட்டி உடைக்கப்பட்டது; பல்வேறு





சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பதையெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். நாங்கள் அந்த சோதனைகளையெல்லாம் தாங்குவதற்குத் தயாரானவர்கள். ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழி நடத்தப்படுகிற நாங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) எந்தச் சோதனை வந்தாலும் இந்த இயக்கத்திற்காக உயிர்த் தியாகம் செய்வதற்கும் தயாரானவர்கள், இந்த இயக்கத்திலே இருக்கிறோம்.

இன்றைக்கு நானெல்லாம் சட்டமன்ற உறுப்பினராக இங்கே வந்திருக்கிறேன் என்று சொன்னால், இந்த இயக்கத்தில் இருக்கிற ஒன்றரை கோடி தொண்டர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கையை நீட்டினால் ஒரே வரிசையில் நிற்கக்கூடிய இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். எந்தத் தியாகத்தையும் செய்வதற்கு நாங்கள் தயாரானவர்கள். ஓர் உதாரணம் சொல்கிறேன். திருமங்கலத்திலே என்னால் ஒத்துக்கொள்ள முடியாத ஒரு நிகழ்ச்சி நடந்தது. திருமங்கலம் இடைத் தேர்தலில், நாங்கள் ஆலம்பட்டிக்கு பக்கத்திலே சில கிராமங்களிலே வேலை பார்க்கிறோம். ஆலம்பட்டி, திருமங்கலத்திற்குப் பக்கத்திலே இருக்கிற இடம். ஆலம்பட்டிக்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாக்கு கேட்க வர இருக்கிறார்கள். வாக்கு கேட்க வர இருக்கும்போது மிகப் பெரிய கூட்டம் இருந்தது. அம்மா அரை மணி நேரத்திற்குப் பின்னாலே வரப் போகிறார்கள் என்றால் கூட்டம் எப்படியிருக்கும் என்று உங்களுக்குத் தெரியும், எல்லோருக்கும் தெரியும், அவ்வளவு பெரிய கூட்டம். அந்தக் கூட்டத்திலே நாங்கள் எல்லாம் நின்று கொண்டிருக்கிறோம். பக்கத்திலே ஒரு மைதானம். அந்த மைதானத்திலே அன்றைக்கு மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினுடைய கூட்டணிக் கட்சியினுடைய ஒரு தலைவர் பேச வருகிறார். ஒரு சின்ன மைதானம். அங்கு ஒன்றும் பெரிதாக கூட்டம் இல்லை. அங்கே அவருக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அரைமணி நேரத்திற்கு முன்பாக அவர் அங்கு வருகிறார். அவர் அங்கு வந்துவிட்டு பிரசாரக் கூட்டத்தை முடித்துவிட்டுச் சென்று விடுகிறார்.

*முற்பகல் 10—55*

அவர் சென்று அடுத்த ஒரு நிமிடத்தில் அந்த ஒலிபெருக்கியில் இருந்து ஒரு குரல் வருகிறது. ஒரே கூட்டம். நாங்கள் நிற்கிற இடத்தில் கூட்டம். அங்கு ஒலிபெருக்கி கட்டி இருக்கிறது.

[திரு. இரா. காமராஜ்] [2011 ஜூன் 9

அந்தக் கூட்டணிக் கட்சித் தலைவர் ஒருவர் பேசியதால், நாங்கள் நாகரிகமாக எங்களுடைய ஒலிபெருக்கியை ஆஃப் செய்து வைத்திருந்தோம். அப்போது நாங்கள் நிற்கிற இடத்தில் காதில் கேட்கிறது. அவர் 'pass' ஆகிறார். பிறகு ஒரு நிமிடத்திலே அந்த ஒலிபெருக்கியிலிருந்து ஒரு குரல் வருகிறது. இன்னும் சற்று நேரத்தில், 'இங்கே கலவரம் வரப் போகிறது'. என்று எவ்வளவு பெரிய வேடிக்கை பாருங்கள்!. 'கலவரம் வரப்போகிறது' என்று மைக்கில் அறிவிக்கிறார்கள். 'இன்னும் அரை மணி நேரத்தில் அம்மா வரப்போகிறார்கள்; 'இன்னும் சற்று நேரத்தில் கலவரம் வரப்போகிறது; எல்லோரும், மகளிர் எல்லாம், தாய்மார்கள் எல்லாம் அவர்களுடைய வீட்டிற்குப் போய்விடுங்கள்' என்ற அறிவிப்பு வருகிறது. அறிவிப்பு வந்ததும் எங்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஜனநாயகத்தில் இம்மாதிரி வாழ்க்கையில் கேட்டது கிடையாதே, நம்முடைய வயதுக்கு இந்த மாதிரி கேட்டது கிடையாதே! குரல் வந்த இடத்தை நோக்கி நாங்கள் போகிறோம், நானும் என்னுடன் இருந்தவர்களும். யார் பேசியது? இவ்வளவு மோசமாக இருக்கிறதே? அங்கே போகிறபோது யாரும் இல்லை. காவல் துறையினர் மட்டும் நிற்கிறார்கள். "யார் பேசியது?" என்று கேட்டால் யாரும் இல்லை என்கிறார்கள். அப்போது காவல் துறை பேசியதா? காவல் துறையை வைத்து சட்டம்—ஒழுங்கு மற்றும் ஜனநாயகத்தினுடைய குரலை நெரிக்கும் வேலைகளை, பணிகளைத் தொடர்ந்து பார்த்தார்கள். இதிலே எங்களுக்கு வருத்தமில்லை. நாங்கள் இடைத் தேர்தலில் வெற்றி பெறவில்லை. இடைத் தேர்தல் முடிவுகள் எங்களுக்கு மாறாக வந்திருக்கிறது. எங்களுக்கு அதைப் பற்றி இம்மியளவுகூட கவலையில்லை. எப்படி என்று சொன்னால் வந்தவாசியில் ஒரு இடைத் தேர்தல் நடக்கிறது. வந்தவாசியில் இடைத் தேர்தல் நடக்கிறபோது நாங்கள் எல்லாம் அங்கு வேலை பார்த்துக்கொண்டிருக்கிறோம். அம்மா அவர்கள் பிரசாரத்திற்கு வரப் போகிறார்கள். அம்மா அவர்கள் பிரசாரத்திற்கு வரப் போவதற்கு முன்னால் சரியான மழை. இரவிலிருந்து மழை பெய்கிறது. ஒரு கொடிகூட கட்ட முடியவில்லை. இரவு வருகிறார்கள் எங்கள் ஊரில்தான், மங்கலமாமண்டூர் என்ற இடத்தில் பிரசாரத்தை முடிக்கிறார்கள். அம்மா வருவதற்காக நாங்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தோம். 'லைட்' கூட கட்ட முடியவில்லை. நாங்கள் 'லைட்' கட்டுகிறவர்களோடு சேர்ந்து கழகத் தோழர்களுடன் சேர்ந்து, பிளாஸ்டிக் கவரை தலையில் போட்டுக் கொண்டு கட்டிக்



2011 ஜூன் 9] [திரு. இரா. காமராஜ்]

கொண்டிருந்தோம். அங்கு நின்று வேலை பார்க்க முடியவில்லை. 3 மணிக்கு மேல் கடகடவென்று மழை ஊற்றுகிறது. பஸ் ஸ்டாண்டில் போய் ஒதுங்கி நிற்கின்றோம். பஸ் ஸ்டாண்டில் 4, 5 பேர்களுடன் ஒதுங்குகிறபோது, அங்கே ஏற்கெனவே 10 பேர் நிற்கிறார்கள் நான் ஒன்றியச் செயலாளரோடு பேசிக் கொண்டிருந்தேன். "அம்மா வரப் போகிறார்கள்; இன்னும் 3, 4 மணி நேரம்தான் இருக்கிறது; மழை இப்படிப் பெய்து கொண்டிருக்கிறது; 'லைட்' கூட கட்ட முடியவில்லை; மக்கள் எல்லாம் வீட்டில் இருந்து கிளம்பி வர வேண்டும்; தொடர்ந்து இப்படி மழை பெய்து கொண்டிருக்கிறதே" என்று இந்த வார்த்தைகளைத்தான் நான் சொன்னேன். ஏனென்றால் என்னைப் பொறுத்தவரை நான் இந்த அவையிலே முதன்முதலில் பேசுகிறேன். எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல நேரங்களில் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். நேர்மையான வார்த்தைகள், உண்மையான வார்த்தைகளைத் தவிர எதையும், எந்த நேரத்திலும் பேசக் கூடாது என்கிற உணர்வை ஏற்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உணர்வோடு சொல்கிறேன், இந்த அவைக்காகச் சொல்லவில்லை, அவை அலங்காரத்திற்காகச் சொல்லவில்லை. அதிலே 70 அல்லது 75 வயது மதிக்கத்தக்க பெரியவர், "என்ன தம்பி, நீங்கள் எந்த ஊர்?" என்று கேட்டார். "நாங்கள் திருவாரூர் மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறோம்" என்று சொன்னேன். "மழையைப் பற்றிப் பேசுகிறீர்களே!" என்று அவர் கேட்டதற்கு, அம்மா வருகிறார்களே! மழை பெய்து கொண்டிருக்கிறதே! என்று நான் இவ்வளவுதான் சொன்னேன். "அங்கே ஒரு தியேட்டர் இருக்கிறது பார்த்தீர்களா?" என்று கேட்டார். "ஆமாம்; அந்தத் தியேட்டருக்குப் பக்கத்திலேதான் நாங்கள் தங்கியிருக்கிறோம்" என்று சொன்னேன். அதற்கு அவர் சொன்னார், "அந்தத் தியேட்டரிலே எம்.ஜி.ஆர். படம் போட்டாலே மழை வரும்; (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அம்மாவே இந்த ஊருக்கு வருகிறார்கள்; அவர்கள் வரும்போது மழை வராமல் என்ன செய்யும்?" என்றார். ஏனென்றால் மக்களுடைய மனதிலே இருப்பவர் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

நாங்கள் வந்தவாசி தேர்தலில் தோற்றுப் போனதற்காகக் கவலைப்பட்டு, மூலையிலே போய் படுக்கவா செய்தோம்? அதற்கு எங்களுக்கு அவசியமில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்களை மக்கள் எந்த அளவிற்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. இரா. காமராஜ்] [2011 ஜூன் 9

அதனாலேதான் கூட்டணிக்கு *203* சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் மொத்தம் *146* சட்டமன்ற உறுப்பினர்களைக் கொடுத்திருக்கிறார்கள். அன்பிற்கினிய நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுடைய தலைவராக இன்றைக்கு வீற்றிருக்கின்றார்கள்.

உலகம் எல்லாம் இன்றைக்குப் பல்வேறு ஊழலைப் பற்றி, மெகா ஊழலைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு உலகத் தமிழர்களிடத்தில் மெகா ஊழல் தவிர வேறு எந்தப் பேச்சுமில்லை. மெகா ஊழல், ரூபாய் இரண்டு இலட்சம் கோடியாக இருக்குமா, மூன்று இலட்சம் கோடியாக இருக்குமா, அதற்கு மேலும் இருக்குமா, இல்லை அச்சடித்திருப்பார்களா என்கிற சந்தேகம் எல்லாம் வந்திருக்கிறது. இதை விட்டுவிட்டு அச்சுப் பிழையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அச்சடித்திருப்பார்களா என்கிற சந்தேகத்திற்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் திருவாரூர் சாலையிலிருந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள்! அவர் அச்சுப் பிழையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு “ர” கூடப் போய்விட்டதாம்! பேரறிஞரில் ஒரு “ர” கூடப் போய்விட்டதாம்! அங்கு “ரா” என்ன சொல்லப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அங்கே “RAW” டெல்லியில் என்ன சொல்லப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இவர்கள் ஒரு “ர” கூடப் போய்விட்டது என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படித்தான் முன்னுக்குப் பின் முரணான நடவடிக்கைகள் “ஆனைக்கு அர்ரம் என்று சொன்னால், குதிரைக்குக் குர்ரம்” என்கிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்று சொன்னால், கடந்த காலத்தில் ஆட்சியாளர்களால் மக்களுக்குப் பயனில்லை. திட்டங்கள் இல்லை. ‘தலையிலே தடவிப் பார்க்க முடி இல்லையாம், பெயர் சவுரிராஜ பெருமாளாம்’. தினந்தோறும் விழாக்கள். இராஜாக்கள் காலத்தில்கூட இல்லாத விழாக்கள் நடந்து கொண்டிருந்தன. நான் சொன்னேனே, திட்டங்களைப் பற்றிச் சொல்கிறபொழுது, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தால், முதலமைச்சராக வந்தால், திட்டங்கள் வரும், மக்களுக்குப் பயன் வரும் என்று மக்கள் நம்புகிறார்கள் என்று சொன்னேனே, அதை இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள்.



2011 ஜூன் 9] [திரு. இரா. காமராஜ்]

*முற்பகல் 11–00*

நான் ஒன்றை நினைவுப்படுத்த விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, *2004*–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் *26* ஆம் தேதி, எல்லோருக்கும் தெரியும், அது சுனாமி நாள். எங்களுக்குப் பக்கத்திலே நாகப்பட்டினம் உள்ளது. அந்த சுனாமி நாளில், நாகப்பட்டினத்திலே காலை *9-10* மணிக்கு சுனாமி வருகிறது. மக்களிடத்திலே நம்பிக்கைக்குரிய தலைவி என்று சொன்னேனே, அந்த நம்பிக்கையை எப்படி வைத்திருக்கிறார்கள் என்றால் *9-10* மணிக்கு நாகப்பட்டினத்திலே சுனாமி. *9-30* மணிக்கெல்லாம் எங்களுக்கு அம்மாவின் அலுவலகத்திலிருந்து தகவல் வருகிறது. அன்றைக்கு எங்களுடைய தாய், முதலமைச்சர் அம்மா அவர்கள் அலுவலகத்திலிருந்து எல்லோரும் நாகப்பட்டினத்தை நோக்கிச் செல்லுங்கள்; உடனே மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுங்கள் என்று தகவல் வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இருக்கிற எங்களுடைய இயக்கத்தவர்கள், கட்சியினுடைய பல்வேறு பொறுப்பில் இருக்கிறவர்களுக்கெல்லாம் அம்மா அலுவலகத்திலிருந்து தகவல் வருகிறது. நாங்கள் எல்லாம் நாகப்பட்டினத்தை நோக்கி, கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். அவர்கள் எல்லாம் மேற்கு நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். ஊரை காலி பண்ணிவிட்டு, நாகப்பட்டினத்தைக் காலி பண்ணிவிட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அண்ணா தி.மு.க.–காரர்கள், அண்ணா தி.மு.க.–வில் பொறுப்பில் இருக்கிறவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், நாங்கள் எல்லாம் நாகப்பட்டினத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். அங்கு போனால், அது ஒரு பெரிய கோரமான நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியைப்போல ஒரு நிகழ்ச்சியை வாழ்க்கையிலே அந்தப் பகுதியிலே இருக்கிற யாரும் பார்த்திருக்க முடியாது. தாய் மகனைத் தேடுகிறாள்; அப்பா பிள்ளையைத் தேடுகிறார்; பிள்ளைகள் எல்லாம் அம்மா, அப்பாவைத் தேடுகின்றனர்; கணவன் மனைவியைத் தேடுகிறான்; மனைவி கணவனைத் தேடுகிறாள். அந்த மாதிரி ஒரு கோரமான நிகழ்ச்சி. பிணங்களை அடுக்குவதற்கு இடமில்லாமல், அப்படியே ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவ்வளவு கோரமான நிகழ்ச்சி அது. அப்படியே சோகம் அப்பிக்கொண்டிருந்தது. முகத்திலெல்லாம் சோகம், அப்படியே மரத்துப்போய் இருப்பார்கள் என்று சொல்வார்களே, அதேமாதிரி மரத்துப்போய் நின்றார்கள். அங்கே இருக்கிற மனிதர்கள் எல்லாம் மரத்துப்போய் நின்றார்கள்.

அம்மா அன்றைக்கே, சுனாமி வந்த நாள் அன்றே, சென்னை, கடலூர், தூத்துக்குடி செல்கிறார்கள். நாகப்பட்டினத்துக்கு வருகிறபொழுது இரவாகி விடுகிறது; வரமுடியவில்லை. மறுநாள் காலையிலே வருகிறார்கள். மறுநாள் காலையிலே சுனாமி எச்சரிக்கை விடப்படுகிறது. “பரவாயில்லை; ராஜா திருமண மண்டபத்திற்குப் போங்கள்” என்று அம்மா அவர்கள் சொன்னார்கள். ஏனெனில், ராஜா திருமண மண்டபம்தான் முதலிலே மீனவர்களைச் சந்திக்கக்கூடிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடம்.

பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மண்டபத்திற்குச் செல்கிறார்கள். அப்படி நாங்கள் முதல் நாளிலிருந்து அந்த மக்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படியே மரத்துப்போய் நின்று கொண்டிருக்கிறார்கள். அம்மா வந்ததும், அப்படி மகிழ்ச்சியாகிவிட்டார்கள் என்று நான் சொல்ல வரவில்லை; அம்மா வந்ததும் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை வந்தது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ராஜா திருமண மண்டபத்திற்கு அம்மா வந்து இறங்கினார்கள். அம்மா வந்து இறங்குகிறபொழுது அவர்களிடத்திலே ஒரு நம்பிக்கை வந்தது. நமக்கு ஏதாவது செய்வார். இழக்கக் கூடாதவர்களையெல்லாம் இழந்துவிட்டோம்; வாழ்க்கையிலே அத்தனை சொத்துக்களையும் இழந்துவிட்டோம். ஆனால், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்காக ஏதாவது செய்வார்கள் என்கிற ஒரு நம்பிக்கை இருந்தது. அப்படியொரு நம்பிக்கைக்குரிய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; இலக்கணத்துக்குரிய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அன்றைக்கு முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், ஒரு தனியார் மருத்துவமனையிலே 4–ஆவது மாடியிலிருந்து 8–ஆவது மாடிக்குப் போய்விட்டாராம். 4–ஆவது மாடியிலே இருந்த படுக்கை, 8–ஆவது மாடிக்கு மாற்றப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள்.

அதனாலே, இலக்கணத்துக்குரிய தலைவராக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், நம்பிக்கைக்குரிய தலைவராக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், மேதகு ஆளுநர் உரையில் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 படிக்கின்ற மாணவர்கள், அரசுக் கல்லூரிகளில், அரசு உதவி பெறும் கல்லூரிகளிலே படிக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் இலவச மடிக்





கணினிகளை வழங்குகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதியே வழங்கப்படவிருக்கிறது. அதேமாதிரி, மிக்ஸி, கிரைண்டர். இது அல்லது அது அல்ல. மிக்ஸி, கிரைண்டர் இரண்டும். இதோடு சேர்த்து மின் விசிறியும் வழங்கப்படவிருக்கிறது. அரிசி பெறத் தகுதியுள்ள 1.83 கோடி குடும்பங்களுக்கு இவை கிடைக்கும் என்கிற ஒரு சிறப்பான செய்தி.

வேளாண்மையில் 11–ஆவது திட்டக் காலத்தில் 4 விழுக்காடு வளர்ச்சி என்ற குறிக்கோளை எட்டுவதற்குப் பதில், எதிர்மறை வளர்ச்சியாக 1.18 எனக் குறைந்துள்ளதால் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், 75 இலட்சம் சிறு, குறு விவசாயிகளின் வறுமையைப் போக்கவும், பண்ணைசார் சிறப்புத் திட்டம் உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பு. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, இதுவரை இல்லாத வரலாறாக, ஜூன் 6 ஆம் தேதி, காவிரி டெல்டா விவசாயிகள் பயன் பெறும் வகையில் மேட்டூர் அணையிலே தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* கடந்த ஆண்டு ஆடி பெருக்குக்குக்கூட தண்ணீர் வரவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, அதனாலே ஒரு விவசாயி குடும்பத்தில் பிறந்தவன், நானும் ஒரு விவசாயி என்கிற வகையில் ஒட்டுமொத்த விவசாயிகளின் சார்பில் அம்மா அவர்களின் பாதங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

தலைமைச் செயலகக் கட்டடத்தை மாற்றுவதைப்பற்றி திருவாரூர் வீதிகளிலே பேசிக்கொண்டிருக்கிறார். அதுதான் இன்றைக்கு மாற்றம் நடந்திருக்கிறதாம். வேறு எந்த மாற்றமும் நடக்கவில்லை. திருவாரூர் தெருவீதிகளில் உட்கார்ந்துகொண்டு தலைமைச் செயலகத்தை மாற்றியதுதான் மாற்றம் நடந்து இருக்கிறதாம். இவர்கள் பொழுதுபோக்குவதற்கும், இவர்கள் பார்வையிடுவதற்கும், யார் வீட்டுப் பணத்தில்? மக்கள் பணத்தில், மக்கள் வரிப் பணத்தில் இவர்களுக்காக ஒரு கட்டடம்; இவர்கள் பயன்பெறுவதற்காக, இவர்கள் குடும்பம் பயன்பெறுவதற்காக ஒரு கட்டடம்; அதை ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் தலைமைச் செயலகமாக ஏற்றுக்கொள்ள முடியுமா?

*முற்பகல் 11–05*

மாற்றம் என்று சொல்கிறார்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அன்றைக்கு பிளஸ் 1,

பிளஸ் 2 படிக்கின்ற அத்தனை பேருக்கும் சைக்கிள் வழங்கினார்கள். சைக்கிள் வழங்கிய அம்மா அவர்களைப் பற்றி அந்த ஏழைப் பெண்கள் இன்றைக்கும் பேசிக்கொள்கிறார்கள், எங்கள் அம்மா கொடுத்த சைக்கிள், எங்கள் அம்மா கொடுத்த சைக்கிள், எங்கள் அம்மா கொடுத்த சைக்கிள் என்று அத்தனை பேரும் பேசிக்கொள்கிறார்கள். அதை நீங்கள் மாற்ற முடியாது. அந்தத் திட்டத்தை மாற்ற முடியாது. அதிலே என்ன மாற்றினார்கள். கலர் மாற்றினார்கள். பெயின்டை மாற்றினார்கள்; சைக்கிளின் பெயின்டை மாற்றினார்கள். நாங்கள் சிறு வயதிலிருந்து சைக்கிளைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். அந்த மாதிரி கலரை பார்த்ததில்லை சைக்கிளுக்கு. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த அவையின்மூலம் கேட்டுக்கொள்வதெல்லாம், சைக்கிளுக்கு சைக்கிள் கலர் அடிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவையின்மூலம் என்னுடைய கோரிக்கையாக வைக்கின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் மின்சாரம் இல்லாத ஒன்றாகப் போய்விட்டது. மின் கம்பிகள் எல்லாம் இப்போது தொங்கிக்கொண்டிருக்கின்றன. மின்சாரமே இல்லை. இதனை ஈடுசெய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு மின் வழங்கிகளைத் தனித் தனியாக அமைத்து மின்சாரம் வழங்கவும், தரத்தினை மேம்படுத்தவும், காற்றாலை மின் உற்பத்திக்குக் கைகொடுக்கவும், மரபுசாரா எரிசக்தி மூலம் மின் உற்பத்தி செய்ய தனியாக ஒரு கொள்கை வகுக்கவும் ஆளுநர் உரை வகை செய்கிறது. பொது நலனைக் கருத்தில்கொண்டு, உள்ளூர் கேபிள் டிவி. ஆபரேட்டர்களைப் பாதிக்காத வகையில், அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தைப் புதுப்பித்து செயல்பாட்டிற்குக் கொண்டுவருவது, ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட அனைத்து கிராமங்களுக்கும் தார்ச் சாலை அமைப்பது போன்ற திட்டங்களை எல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கவர்னர் உரையில் அறிவித்திருக்கிறார்கள். கவர்னர் உரையிலே அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த அவையின்மூலம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வீடுகட்டும் திட்டம்; இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1,80,000 ரூபாயில் வீடுகட்டும் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் 75,000 ரூபாயில்





வீடு கட்டுவது என்ற, அந்த 75,000 ரூபாயில் வீடு கட்டும் திட்டத்தில், 3 இலட்சம் பேருக்கு முதலிலே உத்தரவு கொடுத்துவிட்டார்கள். 18 இலட்சம் பேருக்கு ஒரே நாளில் எங்குப் பார்த்தாலும் அட்டையைக் கொடுத்தார்களாம். நான் அந்த அட்டை கொடுக்கின்ற நிகழ்ச்சியின்போது திருவாரூரிலே கட்சிக்காரர் ஒருவர் இறந்துவிட்ட துக்கத்திற்குப் போவதற்காக மாலை வாங்குவதற்காக மாலைக் கடையில் நின்றிருந்தேன். நிறைய பேர் மற்றும் சகோதரிகள் எல்லாம் வந்துகொண்டிருந்தார்கள். கூட்டமாக வருவது எதற்கு என்று தெரியவில்லை. அன்று காலைப் பத்திரிகையிலே பார்த்த அந்த நிகழ்ச்சி அங்கு இருப்பது தெரிய வந்தது. ஆளுக்கொரு அட்டையைக் கையில் கொண்டுவந்தார்கள். அப்படி அவர்கள் அட்டையைக் கையில் கொண்டுவந்தபோது, ஒரு அம்மாவிடம் என்ன இது என்று கேட்டேன். அந்த அம்மா வீடு கட்டிக்கொடுக்கப் போகிறோம் என்று சொல்லி அதற்காக இந்த அட்டையைக் கொடுத்தார்கள் என்று ஒரு அட்டையைக் காண்பித்தார். நான் வாங்கிப் பார்த்தேன். இதிலே ஒருவர் சிலேட் வைத்திருந்தார். அந்த சிலேட்டில் 101 என்று எண் போடப்பட்டிருந்தது. “என்னம்மா? 2016 என்று நம்பர் போட்டிருக்கிறதே, ஏன்?” என்று கேட்டதற்கு, அந்த அம்மா அடுத்த நிமிடம் பதில் சொன்னார்கள். “2016-இல் நான் இருக்கப் போகிறேனோ, அவர் இருக்கப் போகிறாரோ தெரியவில்லை; இப்போது இந்த அட்டையைக் கையில் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள்” என்கிற செய்தியை அந்த அம்மா சொன்னார். இதில் மிகப் பெரிய மோசடி நடந்திருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் இதிலே ஒரு விசாரணை வைத்திட வேண்டும் என்கின்ற வேண்டுகோளையும் வைக்கின்றேன். 18 இலட்சம் பேருக்கு அட்டை கொடுப்பதற்கு, பொய்யான தகவலைக் கொடுப்பதற்கு, பொய்யான திட்டத்தைக் கொடுப்பதற்கு மிகப் பெரிய பணத்தைச் செலவு செய்திருக்கிறார்கள். எங்குப் பார்த்தாலும் அட்டை கொடுப்பதற்கு, தயார் செய்வதற்கு அங்கு இருக்கின்ற அதிகாரிகளைப் பயன்படுத்தி, பேருந்துகளைப் பயன்படுத்தி, அரசு இயந்திரங்களைப் பயன்படுத்தி மிகப் பெரிய மோசடி செய்திருக்கிறார்கள். இந்த மோசடி குறித்து ஒரு விசாரணை செய்யவேண்டும் என்கின்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே வைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. இரா. காமராஜ்:** என்னுடைய தொகுதியினுடைய தேவைகள். எங்களுடைய நன்னிலம் தொகுதியைப் பொறுத்தவரை, சாதாரண விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள் வாழ்கின்ற பகுதி. அந்தப் பகுதிக்குப் பல்வேறு தேவைகள் இருக்கின்றன. அந்தத் தேவைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன். அந்தப் பகுதி விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற பகுதி. ஆற்றிலே தண்ணீர் வரவில்லை என்று சொன்னால் சோற்றுக்கு வழியில்லை என்கிற பகுதி.

நன்னிலம் சட்டப் பேரவைத் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்கின்ற வேண்டுகோளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய பாதங்களிலே வைக்கின்றேன். கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் சாலைகள், குடிநீர் வசதி சீர்கெட்டுள்ளன. எனவே, மண் சாலைகளைக் கப்பிச் சாலைகளாகவும், கப்பிச் சாலைகளைத் தார்ச் சாலைகளாகவும் அமைத்துத் தரவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்துத் தரவும் இந்த அவையின் மூலம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளை வைக்கின்றேன்.

வேலங்குடி ஊராட்சியில், வடகரை ஆலத்தூரையும், தென்கரை ஆலத்தூரையும் இணைக்க வெட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டித் தர வேண்டும். குடவாசல் ஒன்றியம், கடலங்குடி ஊராட்சி, வள்ளலார் கோயில்பத்து, கோணாச்சேரி, திருப்பாம்பரம், களஞ்சூர் சாலையில் நூலாற்றின் குறுக்கே ஓர் இணைப்புப் பாலம் கட்டித் தர வேண்டும். விருப்பாச்சிபுரம் ஊராட்சி, பாதிரிபுரத்தில் 500 பெண்கள் பணிபுரிந்த நூற்பாலை தற்போது செயல்படாமல் உள்ளது. அதை மீண்டும் இயங்கச் செய்ய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

வலங்கைமான் பேரூராட்சிக்கு இதுவரை பேருந்து நிலையம் கிடையாது. எனவே, வணிக வளாகத்துடன்கூடிய பேருந்து நிலையம், மக்கள் நெருக்கடியால் அவதிப்படுகின்ற கடைத்தெருவிற்கு மாற்றுப் பாதை ஆகியவை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. அதையும் நிறைவேற்ற வேண்டுகிறேன்.





முற்பகல் 11–10

மயிலாடுதுறை, திருவாரூர் சாலையில் நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேரளத்தில் இரயில் பாதையைக் கடப்பதற்கு ஒரு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுகிறேன். அதேபோல் நீண்டதூரம் செல்ல வேண்டியிருக்கிற மாணவர்களுக்காக ஒரு அரசுக் கலைக் கல்லூரியையும் அமைத்துத் தரவும் வேண்டுகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ், எழுதிக் கொடுத்துவிடுங்கள். அடுத்து திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் இதய தெய்வம், தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத் தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களின் வழியில் 30 ஆண்டுக் காலம் பணியாற்றிய சாதாரண, சாமான்யனான ஏழை நெசவுத் தொழில் செய்யும் குடும்பத்தில் பிறந்த என்னை, புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் ரசிகர் மன்றத்தின் மாவட்டத் தலைவராகவும், மாநில அமைப்புச் செயலாளராகவும், தேசிய முற்போக்குத் திராவிடக் கழகம் என்கின்ற கட்சியைத் துவக்கியவுடன் என்னை ஈரோடு மாவட்டத் தலைவராகவும், தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளராகவும் எனப் பல்வேறு கட்சிப் பதவிகளை எனக்கு அளித்து என்னை அழகுபார்த்த என் இதய தெய்வம் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்கள் தற்போது ஈரோடு கிழக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தின் சட்டமன்றப் பேரவைக் கொறடாவாகவும், தமிழகச் சட்டமன்றப் பேரவையில் தன் அருகிலேயே என்னை அமரவைத்து அழகு பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கின்ற என் இதய தெய்வம், என் குடும்பத் தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை அவரது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்டு, தேர்தல் பிரச்சாரம் செய்த எனது குடும்பத்தின் குல விளக்கு எனது பாசமிகு அண்ணி திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய வெற்றிக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியினைத்

தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினுடைய அனைத்து நிருவாகிகள், தொண்டர்களுக்கும் அதன் கூட்டணியில் உள்ள தோழமைக் கட்சியினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் பிறந்து வளர்ந்து மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து அத்தொகுதி மக்களில் ஒருவனாக இருந்த எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்து, இப்பேரவைக்கு அனுப்பி வைத்த ஈரோடு கிழக்குத் தொகுதி பொதுமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

தமிழ்நாட்டில் 2005–ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தைப் பார்த்து, "தமிழ்நாட்டில் 70 கட்சிகள் உள்ளன; இது 71–ஆவது கட்சி" என்றும், "2011 சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, இந்தக் கட்சியே இருக்காது" என்றும், கடந்த ஆட்சியாளர்கள் பிதற்றினார்கள்; கொக்கரித்தார்கள். ஆனால், தமிழக மக்கள் கொடுத்த தீர்ப்போ, தேசிய முற்போக்குத் திராவிடக் கழகம் 71–ஆவது கட்சியல்ல; இன்று தமிழகச் சட்டமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சி என்று அங்கீகாரம் அளித்துள்ளார்கள். எங்கள் கழகத் தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை இன்று எதிர்க்கட்சி வரிசையிலே முதலாவது கட்சியாக அமர வைத்து தமிழக மக்கள் அழகு பார்க்கிறார்கள். ஆனால், 71–ஆவது கட்சி என்று சொன்னவர்களையும், அந்தக் கட்சியே இருக்காது என்று சொன்னவர்களையும் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சியாக வருவதற்குக்கூட தகுதி இல்லை என்று சொல்லி, தமிழக மக்கள் தீர்ப்பைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தமிழக மக்களுக்கு நான் சார்ந்திருக்கின்ற தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தின் சார்பில் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இப்பேரவையில் எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மீண்டும் உயிர்பெற்றுச் செயல்பாட்டுக்கு வரும் என்றும், உள்ளூர் கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் பாதிக்காத வகையில் தனியார் கேபிள் டி.வி.



அரசுடைமையாக்கப்படும் என்றும் கடைக்கோடியில் உள்ள உள்ளூர் கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும், இந்திய சுதந்திர காலத்திற்குப் பிறகு ஜூன் 6-ஆம் தேதியே பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது என்றும், இதுபோன்ற சரித்திர முக்கியத்துவம் பெற்ற திட்டங்கள் ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளன. அவற்றை நான் வரவேற்கின்றேன். "இயன்றதைச் செய்வோம் இல்லாதவர்க்கே" என்ற எங்கள் தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டனின் கொள்கை முழக்கத்தைச் செயலாற்றும் வகையில், இந்தக் கன்னிப் பேச்சிலே என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட சில கோரிக்கைகளைத் தெரிவிக்கின்றேன்.

பல ஆண்டுக் காலமாக ஈரோடுவாழ் பொதுமக்களின் கோரிக்கையான மேட்டூரிலிருந்து 65 கிலோ மீட்டர் தூரமுள்ள ஈரோட்டிற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். அதன்மூலம் அந்தியூர், எடப்பாடி, பவானி, சங்ககிரி, குமாரபாளையம், ஈரோடு மேற்கு, ஈரோடு கிழக்கு, மொடக்குறிச்சி ஆகிய தொகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவை பெரிய அளவில் பயன்பெறும். மேலும், ஈரோட்டிலிருந்து திருப்பூருக்குக் குழாய்மூலம் குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது. அந்தத் திட்டத்திற்கும் இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதன்மூலம் பயன்பெறுகின்ற பெரும்பாலான தொகுதிகள், அமைச்சர் பெருமக்களின் தொகுதிகள். எனவே, இந்தத் திட்டத்தைக் கனிவுடன் பரிசீலித்துச் செயல்படுத்த வேண்டுகிறேன்.

*முற்பகல் 11–15*

ஈரோடு கிழக்குத் தொகுதியின் பிரதான தொழில் ஜவுளி ஆகும். அகில இந்திய அளவிலும், உலக அளவிலும் பிரசித்திப்பெற்ற ஜவுளிச் சந்தை ஈரோட்டில் உள்ளது. ஆனால், இன்று அந்த ஜவுளித் தொழில் நசிந்துபோய் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதற்கு முதல் காரணம் நூல் விலை உயர்வு ஆகும். நூல் உற்பத்திக்குத் தேவையான பஞ்சு பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. ஆனால், அதை வாங்கி விற்கின்ற இடைத் தரகர்போல் செயல்படுகின்ற on line வர்த்தகம் செய்பவர்கள், பஞ்சு விலையை உயர்த்தி கொள்ளை இலாபம் அடைகிறார்கள். அதனால் தங்கத்தின் விலை உயர்வது போன்று தினந்தோறும் நூல் விலை உயர்ந்து கொண்டிருப்பதால், ஜவுளித்

தொழில் செய்ய முடியாமல் வியாபாரிகள் முடங்கிப் போயுள்ளனர். எனவே, அரசு நேரடியாகத் தலையிட்டு நூல் விலையைக் குறைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜவுளி சார்ந்துள்ள தொழில்களான சாயத் தொழில், பிளீச்சிங் தொழில், விசைத்தறித் தொழில் மற்றும் பிற தொழில்களான தோல் தொழில்கள் என அனைத்தும் ஈரோட்டிலே நடைபெற்று வருகின்றன. அவை மாசுக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்ற காரணத்தினாலே, தற்போது அந்தத் தொழில்கள் செய்ய இயலாத அளவிற்குக் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒட்டுமொத்த ஈரோட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கானோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். எனவே, இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, கழிவு நீரைக் கடலில் கொண்டு சேர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

ஜவுளித் தொழிலை மேம்படுத்த வெளிநாடுகளுக்கு ஜவுளியை ஏற்றுமதி செய்திட நேரடி ஜவுளி ஏற்றுமதி மையமும், ஜவுளி விற்பனை செய்திட ஜவுளி வர்த்தக மையமும், ஈரோட்டில் அமைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த ஆட்சியாளர்களுடைய நிருவாகத்தினாலே மூடப்படும் நிலையில் உள்ளன, கைத்தறி நெசவாளர்கள் மாற்றுத் தொழில் செய்யக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, கைத்தறித் தொழிலை இந்த அரசு பாதுகாக்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது ரூ. 400 மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. முதியோர்களுக்கும், மீனவர்களுக்கும் உதவித் தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்தி வழங்கியதுபோல, இதையும் உயர்த்தி ரூ. 1,000/– ஆக வழங்க நடவடிக்கை எடுத்து, ஓய்வுபெற்ற கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ. 1,000/– ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு கிழக்குத் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கக்கூடிய வகையில், ஈரோட்டையும், நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தையும் இணைக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே இன்னொரு பாலம் உடனடியாகக் கட்டப்பட வேண்டும். ஏனெனில், ஈரோட்டிலிருந்து சென்னை உட்பட அனைத்து வட மாவட்டங்களுக்கும் செல்வதற்குத் தற்போது உள்ள பாலத்தின் வழியாகத்தான் செல்ல முடியும். அது, சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளதால் தற்போது உள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கக்கூடிய வகையில் புதிய பாலம் தேவைப்படுகிறது. இது சம்பந்தமாக இப்போதைய, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆட்சியின்போது சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே பல முறை கோரிக்கை விடுத்தும் ஆட்சியாளர்கள் அவருடைய கருத்துக்குச் செவிசாய்க்கவில்லை.





ஈரோடு கிழக்குத் தொகுதி, நகர்ப்புறத்தில் அமைந்துள்ளது. அந்த நகரங்கள் அனைத்தும் மிகுந்த நெரிசலுடன் உள்ளன. அதைக் குறைக்கும் வகையில் ஈரோட்டைச் சுற்றி 20 ஆண்டுக் காலமாக முடிவடையாமல் உள்ள ring road என்னும் சுற்றுச் சாலைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அந்தச் சுற்றுச் சாலை வருவது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சருடைய தொகுதி என்றாலுங்கூட, அந்தச் சாலைத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது ஈரோட்டினுடைய போக்குவரத்து நெரிசல் குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

ஈரோட்டில் பிரதானமாக உள்ள மூன்று சாலைகள், பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளன. அதில் அரசு நேரடியாகத் தலையிட்டு, அந்தச் சாலைகளைப் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

ஈரோடு அரசு மருத்துவமனை அருகில் மேம்பாலம் கட்டும் பணியைத் துவக்க வேண்டும் எனவும், ஈரோட்டில் புறநகர்ப் பகுதியில் கூடுதல் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் பழுதடைந்துள்ளன. அவற்றைப் பழுதுபார்க்க, பராமரிக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டும். ஏனெனில் சில ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்து விழுந்ததில் பல பேர் உயிர் இழந்த துயரச் சம்பவம் நடந்தது. அதுபோல்

மீண்டும் ஒரு துயரச் சம்பவம் நடந்துவிடக் கூடாது என்பதற்காகவே இந்தக் கோரிக்கையை வைக்கின்றேன்.

தமிழ்நாட்டில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச பேருந்து pass–ஐ இந்த அரசு வழங்கி வருகிறது. அதன் காரணமாக காலை 7–30 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 5–30 மணி வரையிலும் பேருந்துகளில் கடும் நெரிசல் ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக ஒன்றாம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு, 6–ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகள் புத்தகப் பையைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு பேருந்தில் ஏறி நெரிசலில் சிக்கித் தவிக்கிறார்கள். இதனால் குறிப்பிட்ட நேரத்திற்குள் பள்ளிக்குச் செல்ல முடியாமல் குழந்தைகள் தவிக்கின்றனர். எனவே காலை, மாலை என இரு வேளைகளிலும் சிறப்புப் பேருந்துகளை இயக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

2006–ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் எப்படி அராஜகமாகவும், அக்கிரமமாகவும் நடந்தது என்பது அனைவருக்கும் நன்கு தெரியும். தோற்றவர்கள் வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டார்கள். வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்களாக அறிவிக்கப்பட்டார்கள். அதன் காரணமாக, அன்று எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த பல கட்சிகள் உள்ளாட்சி இடைத் தேர்தலில் போட்டியிடாமல் புறக்கணித்த வரலாறு யாரும் மறக்க இயலாது. அப்படி உள்ளாட்சி அமைப்புகளைக் கைப்பற்றியவர்களால் இன்று உள்ளாட்சி அமைப்புகள் கேலிக் கூத்தாக்கப்பட்டு மிக மோசமான நிருவாகச் சீர்கேட்டால் சிக்கித் தவித்துக் கொண்டுள்ளன. பல இடங்களில் உள்ளாட்சிகளில் பணியாற்றுபவர்களுக்குக் கடன் பெற்று சம்பளம் வழங்கும் நிலையில் நிதி ஆதாரம் உள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு பணியைச் செய்வதற்கு முதலில் ஒரு தொகையை ஒதுக்குவதும், பின்பு அதை இரட்டிப்பாக்குவதும், அந்தப் பணி முடிகின்றபோது மூன்று மடங்காகத் தொகையைச் செலவு செய்வதும் என இதுபோன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெற்றுள்ளன. இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—20

தமிழ்நாடு முழுவதும் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தி உள்ளனர். ஆனால் அதிலும் மிகப் பெரிய ஊழல்



நடந்துள்ளது. மிகப் பெரிய அதிகார மையம் அதில் தலையிட்டு உள்ளது. அந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் மிகவும் மோசமான நிலையில் நடைபெறுகிறது. 18 இஞ்ச் அளவுள்ள குழாயைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இன்று 8 இஞ்ச் அளவுள்ள குழாய்கள் பதிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல், அந்தக் குழாய்கள் தரமற்றதாகவும் உள்ளன. எனவே, இதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியிலே கிராமங்களுக்கு மினி பஸ் போக்குவரத்து என்று சொல்லி, மோசடியாக ஒரு திட்டத்தை அறிவித்து, முழுக்க முழுக்க கடந்த ஆட்சியில் ஆளும் கட்சியில் இருந்தவர்கள் மினி பஸ் பெர்மிட்டுகளைப் பெற்று, குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்த பெர்மிட்டுகளை நகர்ப்புறத்திற்கும் செல்வதுபோன்ற மாற்றத்தை ஏற்படுத்தி, அதன்படி மினி பஸ் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன்மூலம் அரசுக்கு, நகரப் பேருந்துகள்மூலம் வரவேண்டிய வருவாயில் மிகப் பெரிய அளவிலே இழப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இதை வரன்முறைப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் முந்தைய ஆட்சியில் மழைநீர் சேகரிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கடந்த ஆட்சியில் அந்தத் திட்டம் இருக்கிறதா என்பதுகூட தெரியவில்லை. எனவே, மீண்டும் மாண்புமிகு முதல்வராக வந்திருக்கின்ற தாங்கள், மழைநீர் சேகரிப்புத் திட்டத்தையும் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எங்கெல்லாம் மினி பேருந்துகள் வழித் தடம் மாறிச் செல்கின்றனவோ, அந்தப் பேருந்துகள்மீது உரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மழைநீர் சேகரிப்புத் திட்டத்திற்கு ஆதாரமாக மரங்களை வளர்க்கும் திட்டத்தையும் செயல்படுத்த

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2011 ஜூன் 9

வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், தற்போது தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக அமைக்கப்பட்டபோது, சாலையின் இருபுறங்களிலும் இருந்த மரங்களெல்லாம் வெட்டப்பட்டுவிட்டன. அதன் காரணமாக, பல இடங்களிலே மழை பொய்த்துப்போய் உள்ளது. அதனால், தமிழ்நாடு முழுவதும் உள்ள சாலைகளில் மரம் வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்தினால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் முந்தைய ஆட்சியில் லாட்டரி மாஃபியாக்களை ஒழிக்கும் நோக்கத்தோடு தமிழகத்தில் லாட்டரி சீட்டுக்களே விற்கக்கூடாது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தலையை அறிவித்தீர்கள். ஆனால், கடந்த ஆட்சியில் லாட்டரி மாஃபியாக்களோடு சேர்ந்துகொண்டு, தமிழ்நாட்டில் திருட்டு லாட்டரியை சர்வ சாதாரணமாக விற்பனை செய்துகொண்டு வந்தார்கள். ஆனால், ஆட்சி மாறி, காட்சி மாறிய பிறகும், இன்னும் அதே மாஃபியாக்கள் திருட்டு லாட்டரித் தொழிலைச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால், தமிழகத்தில் பல குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுடைய நிலையை எட்டியுள்ளார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டிலிருந்து லாட்டரி மாஃபியாக்களை ஒழித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, இறுதியாக ஒரே ஒரு கருத்தைமட்டும் பதிவு செய்து அமர்கிறேன்.

எங்களுடைய தானைத் தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்கள், சினிமாவிலே 25 ஆண்டுக் காலம் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்திலே கட்டிய திருமண மண்டபத்தை முந்தைய ஆட்சியாளர்கள் தங்களுடைய சுய நலத்திற்காக, புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக, அந்த மாபெரும் மண்டபத்தை இடித்துத் தள்ளினார்கள். இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களெல்லாம் அந்தப் பகுதிக்கு வந்து பார்த்தால் தெரியும். அங்கே எங்களுடைய மண்டபத்தை இடித்துவிட்டு கட்டப்பட்டிருக்கின்ற பாலம், எந்த வாகனமும் செல்வதற்குத் தகுதியில்லாமல் இருக்கிறது. அப்படிப் பழிவாங்கப்பட்ட எங்கள் தலைவர், புரட்சிக் கலைஞர் அவர்கள் இன்றைக்கு இந்த மாமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்திருக்கின்றார். ஆனால், அப்படிப் பழி வாங்கியவர்கள் இன்றைக்கு இந்த சபைக்குக்கூட வருவதற்கு அருகதையில்லாமல்



2011 ஜூன் 9] [திரு. வி.சி. சந்திரகுமார்]

வெளியே நின்றுகொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று தெரிவித்துக்கொண்டு ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் இந்த மாமன்றத்திலே வைக்கின்றேன்.

இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை அலுவலகமாக இருக்கின்ற அறிவாலயத்தின் முன்புள்ள பூங்கா, பூங்காவாக இருக்க வேண்டுமென்ற சட்டத்திலே இருப்பதாக அறிகிறேன். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை நேரடியாகக் கண்காணித்து, அந்தப் பூங்காவை, தமிழக மக்கள் செயல்பாட்டிற்கு, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கேட்டு, எனக்கு இப்பேரவையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் இதய தெய்வம் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கும், ஈரோடு கிழக்குத் தொகுதி மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்தப் பேரவைக்கு உவந்தளித்த பேருரையின்பேரிலே நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிகின்ற வாய்ப்பைத் தந்த உங்களுக்கு எங்கள் இயக்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பதினான்காவது சட்டமன்றப் பேரவையில் நான் விவாதத்திலே பங்கேற்கின்ற முதல் உரை என்பதனாலே தனிப்பட்ட வகையிலே என் கருத்துக்கள் சிலவற்றை, என் நன்றியினை இங்கே நான் முதலிலே பதிவு செய்யவேண்டுமென்று விரும்புகிறேன்.

*முற்பகல் 11–25*

வணக்கத்திற்குரிய முதலமைச்சர் அம்மா அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தின் தொடக்கத்தில், ஒரு எளிய குடும்பத்தில், ஒடுக்கப்பட்ட குடும்பத்தில் பிறந்த என்னைத் தற்காலிகத் தலைவராக, இந்த மாமன்றத்தின் உயரிய இருக்கையிலே

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஜூன் 9

உட்கார வைத்த அந்தச் சிறப்புக்கு நான் என்றென்றும் நன்றிக் கடன்பட்டவன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக, இந்த இருக்கை இருக்கிறதே, பேரவைத் தலைவர் தேர்தலின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, இந்த இருக்கை ஒடுக்கப்பட்ட மக்களின் மிகப் பெரிய தலைவராக விளங்கிய, தலித் சமுதாயத்திலே தோன்றிய பாபா சாகேப் அம்பேத்கரின் நெருங்கிய நண்பராக விளங்கிய பெரியவர் திரு. ஜெ. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் 9 ஆண்டுக்காலம் இந்தச் சட்டப் பேரவைத் தலைவராக அமர்ந்திருந்த இருக்கை. தலித் சமுதாய வரலாற்றிலே பெரியவர் சிவசண்முகம் பிள்ளை அவர்களுடைய அந்தச் சிறப்புகள், அவர் ஆற்றிய பணிகள், இந்தச் சமூக வளர்ச்சிக்காக அவர் உழைத்த அந்தப் பாங்கு, தலித் சமுதாயப் பக்கங்களிலே எப்போதும் தனி இடம் பெற்றிருக்கிற அளவிற்கு, ஒரு மிகப் பெரிய வரலாறு. சுதந்திரத்திற்கு முன்பும், சுதந்திரத்திற்குப் பின்பும் தொடர்ந்து 9 ஆண்டுக் காலம் இருந்து, இன்றைக்கு இந்தச் சட்டப் பேரவையிலே பின்பற்றப்படுகிற பல மரபுகளை, பல விதிகளை உருவாக்கிய பெருமை படைத்தவர், தலித் சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர் சிவசண்முகம் பிள்ளை அவர்கள். அவர் அமர்ந்திருந்த அந்த இருக்கையிலே, அவர் வழியிலே இருக்கிற ஓர் இயக்கத்தின் பிரதிநிதியான நான், சில நாட்கள் என்றாலும் உட்காருகிற அந்த மிகப் பெரிய பேற்றைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்கு உருவாக்கித் தந்தார்கள் என்கிறபோது, நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்; புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வை பட்டால், சாமானியர்கள்கூட சரித்திரம் ஆகிவிடுவார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பேராற்றலும், பெருந்தன்மையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சேரும்; அந்தப் பண்பு அவர்களுக்குத்தான் உண்டு; அந்தப் பேராற்றல், அந்தப் பெருந்தன்மை ஒரு சாமானியனைக்கூட சரித்திரம் ஆக்கிவிடுகிற அப்படிப்பட்ட அந்தத் துணிவு அவர்களுக்குத்தான் உண்டு; அந்த வகையிலே தனிப்பட்ட வகையிலேயும் என்னுடைய நன்றியை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அடுத்ததாக, என்னை வெற்றியடையச் செய்த கீழ்வழித்துணையாங்குப்பம்—கே.வி. குப்பம்—என்று சொல்லப்படுகிற ஒரு புதிய சட்டமன்றத் தொகுதியான என்னுடைய தொகுதி மக்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அதன் தோழமைக் கட்சிகள் உள்ளிட்ட அனைவருக்கும், வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த மன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.



2011 ஜூன் 9] [முனைவர் செ.கு. தமிழரசன்]

இந்த ஆளுநர் உரை, ஒரு மிகச் சிறப்பான உரை. கிராமங்களிலே சொல்வார்கள், “ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்று சொல்வார்கள். படித்தவர்கள் சொல்வார்கள், “ஒரு நல்ல நூலுக்கு அதன் முன்னுரையே போதும்” என்று. அந்த முன்னுரையை வைத்துக்கொண்டே, அந்த நூலின் தொகுப்பை நாம் சொல்லிவிடலாம் என்று. ஆக, இந்த மாமன்றப் பேரவைக் கூட்டத்தொடரின் முதல் நாளிலே ஆளுநர் அவர்கள் உவந்தளித்திருக்கிற இந்த உரை, அவர்களுடைய உரை என்றாலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருங்காலங்களிலே ஆற்றப்போகிற செயல்களின் வடிவமாக, சுருக்கமாக அந்த உரை அப்படிப்பட்ட மரபிலே இங்கே நிகழ்த்தப்பட்டது என்பதனாலே, அந்த முன்னுரையே “ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்பதைப்போல வருங்கால வளமான தமிழகத்தின் நல்லாட்சிக்கு ஒரு சோறு பதம் என்கிற வகையிலே இது ஒரு மிகச் சிறப்பான உரையாக அமைந்திருக்கிறது என்பதனாலே நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இயக்கத்தின் சார்பாகப் பாராட்டுகிறேன்.

மணிமேகலையினுடைய அட்சயப் பாத்திரத்தை “அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரம்” என்று சொல்வார்கள். எவ்வளவுதான் அந்த அட்சயப் பாத்திரத்திலேயிருந்து யார் வந்து சாப்பிட்டாலும், அந்த அட்சயப் பாத்திரத்தினுடைய உணவு குறையவே குறையாது. அது அட்சயப் பாத்திரம்; அது அள்ள அள்ளக் குறையாதது. அதைப்போல, இந்த ஆளுநர் உரை தமிழக மக்களுக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிற ஓர் அட்சயப் பாத்திரமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அள்ள அள்ளக் குறையாத, எவ்வளவு பருகினாலும் திகட்டாத, அப்படிப்பட்டதொரு மாமருந்தாக இந்த அட்சயப் பாத்திரம் இருக்கிறது என்பதனாலே மிகவும் சுருக்கமாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையைப் பற்றி விமர்சனமாக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்திலே

பேசுகிறபோது, இந்த ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது, எழுத்துப் பிழை இருக்கிறது, அச்சுப் பிழை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். நான் ஒரு பழமொழியை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

முற்பகல் *11–30*

விமர்சனம் என்பது நான்கு வகைப்பட்டது. முதல் தர விமர்சகர்கள், கருத்துகளை விமர்சிப்பார்கள். இரண்டாம் தர விமர்சகர்கள், நிகழ்ச்சிகளை விமர்சிப்பார்கள்; சம்பவங்களை விமர்சிப்பார்கள். மூன்றாம் தர விமர்சகர்கள், தனி நபர்களை விமர்சிப்பார்கள். நான்காம் தரம் என்று நாம் சொல்லுவோமே, அந்த நான்காம் தர விமர்சகர்களுக்கு ஒன்றும் தேவையில்லை, காழ்ப்புணர்ச்சி போதும்.

காழ்ப்புணர்ச்சி கொண்டு, அந்தத் தரத்திலே விமர்சிப்பார்கள். ஆக இந்த விமர்சனம் என்பது முதல் தரமாகவும் இல்லை. இரண்டாம் தரமாகவும் இல்லை. மூன்றாம் தரமாகவும் இல்லை. அது நான்காம் தரத்திற்கும் கீழே போயிருக்கிறது. இந்த உரையிலே என்ன இருக்கிறது? அச்சுப் பிழை இருக்கிறது; சந்திப் பிழை இருக்கிறது; சாரிப் பிழை, எழுத்துப் பிழை இருக்கிறது என்றுதான் அவரால் சொல்ல முடிந்திருக்கிறதே தவிர, இதில் சொல்லப்பட்ட திட்டங்களை, நலத் திட்டங்களை இந்த அரசின் கொள்கைகளை இந்த அரசு முன் வைத்திருக்கிற, ஆற்ற வேண்டிய கடமைகளை, இதிலே குறை இருக்கிறது; இதிலே மாறுபட்ட கருத்து இருக்கிறது என்று அவரால் சொல்ல முடிந்திருக்கிறதா? 'பேரறிஞர்' என்பதில், 'ர'கத்திற்கு கால் அதிகமாகப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். இன்னொரு இடத்திலே அவர் சொல்லுகிறார், 'ம்' என்று ஒரு எழுத்து. அந்த எழுத்துகூட தவறான எழுத்து அல்ல. "ஏற்கெனவே பேரறிஞர் அண்ணா வழியிலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியிலே இந்த அரசு ஏழையெளிய மக்களுக்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது; அதைத் தொடர்ந்து வருகிற இந்த அரசும்" என்று 'ம்' போட்டதற்கு, இதில் பழைய அரசைக் குறிப்பிட்டபோது, எங்களுடைய அரசையும் குறிப்பிடுகிறது என்று விளக்கம் சொல்லுகிறார். மாண்புமிகு மறைந்த நாவலர் அவர்கள் நிதியமைச்சராக இருந்தபோது, இந்த அவையிலே ஒரு முறை சொன்னார்: "எங்கள் கொள்கையை உங்களால் குறை சொல்ல முடியவில்லையென்றால், இதை அச்சிட்டது சரியில்லை; தாள் சரியில்லை என்றாவது இப்படிப்பட்ட குறைகளைச் சொல்லுங்களேன்!" என்று ஏகடியமாகச் சொன்னார். அதைப்போல, முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், அச்சுப் பிழை, எழுத்துப் பிழை என்று சொல்ல முடிந்திருக்கிறதே தவிர, இந்த ஆளுநர் உரையிலே கொள்கைப் பிழை இருக்கிறது என்று அவராலே சொல்ல முடியவில்லை என்கிற அளவுக்கு நம்முடைய ஆளுநர் உரை முதலமைச்சர் அம்மாவினுடைய கொள்கை விளக்க உரையாக இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது.



இந்த உரையைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும். ஒரு மாபெரும் வெற்றியை தமிழகம் இப்போது பெற்றிருக்கிறது. பணநாயகத்தை வென்று ஜனநாயகத்தை மீட்டெடுத்த பெருமை, மூன்றாவது முறையாகத் தமிழகத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். இது ஏதோ தமிழகத்திலே நடந்த மாறுதல் அல்ல. இந்தியாவின் தேர்தல் ஆணையம் மட்டுந்தான் இந்தத் தமிழ்நாட்டுத் தேர்தலை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது என்று கருதிவிட முடியாது. இந்திய அரசியல் கட்சிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், இந்தியாவிலே இருக்கிற, ஜனநாயகத்தை விரும்புகிற *100* கோடி மக்கள், உலக அளவிலே இருக்கிற ஜனநாயக நம்பிக்கை உள்ளவர்கள் எல்லாம் இந்தத் தமிழகத்துத் தேர்தலை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஏனென்றால், நாங்கள் திருமங்கலம் ஃபார்முலாவை நிரூபிக்கப்போகிறோம் என்று பலர் இங்கே கங்கணம் கட்டிக்கொண்டு, கர்ஜித்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலே, இந்தியாவே திருமங்கலம் ஆகிவிடுமோ என்று பயந்து கொண்டு ஜனநாயகத்தை விரும்புகிறவர்கள், ஜனநாயக சக்திகளில் நம்பிக்கை உள்ளவர்கள் இந்தத் தமிழகத் தேர்தலை உன்னிப்பாக, விழிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இங்கே பணநாயகம் தோற்றது. ஜனநாயகம் வென்றது. இதன்மூலம் இந்தியாவிலேயே ஜனநாயகத்தை வென்றெடுத்த பெருமை, மீட்டெடுத்த பெருமை இந்த அணிக்குத் தலைமையேற்ற தமிழக முதல்வர், போற்றுதலுக்குரிய அம்மா அவர்களையே சாரும் என்பதாலே நான் இந்த அவையிலே இவற்றைப் பதிவு செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஜூன் 9

தொடக்கத்திலேயே சட்டம்–ஒழுங்கு சீர்பட வேண்டும். 5 ஆண்டுக் காலமாக சீரழிந்து கிடக்கிற, குலைந்து கிடக்கிற, கேட்பாரற்றுக் கிடக்கிற, ஒவ்வொரு நாளும் பத்திரிகையைப் புரட்டினால் படுகொலை, கற்பழிப்பு, கொள்ளை, தாக்குதல், இப்படியாகப் பக்கத்துக்குப் பக்கம் செய்திகள் வந்துகொண்டிருந்த அந்த நிலைமை மாறி, அம்மா அவர்கள் வெற்றி பெற்றார் என்ற உடனேயே அடுத்த நிமிடமே தமிழகத்திலே சட்டமும் ஒழுங்கும் அவர்கள் சுட்டு விரலுக்குக் கட்டுப்பட்டிருக்கிறதே! தமிழகத்தின் சட்டமும் ஒழுங்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய, முதலமைச்சருடைய சுட்டு விரலுக்கு இன்றைக்குக் கட்டுப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது என்கிறபோது, ஒரு நல்ல ஆட்சிக்கு அதுதான் இலக்கணம். இந்த அரசு கட்டுப்பாடோடு, ஒரு முனைப்போடு இயங்குகிறது என்கிற அந்த இலக்கணத்தை அவர்கள் துவக்கி வைத்திருப்பதோடு, ஆளுநர் உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்கிறபோது நான் அதைப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்.

தலைமைச் செயலகம் புதிதாக பல நூறு கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்டிருக்கிறதே, அங்கேயிருந்து இயங்காமல் பழைய தலைமைச் செயலகத்திலே சட்டமன்றம் இயங்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியை எதிர்க்கட்சிக்காரர்கள் வெளியே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–35

நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 2001–2006 வரையிலே தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இங்கேயிருக்கிற இந்தச் சட்டமன்றம் போதிய இட வசதியோடு இல்லை; இதை மாற்றலாம் என்கிற ஒரு உணர்வை, அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை இங்கே தீர்மானமாகக் கொண்டு வந்து அதற்காக ஒரு இடத்தையும் பார்த்து, கடற்கரைச் சாலையிலே இருக்கிற இராணி மேரி அரசுக் கல்லூரியை அதற்காகத் தேர்ந்தெடுத்து அங்கே வேண்டுமானால் புதிய சட்டமன்றம் கட்டலாம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முயன்றபோது, அதற்குத் தடை விதித்தது யார்? அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது யார்? அதற்கு முட்டுக்கட்டை போட்டது யார்? அன்றைக்கு மத்தியிலே சுற்றுப்புறச்சூழல் துறை அமைச்சராக இருந்தவர்கள் தடை விதித்தார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்தான் அன்றைக்குத் தடை



2011 ஜூன் 9] [முனைவர் செ.கு. தமிழரசன்]

விதித்தார்கள். அதற்குப் பிறகும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், “சரி, இந்த இடம் ஏதுவானதாக இல்லையென்றால் வேறோர் இடத்தைத் தேர்ந்தெடுக்கலாம்” என்று கோட்டூர்புரத்திற்குப் போய், கோட்டூர்புரத்திலே அரசுக்குச் சொந்தமான இடத்தைக் கையகப்படுத்தி, அங்கே நிதி ஒதுக்கீடு செய்து, நில ஒதுக்கீடு செய்து அடிக்கல் நாட்டு விழாவையும் நடத்தி, தலைமைச் செயலகம் கட்ட வேண்டுமென்று அங்கே அடிக்கல் நாட்டு விழாவையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்தினார்கள். அந்த இடத்தில் என்ன நடந்தது? ஏன் அது மாற்றியமைக்கப்பட்டது? அது இன்றைக்கு செம்மொழி நூலகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட முட்டுக்கட்டைகளை, குறுக்கு புத்தியோடு போட்டவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களா? புரட்சித் தலைவி அம்மா அவர்களா? எதற்காக கோட்டூர்புரத்தினுடைய அடிக்கல் நாட்டு விழா அதோடு முடிவடைந்தது? ஏன் நிறுத்தப்பட்டது? எதற்காக அது செம்மொழி நூலகமாக மாறியது? அதற்குப் பின்னாலே மக்கள் சந்தடி மிகுந்த, சட்டமன்றப் பேரவையில் அமைதியாக நிகழக்கூடிய சம்பவங்கள் இருக்க வேண்டிய பகுதி என்பதற்கு மாறாக இலக்கணம் படைத்த, ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்களும், ஆயிரக்கணக்கான வண்டிகளும் புழங்கிக் கொண்டிருக்கிற அண்ணா சாலைப் பகுதியிலே போய் ரூ.400 கோடி என்று திட்டமிட்டு ஆரம்பித்து, அது 1,000 கோடி ரூபாய்க்கு மேலே போய் தொடக்க விழா நடந்து ஓராண்டுக் காலம் ஆகியும் பணிகள் நடந்து கொண்டிருக்கிற ஒரே கட்டடம் உலகத்திலேயே அதுவாகத்தான் இருக்கும். இன்னமும்கூட முடிவடையவில்லை. திறப்பு விழா நடந்து ஓராண்டுக் காலமாக இன்னமும் பணிகள் முடியவில்லை என்கிற ஒரு கட்டடம், இந்தியாவிலேயே அந்தக் கட்டடமாகத்தான் இருக்க முடியும். அப்படி என்ன அவசரம்? 400 கோடி ரூபாய், ஆயிரம் கோடியானது. அதிலேயும் தாழ்த்தப்பட்ட மக்களுடைய மேம்பாட்டிற்காக ஒதுக்கப்படுகிற Special Component Plan என்று சொல்லப்படுகிற சிறப்புக் கூறுத் திட்டத்தினுடைய நிதி, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் அதற்குத் திருப்பப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டும் எழுந்திருக்கிறது. டில்லியிலே நிகழ்ந்த அந்தக் குற்றச்சாட்டைப்போல சென்னையிலேயும் அந்தக் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. அதற்கு இன்று வரையிலே முன்னாள் முதலமைச்சர் ஒரு பதிலும் சொல்லவில்லை. ஆக, அப்படிப்பட்ட

நிலைமைக்கு காரணமாக இருந்தவர்கள் கருணாநிதியினுடைய கூட்டமா? தலைமைச் செயலகத்தை மாற்ற வேண்டும் என்று நினைத்தபோது அதற்குத் தடை போட்டவர்கள் அவர்களா, புரட்சித் தலைவி அம்மா அவர்களா என்று நினைத்துப் பார்த்தால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எளிய, மிகக் குறைந்த செலவில், அதிக ஏக்கரும் இல்லாமல், எவ்வளவு தேவையோ அவ்வளவு ஏக்கர் நிலத்திலே, கோட்டூர்புரத்திலே குறைந்த நிதியிலே கட்டடம் கட்ட திட்டமிட்டார்கள். ரூ.100 கோடிக்கும் குறைவான ஒரு திட்டம். இப்போது ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலேபோய் இருக்கிறதே, இந்த நிதியை வீணடித்தவர் கருணாநிதி அவர்கள்தான். ஆகவேதான் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதில் நடந்த குளறுபடிக்காக, ஓய்வு பெற்ற ஒரு நீதிபதியைக் கொண்டு ஒரு விசாரணை ஆணையத்தை ஏற்படுத்துவதற்கு இந்த ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறார்கள். அந்த ஆணையத்தை எங்கள் இயக்கத்தின் சார்பிலே நெஞ்சார வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். இந்த ஆளுநர் உரையில் இருக்கிற அனைத்து அம்சங்களையும் பாராட்டுவது என்றால் நிறைய நேரம் அதற்குத் தேவைப்படும். நான் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 20 கிலோ அரிசியை இலவசமாகத் தருகிற திட்டத்தை இந்த ஆளுநர் உரையிலே சொன்னதோடு, தேர்தல் வாக்குறுதியிலே சொன்னதோடு அதை வந்த வேகத்திலேயே நிறைவேற்றியும்விட்டார்கள். முதல் ஆணையாகவே அந்த ஆணையைப் போட்டு இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடுவதற்கு முன்பாகவே நிறைவேற்றுகிறார். அப்படிப்பட்ட வேகத்தோடு அவற்றை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

“காலுக்குச் செருப்பும் இல்லை
கால் வயிற்றுக் கூழும் இல்லை
பாழுக்கு உழைத்தோமடா தோழா
பசையற்றுப் போனோமடா”

என்று பாட்டாளிக் கவிஞர் ப. ஜீவானந்தம் பாடினார்.

“காலுக்குச் செருப்பும் இல்லை, கால் வயிற்றுக் கூழும் இல்லை, பாழுக்கு உழைத்தோமடா தோழா, பசையற்றுப் போனோமடா” என்று பாட்டாளி மக்கள் கவிஞர் ஜீவானந்தம் பாடினார். அன்றைக்குக் கால் வயிற்றுக் கூழும் இல்லை என்றார். இனிமேல்



தமிழகத்திலே கால் வயிற்றுக்குக் கூழும் இல்லை என்று எவரும் சொல்லிவிட முடியாது. நான் 20 கிலோ அரிசியை இலவசமாகத் தருகிறேன்; நீங்கள் பசியோடு இருக்க வேண்டியது இல்லை. இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், அந்த இரந்தும் உயிர் வாழ்கின்ற தன்மை தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதற்காக— அன்றைக்கு பெயர் வைத்தபோதுகூட அதற்கு இலவச திட்டம் என்று இல்லாமல், “விலை இல்லாத அரிசி” என்று பெயர் வைக்கிறபோதுகூட, ஏதோ வாரி வழங்குகிற அப்படிப்பட்ட ஒரு மேதாவித் தன்மையோடு “இலவசம்” என்று சொல்லாமல் “விலையில்லாத அரிசி” என்று சொல்லியிருக்கிற, விலை சொல்ல முடியாத மங்கையர்குல மாணிக்கமாக, மரகதமாக திகழக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட ஒரு பண்பு வரும். இது விலையில்லாத அரிசி என்றார்கள் அப்பொழுதே.

அண்ணா ஒரு முறை பரிசில் தந்தபோது நான் தர விரும்பவில்லை; நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதைப்போல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நான் தருவது இல்லை; நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று விலை இல்லாமல் அதற்குப் பெயர் வைத்திருக்கிறார்களே அந்தத் தன்மையை நான் பாராட்டுகிறேன்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு முன் வரிசையிலுள்ள தலைவர்கள் எல்லோரும் பேச வேண்டும். சீக்கிரம் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** ஆதி திராவிட மாணவர் விடுதிகள் தரமற்றுக் கிடந்தன, பராமரிப்பு இல்லாமல் கிடந்தன. அந்த மாணவர்கள் எல்லாம் தெருவுக்கு வந்து தங்கள் வசதிக்காக, தங்கள் மேம்பாட்டிற்காகப் போராட வேண்டிய நிலைமை வந்தது. ஆறு மாதத்திற்கு முன்னால் அப்படிப்பட்ட போராட்டம் எழுந்தபோது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அவர்களுடைய கவனத்திற்கு அதை நாங்கள் கொணர்ந்தபோது அதற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை விட்டார். அதற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை விட்டதோடு நாங்கள் முடிந்துவிடும் என்று நினைத்தோம். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு வந்தவுடனேயே,

ஆதி திராவிட மாணவர் விடுதிகள் எல்லாம் பராமரிக்கப்படும்; அதற்காகச் சிறப்பு நிதி, ஓராண்டுக் காலத்திலே அவற்றை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்படும் என்று ஓர் அறிவிப்பை ஆளுநர் உரையிலே தந்திருக்கிறார்கள். அதுதான் புரட்சித் தலைவி அம்மா. நாங்கள் மறந்தாலும், அவர்கள் மறக்காமல் அதை நினைவிலே வைத்துக்கொண்டு இன்றைக்கு இந்த அரசு வந்த தொடக்கத்திலேயே அதை அறிவித்து இருக்கிறார்கள்.

ஏற்கெனவே, 2001–2006–இலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அவருடைய சட்டமன்றத் தொகுதி வளர்ச்சி மேம்பாட்டு நிதியிலே, அந்தப் பகுதியிலே ஆதி திராவிட மாணவர் விடுதிகளைக் கட்டுவதற்கு நிதியொதுக்கீடு செய்தாகவேண்டும்; கட்டியாக வேண்டும் என்கிற மரபை உருவாக்கி, அன்றைக்குத்தான் நூற்றுக்கணக்கான ஆதி திராவிட மாணவர் விடுதிகள் புதிய கட்டடங்களைத் தமிழகத்திலே பார்த்தன. இன்றைக்கும் அதே வழியிலே, அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள்; நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, தாலிக்குத் தங்கம் தருகிற திட்டம் இருக்கிறதே அதை இந்த மன்றத்திலே சொல்லியே ஆக வேண்டும்; கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டும். அன்றைக்கு மிகப் பெரிய பெண் எழுத்தாளராக இருந்த ராஜம் கிருஷ்ணன் ஒரு நிகழ்ச்சியிலே சொன்னார்: “நான் அன்று அண்ணா சாலையிலே வந்து கொண்டிருந்தேன்; பெண்கள் கல்லூரிகளை எல்லாம் பார்த்தேன்; அந்தப் பெண்கள் கல்லூரிகளில் எல்லாம் கூட்டம் கூட்டமாகப் பெண்கள் வந்து கொண்டிருக்கிற அந்தக் காட்சியைப் பார்க்கிறபோது, இவ்வளவுப் பெண்களுக்கும் திருமணம் செய்ய வேண்டுமானால் எவ்வளவு தங்கம் தேவைப்படுமோ, எவ்வளவு பொன் தேவைப்படுமோ என்று ஏங்கினேன்; வருந்தினேன்; அவர்களைப் பெற்றவர்களுக்கெல்லாம் எவ்வளவுப் பிரச்சினை ஏற்படுமோ” என்று ஒரு எழுத்தாளராக, ஒரு பெண் எழுத்தாளராக திருமதி ராஜம் கிருஷ்ணன் ஒரு முறை கட்டுரை எழுதினார். அந்தச் சிந்தனையை, இன்றைக்கு ஒரு பெண்ணாக தமிழகத்திலே மூன்றாவது முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற அம்மா அவர்கள், தமிழகத்திலே ஆயிரக்கணக்கான பெண்கள் ஒரு குன்றிமணி தங்கம்கூட இல்லாமல் மஞ்சள் தாலி அணிகின்ற கொடுமைக்கு முடிவு காண்பதற்காக அரை பவுன் தாலிக்கு நான் தங்கம் தருகிறேன் என்றார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாடினார்களே, அவர்கள் நடித்த திரைப்படத்தினுடைய பாடல் ‘தங்கம் எடுத்த கை தங்கம் பார்த்ததா’ என்று, தங்கம் எடுத்த கை தங்கம் பார்க்க முடியாமல் தவித்த அந்த நிலையை மாற்றி, இன்றைக்குக் கோடிக்கணக்கான பெண்களுக்கு, ஏழையெளிய பெண்களுக்கு, நலிந்த பெண்களுக்கு, அடித்தளத்துப் பெண்களுக்கு, அவர்கள் வாழ்க்கை மிளிர, அவர்கள் வாழ்க்கையிலே ஒரு வாழ்வாதாரம் இருக்க, நான் இருக்கிறேன் ஒரு தாயாக, தமிழகத்தின் தாயாக என்று தாலிக்குத் தங்கம் தருகிற திட்டம்தான் உணர்வுகளோடு தொடர்புடைய ஒரு திட்டம். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை, தமிழகத்தின் தங்கத் தாரகையாக இருக்கக்கூடிய தனித்துவமிக்க புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இன்றைக்குக் கோடிக்கணக்கான ஏழையெளிய மக்களுக்குத் தாலிக்குத் தங்கம் என்கிற திட்டத்தைத் தந்திருக்கிறார் என்கிறபோது, நான் அதைப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் ஒன்றை மட்டும் அதிலே...





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் ஒத்துழையுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** அப்படிப்பட்ட அந்தத் திட்டத்திலே, பெண்களுக்கு, படித்த பெண்களுக்கு ரூபாய் 50,000/–, தாலிக்குத் தங்கம் என்கிறபோது, கிராமப்புறங்களிலே தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 8 ஆம் வகுப்பிற்குமேல் படிப்பதே அவர்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பு. 8 ஆம் வகுப்புக்கூட படிக்காமல் நின்றுவிடுகிற ஒரு அவலம் இருக்கிறது. ஆகவே, அதிலே அந்தக் கல்வித் தகுதியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர்களுக்கு ஓய்வூதியம் தருகிற வகையிலே, 60 வயது என்று வயது உச்சவரம்பு இருக்கிறது. 60 வயது என்பது ஆண்களாக இருந்தாலும், பெண்களுடைய இயல்புக்கேற்ப அந்த 60 வயதை 55 வயதாக, 5 ஆண்டுகளாவது முதியோர் உதவித் தொகை திட்டத்திலே, பெண்களுக்குக் குறைக்கலாம். 5 ஆண்டுகள் பெண்களுக்குக் குறைப்பது ஒரு தவறாக இருக்க முடியாது. ஆகவே அப்படிப்பட்ட வயது குறைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஜூன் 9

என்னுடைய தொகுதியிலே ஒருசில கோரிக்கைகள். அதை நான் இங்கே வலியுறுத்தாவிட்டால் என்னுடைய முதல் பேச்சுக்கே பொருள் இல்லாமல் போய்விடும். என்னுடைய தொகுதி ஒரு புதிய தொகுதி. முற்றிலும் ஒரு புதிய தொகுதி. பேரூராட்சிகூட இல்லாமல், 72 ஊராட்சிகளே நிரம்பிய ஒரே தொகுதி தமிழகத்திலே என்னுடைய தொகுதியாகத்தான் இருக்கமுடியும். ஊராட்சிகளைத் தவிர வேறு ஒன்றுமே கிடையாது. ஆகவே, கே.வி. குப்பம், லத்தேரி ஆகிய இரண்டு ஊராட்சிகளையும் பேரூராட்சிகளாக மாற்ற முடியுமா என்று பரிசீலிக்க வேண்டும்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் உரையை கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** முடித்துவிடுகிறேன். அவற்றைப் பேரூராட்சிகளாக ஆக்க முடியுமா என்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

மோர்தானா, ராஜாதோப்பு அணைகள் ஏற்கெனவே கட்டப்பட்ட சிறு அணைத் தேக்கங்களை விரிவுபடுத்தி, சுற்றுலாத் தலங்களாக உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன். வடுகன்தாங்கல், லத்தேரி பகுதிகளில் ஒரு இணைப்புச் சாலை இருக்கிறது. அது ஒரு இரயில் பாதை குறுக்கிடுகிற சாலையாக இருப்பதனாலே, அங்கே ஒவ்வொரு நாளும் மணிக்கணக்கிலே போக்குவரத்து தடைபடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையெல்லாம் அமைச்சரை நேரில் பார்த்து சொல்லுங்கள் அல்லது மனுவாக எழுதிக் கொடுத்துவிடுங்கள். உங்கள் உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** இந்தக் கோரிக்கைகளை இந்த மாமன்றத்திலே நான் முன்வைக்கிறேன். பேச வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு.



2011 ஜூன் 9]

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவைக்குப் புதியவன். எனக்கும் இந்தத் தகுதி வாய்ந்த அவையின் முன்வரிசையில் அமர்ந்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர வாய்ப்பளித்த, அன்னைத் தமிழ்நாட்டில் வாழும் 7 கோடிக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரே அரசியல் தலைவியாய், ஆட்சித் துறைத் தலைவியாய், இம்மாமன்றத்திற்கு மதிப்புக் கூட்டி அமர்ந்திருக்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த மதிப்புமிக்க மன்றத்திற்கு, நடந்து முடிந்த 14–ஆவது சட்டமன்றப் பொதுத் தேர்தலில், தமிழ்நாட்டு மக்களினுடைய, மிகப் பெரும்பான்மையான பேராதரவைப் பெற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களினுடைய தலைமையிலே, தே.மு.தி.க., மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, புதிய தமிழகம் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, அகில இந்திய பார்வர்டு பிளாக், மூவேந்தர் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கட்சிகளோடு நாம் அமைத்திருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தக் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. நான் போட்டியிட்ட பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதியில் பெருவாரியான வாக்குகளிலே வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சிகளினுடைய தலைவர் பெருமக்களுக்கும், கட்சியினருக்கும் முதற்கண் என் வணக்கத்தையும், நன்றியையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைக்கு மேதகு ஆளுநர் உவந்தளித்த பேருரையில், தமிழகத்திலே சென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மைனாரிட்டி கருணாநிதி அரசு, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்பதையே தேசிய சாதனையாகச் சொல்லிவந்த அந்தத் திட்டத்தை மாற்றி, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 20 கிலோ அரிசியும் இலவசமாகத் தருகிறேன் என்ற அந்தச் செய்தியும், முதியோர் ஓய்வூதியம் 500 ரூபாய் பாரீர் என்று அதிசயித்த கருணாநிதியைவிட, நம் அம்மா, நான் இன்னமும் சரிபாதி சேர்த்து ஆயிரம் ரூபாயாகத் தருகிறேன் எனத் தந்து, இடையில் ஏமாற்றுவோரிடமிருந்து முழுமையாகப் பாதுகாத்து, பயனாளியின் வங்கிக் கணக்கிற்கே பணம் வந்து சேர நடவடிக்கை எடுத்தது, மூத்த ஏழை மக்களின் கண்ணீரைத் துடைத்தது, தாலிக்குத் தங்கம் தந்தது, பெண் குழந்தைகள் உயர் கல்வி கற்பதை ஊக்குவிக்க

[திரு. உ. தனியரசு] [2011 ஜூன் 9

ரூபாய் 50 ஆயிரம் பணமும் தந்து ஏழைப் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றியது, நம் மீனவர்களினுடைய வருத்தம் போக்க பருவ கால உதவி ஆயிரம் ரூபாய் என்பதை மாற்றி, 2 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி இலட்சக்கணக்கான மீனவக் குடும்பங்களின் வாட்டம் போக்கியது, நிறைவேற்ற முயலும் அரசின் முயற்சியாய், நம் தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பாதுகாத்து வளர்ச்சி அடையத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது போன்ற செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

முற்பகல் 11–50

நீதிமன்றங்களில் தமிழைப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பது என்ற செய்தியும், இம்மாநிலத்தில் சட்ட மேலவை ஒரு தேவையற்ற அமைப்பு எனக் கருதி 1986 முதல் 25 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் இல்லாத ஒரு அமைப்பை திரு. கருணாநிதி கொண்டுவர முயற்சித்ததைத் தடுத்தது, விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்தது, விலையேற்ற, இறக்கத்தை சமன் செய்ய, விலைக் கட்டுப்பாட்டு நிதி ஒதுக்கியது, வேளாண்மையால் நீடித்த வளர்ச்சியை எட்ட பாசனக் கட்டமைப்புகளை வலுப்படுத்தி, மாநில நதிகளை இணைக்கும் கனவுத் திட்டத்திற்கு முன்னுரிமை தந்திருப்பது, அரசுப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு இலவசமாக மடிக் கணினி வழங்கும் செய்தி, மகளிருக்கு மின் விசிறி, மிக்ஸி, கிரைண்டர் இலவசமாகத் தருவது, கிராமப் புறங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறை வசதி, சாலை வசதி, 24 மணி நேர மருத்துவ வசதி, தரமான கல்வி தந்து, நகர்ப்புறங்களுக்கு இணையான வசதியை கிராம மக்களுக்கும் கிடைக்கச் செய்வது, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதிகளின் வசதியை ஓர் ஆண்டுக்குள் மேம்படுத்த சிறப்பு நிதியை ஒதுக்கியது, இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள முகாம்கள் சீரமைக்கப்பட்டு தரமான இருப்பிடம், குடிநீர், மருத்துவ வசதிகள், அவர்தம் குழந்தைகள் கல்வி பயிலத் தேவையான உதவி, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கச் செய்திருப்பது, இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே அடிமைகளாக வாழும் அவல நிலையை மாற்ற மத்திய அரசை வலியுறுத்தியிருப்பது போன்ற செய்திகளும் அதில் இடம் பெற்றுள்ளன.



2011 ஜூன் 9] [திரு. உ. தனியரசு]

நீண்டகாலமாகத் தமிழகத்தில் நடைமுறையில் இருந்த நான்கு முறை பாடத் திட்டத்தினை, பெற்றோரும், மாணவர்களும் விரும்பும் பாடத் திட்டத்தினை, அதற்கென அங்கீகரிக்கப்பட்ட கல்விச் சாலையில் கற்கும் முறையை, பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவந்த நிலையை மாற்றி பெற்றோர்களும், மாணவர்களும் திகைத்து, வேதனைக்கு உள்ளாக்கப்பட்ட திட்டமான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட சமச்சீர் கல்விப் பாடத் திட்டத்தை நிறுத்திவைத்து, மறு ஆய்வுக்கு உட்படுத்தி, இலட்சக்கணக்கான பெற்றோர்கள், மாணவர்கள் கல்விச் சாலை நடத்துபவர்கள் பதற்றத்தைத் தணித்து நல்லுதவி செய்து இருப்பதும் இதில் இடம் பெற்றுள்ளன.

சென்ற ஆட்சியாளர்களின் மிரட்டலால், அதிகார துஷ்பிரயோகத்தால் நிலத்தை, சொத்தைப் பறிகொடுத்தோருக்கு உரிய விசாரணைமூலம் சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட நிலத்தை மீட்டு, உரியவர்களிடமே திரும்ப ஒப்படைப்பதும், விற்று முடித்தோர்மீது நடவடிக்கை எடுக்கவும் முனைந்திருப்பதும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டமன்றத்தின்மூலமாக, நாடு முழுவதும் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை, எளிமையாகத் தொடர்புகொள்ள முடியாது என்ற கருத்தை நாடு முழுக்க சிலர் தவறாகப் பரப்பி வந்த சூழ்நிலையில், போயஸ் தோட்டத்தினுடைய பாதை கடினமானது, இறுக்கமானது என்றெல்லாம் சொல்லி வந்த நிலைமையெல்லாம், நடந்து முடிந்த 14–ஆவது சட்டமன்றத் தேர்தலில் அம்மா அவர்களுடைய சீரிய அணுகுமுறையால் மாற்றப்பட்டுள்ளது.

மேதகு ஆளுநர் அவர்களுடைய சீரிய உரையைப் பார்த்தால், கடைக்கோடியில் இருக்கிற சாமானிய மக்களினுடைய உணர்வுகளைக்கூட அறிந்து, மக்களுக்கு மிக நெருக்கமாக இருப்பதாகச் சொல்லப்படும் அரசியல் கட்சிகளும், அரசியல் தலைவர்களையும்விட மிகக் கூடுதலாகச் சமூகத்தை ஆய்ந்து, மிகச் சிறப்பாகப் பகுப்பாய்ந்து, மக்களுடைய தனித் தனி உணர்வுகளை, அவர்களுடைய தேவைகளை உணர்ந்து, எவராலும் குற்றம் கண்டுபிடிக்கமுடியாத ஒரு மிகச் சிறந்த ஆளுநர் உரையாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலான ஆட்சியினுடைய கொள்கையை முன்வைத்திருப்பது தெரியவரும்.

[திரு. உ. தனியரசு] [2011 ஜூன் 9

தமிழ்நாட்டு அரசியலில், இந்த நவீன அரசியலில், ஒரு மிகுந்த ஜனநாயக மாண்பை உண்டாக்கி, ஜனநாயகத்தில் மக்கள் தங்களுடைய உணர்வுகளையெல்லாம் தங்களுடைய பிரச்சினைகளையெல்லாம் கொட்டித் தீர்ப்பதற்குச் சரியான அவை என்று கருதிய இந்த அவை, இப்பொழுதுதான் மீண்டும் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பிறகு, 100 விழுக்காடு மக்களுடைய தேவைகளை, மக்களுடைய விருப்பத்தை நிறைவு செய்கிற மாமன்றமாக இந்த மன்றம் மிக வலிமையாக உயர்ந்திருப்பதை அறிந்து, நான் சார்ந்திருக்கிற தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் சார்பாகப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

மேற்கு மண்டலத்திலே பல்வேறு அரசியல் கட்சிகள், குறிப்பாக, கொங்கு நாடு முன்னேற்றக் கழகமெல்லாம் அந்த மக்களுடைய பிரச்சினைகளுக்காக அவதரித்தவர்களைப்போன்று, பல பிரச்சினைகளை முந்தைய ஆட்சியாளர்களிடம் கொள்கையாக, கோரிக்கையாக வைத்தன. எந்தக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தோடு முரண்பட்டு இருந்ததோ, அதே கட்சியோடு கூட்டணி சேர்ந்ததால், மேற்கு மண்டலத்தினுடைய, கொங்கு மண்டலத்தினுடைய வாக்காளப் பெருமக்கள் ஒட்டுமொத்தமாக 100 விழுக்காடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணியையும், அதனோடு கூட்டணி சேர்ந்த கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தையும் மிகவும் படுதோல்வி அடையச் செய்ததற்குக் காரணமாயிற்று. நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கு மண்டலத்திற்கு மிகக் கூடுதலான அமைச்சர்களைத் தந்ததோடு மட்டுமின்றி, உழைக்கின்ற பெரும்பான்மைச் சமூகம், உழவுச் சமூகம் தன்னுடைய அரசியல் அபிலாஷைகளை மிக இலகுவாக ஆட்சித் துறைத் தலைமையிடத்திலே கொண்டுவந்து சேர்க்க வழிவகுத்துள்ளார். செல்வ வளமிக்க கொங்கு மண்டலத்திற்கு—நம்முடைய முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போன்று—எல்லா வளங்களையும் பெற்றுள்ள கொங்குச் சீமை, மழை வளம், நீர் வளம், தொழில் வளம் எனப் பல்வேறு தொழில்களுக்கும் துவக்க நிலையாக இருக்கிற அந்த மேற்கு மண்டலத்திற்கு, அம்மா அவர்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்பொழுதும் யாருடைய தயவு இன்றியும், தனிப் பெரும்பான்மையாக வெற்றி பெறக்கூடிய வாய்ப்பைப்



2011 ஜூன் 9] [திரு. உ. தனியரசு]

பெறுவதற்குக் காரணம், உழைக்கின்ற மேற்கு மண்டல மக்களுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பிலே இருந்தபோதெல்லாம், மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபோதெல்லாம், உரிய பிரதிநிதித்துவத்தைத் தந்து, உரிய திட்டங்களைத் தந்து, மேற்கு மண்டலம் சோர்ந்து போகாமல், தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டங்களிலிருந்து பிழைப்புத் தேடி வருவோர்களுக்கெல்லாம், இலட்சக்கணக்கான மக்களுக்கெல்லாம் தேவையான தொழிலை ஏற்படுத்தி வேலைவாய்ப்பைத் தந்ததுதான். இலட்சக்கணக்கான குடும்பங்கள் வறுமையிலே வாடியபோதும், மிக வறட்சியான காலக்கட்டங்களிலேயும்கூட, வேலை இல்லாமல் இல்லை என்ற நிலையில் இருந்த ஒரே மண்டலம், மேற்கு மண்டலம்தான் என்ற பெருமையைப் பெற்றிருந்த அந்த மண்டலம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மைனாரிட்டி கருணாநிதி அரசினுடைய சென்ற ஆட்சியில், மேற்கு மண்டலத்திலே செழித்து வளர்ந்து இருந்த விவசாயம் செத்துப் போய்விட்டது. விவசாய உற்பத்தி குறைந்துவிட்டது.

ஜவுளித் தொழிலில் இந்திய அளவிலே, ஏன் உலக அளவிலே, மிகப் பெரும்பான்மையான ஆயத்த ஆடை உற்பத்தித் தொழிலானது, மித மிஞ்சிய அளவிற்கு மனித வள ஆற்றலால் அரசினுடைய எல்லா வகையான சலுகைகளைப் பெற்று திருப்பூரிலே, மேற்கு மண்டலத்தினுடைய ஈரோட்டிலே, வளர்ந்து வந்தது. பள்ளிப்பாளையத்திலிருந்து மேற்கு மண்டலத்தின் மையப் பகுதிகளில் எல்லாம் செழிப்புற்று வளர்ந்த அந்த ஆயத்தத் தொழில், அதற்குக் காரணமாக இருந்த சாய ஆலைத் தொழில், முற்றிலுமாக சென்ற திராவிட முன்னேற்றக் கழத்தினுடைய, கருணாநிதி அரசினுடைய, மைனாரிட்டி அரசினுடைய மக்கள் விரோத அரசால் திட்டமிட்டு அழிக்கப்பட்டது. இது, மக்கள் விரோத செயலுக்கு, மிகப் பெரிய எடுத்துக்காட்டு. மேற்கு மண்டலத்தின்மீது அக்கறை இல்லாத கருணாநிதி அரசு செய்த மிகப் பெரிய கொடுமை என்பதற்கு எடுத்துக்காட்டு, உயர் நீதிமன்றத்தினுடைய ஒரே உத்தரவில் 700–க்கும் மேற்பட்ட சாய ஆலைகளில் பல ஆயிரம் கோடி ரூபாயில் நிர்மாணிக்கப்பட்ட சாய ஆலைகளில், பல பத்தாண்டுகளில் தேனீக்களைப்போல் இரவு, பகல் பாராமல் பாடுபட்டு உழைத்துச் சேகரித்த... (மணியடிக்கப்பெற்றது)

[2011 ஜூன் 9

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. உ. தனியரசு:** அந்தத் தொழிற்சாலைகளில், ஒரே உத்தரவில் இலட்சக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்கள் முடக்கப்பட்டு, இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் நிர்மூலமாக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்காக, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் அமைச்சர்களை அனுப்பி சம்பந்தப்பட்ட தொழில் முனைவோர்களிடம் கலந்துபேசி, அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, விவசாயிகளுக்கும், சாய ஆலை நிர்வாகம் நடத்துகிறவர்களுக்கும் இடையேயுள்ள பிரச்சினைகளையெல்லாம் களைவதற்கு முயற்சி எடுத்திருக்கிற இந்த அரசுக்கு, ஆளுநர் உரையில் சொல்லப்படாவிட்டாலும், அதற்கு முயற்சி எடுத்ததற்காக நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு காலக்கட்டங்களிலே இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்காக இலங்கைத் தமிழர்களை வரலாற்றுப் படுகொலை செய்த இராஜபக்சேவைப் போர்க் குற்றவாளியாக அறிவித்து, நேற்று முன்தினம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்றி, வரலாற்றுச் சாதனை புரிந்து, உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற கோடிக்கணக்கான தமிழர்களுடைய ஆறாத் துயரத்திற்கு ஒரு ஆறுதலைத் தந்து, உலகத்தினுடைய தமிழர்களுக்கெல்லாம் தாயாக இருப்பவர் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான் என்பதற்குச் சான்றாகவும் விளங்குகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

கச்சத் தீவை மீட்பதற்கு ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்திலே வழக்கைத் தொடுத்தோம். உச்ச நீதிமன்ற வழக்குக்குக் கூடுதலாக பலம் சேர்ப்பதற்கு வருவாய்த் துறையையும் இணைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை இன்று கொண்டுவந்து நிறைவேற்றி இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றி பாராட்டுகிறேன். பல்வேறு சூழ்நிலைகளிலே உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற தமிழர்களுக்கு ஆதரவுக் கரமாய் விளங்கி, தமிழ்நாட்டினுடைய தமிழர்கள் எப்பொழுதெல்லாம் பாதிக்கப்படுகிறார்களோ, அப்பொழுதெல்லாம் உடனுக்குடன் கடைக்கோடியில் இருக்கிற தனி மனிதனுடைய



2011 ஜூன் 9] [திரு. உ. தனியரசு]

உரிமைகளுக்காகக்கூட முனைந்து செயலாற்றி, தனி மனித உரிமையையும், வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கிற பாங்கு, நம்முடைய மதிப்புமிக்க தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்தக் காலக்கட்டத்திலேதான் சாத்தியப்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய பொற்காலம், சங்ககால பொற்காலத்திற்குப் பிறகு, மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கிற இப்போதுதான் என்கிற நிலையில், தமிழகத்தினுடைய 14–ஆவது சட்டமன்றம் நடைபெறும் இந்த அவையிலே உழவர்களின் சாமானிய, ஒடுக்கப்பட்ட அனைத்துத் தரப்பு சமூக மக்களின் குரலாக இந்த மன்றத்திலே பதிவு செய்ய எனக்கும் வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி பாராட்டி, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின்மீதும் அரசினுடைய பல்வேறு கொள்கைகளுக்கும், அரசினுடைய முன்னுரிமைகளுக்கும் மதிப்பு தந்து, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை சார்பாக நன்றி பாராட்டி, ஆதரவு தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் 14–ஆவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என் மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமது உரையின் துவக்கத்தில் மேதகு ஆளுநர் அவர்கள், “தமிழகத்தின் வாக்காளப் பெருமக்கள் அதிக அளவில் திரண்டு வந்து ஜனநாயக நெறிமுறைகளைக் கட்டிக் காத்து, சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும் சட்டமன்றத் தேர்தல் நடைபதற்கு ஒத்துழைத்து இருப்பதை எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் நல்லதொரு மாற்றம் தேவை. சிறப்பான நிருவாகம், நேர்மையான நிருவாகம், தொலைநோக்குப் பார்வையுடன் வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, தமிழகத்தை முதன்மையான மாநிலமாகத் திகழவைக்க திறமையான, ஆற்றல்மிக்க முதலமைச்சர் தேவை என்று தமிழக மக்கள் விரும்பியதால்தான், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே சரித்திரப்

[திரு. ரா. சரத்குமார்] [2011 ஜூன் 9

புகழ்மிக்க வெற்றியைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்மீதும், கூட்டணிக் கட்சிகளின்மீதும் முழு நம்பிக்கை வைத்து ஒரு மௌன புரட்சியின்மூலம் தமிழகத்தில் நல்லாட்சி மலர செய்திருக்கிறார்கள். மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், சிறப்பான ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ள தமிழக மக்களுக்குப் பாராட்டுகளையும், நன்றிகளையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மகத்தான வெற்றியின்மூலம் 3–ஆவது முறையாகப் பதவியேற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தை நாட்டிலேயே முதன்மையான மாநிலமாகத் திகழச் செய்வார் என்று நானும் திடமாக, உறுதியாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்த வெற்றிக் கூட்டணியில் சமத்துவ மக்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட தென்காசி தொகுதியில் என்னையும், நாங்குனேரி தொகுதியில் சமத்துவ மக்கள் கட்சியின் துணைத் தலைவர் திரு. ஏ. நாராயணன் அவர்களையும் வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு மீண்டும் என் மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களின் உரை, மக்கள் நலனை மனதில் கொண்டு பல சிறப்பான திட்ட வடிவங்கள் கொண்டு விளங்குகிறது. சொல் அலங்காரங்களோ, வார்த்தை ஜாலங்களோ இல்லாமல் specifically to the point என்று சொல்வார்களே, அதுபோல் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் ஆகட்டும், வளர்ச்சித் திட்டங்கள் ஆகட்டும், அவை நேரிடையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அது மிகையாகாது. ஏழையெளிய மக்களுக்கு நேரிடையாகப் பயன்தரக்கூடிய மக்கள் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதேநேரத்தில், இந்த அரசு தொலைநோக்குப் பார்வையுடன் வளர்ச்சித் திட்டங்களுக்கும், கட்டமைப்புகளை உருவாக்கும் திட்டங்களுக்கும் அதே முக்கியத்துவத்தை அளித்து வளமான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் என்று கூறப்பட்டதிலிருந்து நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்



2011 ஜூன் 9] [திரு. ரா. சரத்குமார்]

தலைமையில் வளமான தமிழகம் மலர்வதோடு, வலுவான பாரதம் அமைவதில் தமிழகத்தின் பங்கு பெருமளவில் இருக்குமென்று உறுதியாகக் கூறமுடியும். அதை மனதில் கொண்டு, 'தமிழ்நாடு 2025 தொலைநோக்குப் பார்வைத் திட்டம்' என்ற ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் தயாரித்துச் செயல்படுத்த இருப்பதை மனதாரப் பாராட்டி வரவேற்கின்றேன். 2025–இல் உலகிலேயே இளைஞர்கள் அதிகமாக உள்ள நாடாக இந்தியா இருக்கும் என்ற சூழ்நிலையிலே, கருத்துக் கணிப்புகள் கூறும் அந்தச் சூழ்நிலையிலே இளைஞர்களுக்குத் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டம் வகுத்து, அத்தகைய இளைஞர் சக்தியைப் பெருமளவில் பயன்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களின்மூலம் தமிழகமும், நாடும் உயரும் வகையில் செயல் திட்டங்களை வகுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–05

மக்கள் நிம்மதியாக, அமைதியாக, மகிழ்ச்சியாக வாழ்ந்தால்தான் சாதனைகள் புரிவது சாத்தியமாகும். அதற்குச் சட்டம்–ஒழுங்கு நிலை பாதிக்கப்படாமல் இருப்பது அவசியம். இதைக் கருத்தில் கொண்டு, காவல் துறையை நவீனப்படுத்தி குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்புத் திட்டம் செயல்படுத்த இருப்பது, புதுமாதிரியான திட்டமாகும். மக்கள் தொகையின் உயர்விற்கு ஏற்ப, காவலர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டும். தற்பொழுதுள்ள சூழ்நிலையில் 632 பேருக்கு ஒரு காவல் அதிகாரி இருக்கிறார். அதை உயர்த்த வேண்டும். அவர்களின் அடிப்படைத் தேவைகள் முழுமையாகவும், நிறைவாகவும் கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்களுக்கு மேலும் பொருளாதார ரீதியான சலுகைகள் கிடைக்கச் செய்வதன்மூலம் காவல் துறையினர் தவறுகள் குறைய வாய்ப்பு உண்டாகும்.

புதிதாகக் கட்டப்பட்டுள்ள தலைமைச் செயலகக் கட்டுமானப் பணிகளில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க விசாரணைக் குழு அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. விசாரணையின் முடிவில், முறைகேடுகள் அறியப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதோடு, பெரும் பொருள் செலவில் கட்டப்பட்ட அந்த வளாகத்தைச் சீரமைத்து, அரசுக்கு வருவாய் வரக்கூடிய அளவிலே, அரசுக்குப் பயன்படக்கூடிய வகையிலே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு அதை கலை

[திரு. ரா. சரத்குமார்] [2011 ஜூன் 9

அருங்காட்சியகமாக–அதாவது, Madame Tussauds போன்ற உலகளாவிய ஒரு அருங்காட்சியகமாகவோ, அல்லது பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீஸிலுள்ள ஓவியக் கண்காட்சியகத்தைப்போல நிரந்தரக் கண்காட்சியாகவோ, ஒரு சுற்றுலா மையமாகப் பயன்படுத்த முடிந்தால் பயன்படுத்தலாம் என்ற கருத்தை நான் இங்கே பதிவு செய்ய ஆசைப்படுகின்றேன்.

முதியோர் ஓய்வூதியத் திட்டம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையினைப் பயனாளிகள் பெயரில் வங்கிக் கணக்கின்மூலம் நேரடியாக வழங்க முடிவு எடுத்திருப்பது பாராட்டத்தக்கது. வங்கிக் கணக்குகள் தொடங்குவதை எளிமைப்படுத்தி, Zero balance account என்று வங்கிகளில் வழங்கப்படும் சலுகைகளைப் பயன்படுத்த வேண்டும். மேலும், இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் நடைமுறைச் சிக்கல்களோ, காலதாமதமோ ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் கடந்த ஆட்சிக் காலத்தில் மக்கள் விலைவாசி உயர்வால் பெருமளவு பாதிப்பிற்கு ஆளாகி வந்துள்ளார்கள். பொது விநியோகத் திட்டத்தில் உணவுப் பொருள்கள் பதுக்கலையும், கள்ளச் சந்தை விற்பனையையும் தடுக்க நடவடிக்கை எடுப்பதோடு அக்குற்றங்களுக்குக் கடுமையான தண்டனையும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

மேலும், 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு ஏற்படுத்தப்பட்டிருக்கும் விலைக் கட்டுப்பாட்டு நிதி, ஏழை எளிய மக்களுக்கும், மற்ற நுகர்வோருக்கும் விலைவாசி உயர்வால் ஏற்படும் நிதிச் சுமையைப் பெருமளவு குறைக்கும் என்பதில் ஐயமில்லை.

புரட்சித் தலைவர் நடித்த ‘படகோட்டி’ திரைப்படத்தில், மீனவர்களின் துயரத்தை வெளிப்படுத்தும்விதமாக ‘தரைமேல் பிறக்க வைத்தான்’ என்ற பாடலில்,

“கடல்நீர் நடுவே பயணம் போனால்,
குடிநீர் தருபவர் யாரோ!
தனியாய் வந்தோர் துணிவைத் தவிர
துணையாய் வருபவர் யாரோ!”



2011 ஜூன் 9] [திரு. ரா. சரத்குமார்]

“கடல்நீர் நடுவே பயணம் போனால்,
குடிநீர் தருபவர் யாரோ!
தனியாய் வந்தோர் துணிவைத் தவிர
துணையாய் வருபவர் யாரோ!”

என்ற வரிகளுக்கேற்ப ஏங்கிக் கொண்டிருந்த மீனவச் சகோதரர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தபடி, மீனவர்களுக்காக மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை, ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி, பதவியேற்றதும் உடனடியாக அதனை வழங்கி, மீனவச் சகோதரர்களுக்குத் துணையாய் தான் இருக்கிறேன் என்று உணர்த்தியிருப்பது பாராட்டுக்குரியது.

வேளாண்மைத் துறையில் நீடித்த, நிலையான (sustained and permanent growth) வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை யாராலும் வரவேற்காமல் இருக்க முடியாது. மாநில நதிகளை இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி, நீர்ப்பாசன ஆதாரத்தைப் பெருக்க அரசு மேற்கொள்ள இருக்கும் திட்டம், வேளாண் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மாநிலத்தின் பிற பகுதிகளில் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்க, அரசு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கியிருப்பதும், குறிப்பாக தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதும், தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளும் சமமான வளர்ச்சிக்கு வழிவகுக்கும். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் பிளஸ் 1, பிளஸ் 2 மாணவர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச மடிக் கணினி—Laptop—வழங்கியிருப்பது, உள்ளூர் கேபிள் டி.வி. இயக்குநர்களைப் பாதிக்காத வகையில், தனியார் கேபிள் டி.வி. சேவையை அரசுடைமையாக்குவது, மகளிருக்கு மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் இலவசமாக வழங்குகிற திட்டங்களெல்லாம் வரவேற்கத்தக்கவை.

பிற்பகல் 12–10

கடந்த 7–ஆம் தேதி சமச்சீர் கல்வி குறித்த சட்டமுன்வடிவின்படி பாடத் திட்டங்களின் தரம் உயர்த்த, தமிழக

அரசு வல்லுநர் குழு அமைத்திருப்பதை வரவேற்கின்றேன். கல்வியின் தரம் உயர வேண்டிய அளவு மாணவர்களின் தரம், ஆசிரியர்களின் தரம் மற்றும் பள்ளிகளின் தரம் ஆகியவை உயர வேண்டும். "Education should not be a tool to pass examination. It should be directed to build the character and individual confidence in making them socially conscious" என்ற அடிப்படையிலே இந்தக் குழுவை வரவேற்கிறேன். இதுகுறித்து, சிறப்பான முறையிலே நாம் ஏற்கெனவே இந்த மன்றத்திலே பேசியிருக்கின்றோம். அந்த முறையிலே அனைத்தையும் அறிந்து, கிராமப்புற, நகர்ப்புற மாணவ, மாணவிகளுக்கிடையே உள்ள இடைவெளியைத் தகர்த்து, அவர்களின் Confidence Level, English Knowledge, Communication Skills இவற்றையெல்லாம் வளர்ப்பதற்கு ஆசிரியர்களின் தரம், பள்ளிகளில் தரமான கட்டமைப்பு, நூலகம், ஆய்வுக் கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், கழிவறை வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கவும், காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்பவும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். கல்வி வளர்ச்சியில் தமிழகத்தை அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாகத் திகழச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண் துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதை வரவேற்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில், தமிழகத்தில் விவசாயப் புரட்சி ஏற்பட வேண்டும். நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல், விவசாயம் இலாபகரமாக இல்லாமை, தொழிலாளர்கள் இல்லாதிருப்பது போன்ற காரணங்களால், வேளாண் உற்பத்தி குறைந்து வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். World Population Growth is outpacing food production என்றே சொல்லலாம். ஜனத்தொகைப் பெருக்கம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், 1959–ஆம் ஆண்டு உலக ஜனத்தொகை 300 கோடியாக இருந்தது. ஆனால், தற்போது அது 700 கோடியை எட்டிவிட்டது. 2044–ஆம் ஆண்டில் 900 கோடியாக அது உயர்ந்துவிடும். ஒரு வினாடிக்கு 4.2 என்கிற விகிதாச்சாரத்திலே ஒரு குழந்தை பிறக்கிறது.

உணவு உற்பத்தியில், முக்கியமாக அரிசி உற்பத்தியில் சீனா 17 கோடி டன்னும், இந்தியா 13 கோடி டன்னும், இந்தோனேஷியா 5 கோடி டன்னும் உற்பத்தி செய்து வருகின்றன. அபரிமிதமான பொருளாதார வளர்ச்சியில், ஒரு காலத்தில் உணவு உண்பதற்குத் தங்கத் தட்டு இருக்கலாம்; ஆனால், உண்ண உணவு இருக்காது என்ற நிலை வரலாம். "தஞ்சை, தமிழகத்தின் நெற்களஞ்சியம்; பஞ்சாப் இந்தியாவின் கோதுமை களஞ்சியம்" என்பதுபோல, "இந்தியா உலகத்தின் உணவுக் களஞ்சியம்" என்ற பெருமையைப் பெற வைப்பதில், தமிழகம் பெரும்பங்கு வகிக்க வேண்டும். மேற்கூறிய புள்ளிவிவரத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, வீட்டிற்கு ஒரு விவசாயியை உருவாக்க வேண்டுமென்ற கொள்கை முழக்கத்தோடு விவசாய வளர்ச்சிக்குத் தமிழகம் திட்டமிட வேண்டும். வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் விவசாயத்திற்கென்று தனி நிதிநிலை அறிக்கை தயார் செய்து, விவசாய வளர்ச்சிக்கான திட்டங்களை அறிவிக்க வேண்டும். பிற மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கும், தமிழக அரசின் விவசாய பட்ஜெட் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். தமிழகம் மட்டுமின்றி, பிற மாநிலங்களின் விவசாய வளர்ச்சிக்கும் தமிழகம் முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை நடந்திராத அளவிற்கு மேட்டூர் அணையை ஒருவார காலத்திற்கு முன்னதாகத் திறந்து, டெல்டா விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழக அரசு மாநிலத்தின் மின் துறையைச் சீரமைத்து, மின் பற்றாக்குறையை நீக்கி, தமிழகத்தை உபரி மின்சாரம் உள்ள மாநிலமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. மின் திருட்டு மற்றும் இழப்பைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன், தொழிற்சாலைகள், வீடுகள், விவசாயம் எனத் தனித் தனியாக மின் வழங்கிகளை–feeder–அமைத்து, மின்சாரம் வழங்கப்படும் என்ற கருத்து வரவேற்கத்தக்கது. மரபுசாரா எரிசக்திமூலம் மின் உற்பத்தி செய்வதற்கெனத் தனியாக ஒரு கொள்கை வகுக்க இருப்பதும் பாராட்டத்தக்கது. மின்சாரத்தைச் சேமிக்கும் நோக்கோடு, LED (Light Emitting Diodes) விளக்குகளைப் பயன்படுத்துவதன்மூலம்—ஏனென்றால், உலக அளவிலே இதைப் பயன்படுத்தித் கொண்டிருக்கிறார்கள்; இதன்மூலம்—80 சதவிகித மின்சாரத்தை மிச்சப்படுத்தலாம். அரசு இக்கருத்தைக் கவனத்தில் கொண்டு, தெரு விளக்குகளையெல்லாம், வீட்டு

[திரு. ரா. சரத்குமார்] [2011 ஜூன் 9

விளக்குகளையெல்லாம் LED விளக்குகளாக அதிக அளவில் உபயோகப்படுத்தினால், 80 சதவிகிதம் மின்சாரம் மிச்சப்படுத்தப்படலாம்.

இவ்வாறாக தீர்க்கமாக, ஆழமாக, தொலைநோக்குப் பார்வையுடன் சிந்தித்து, மக்களின் தேவைகளை உணர்ந்து, தமிழகத்தின் சிறப்பான வளர்ச்சிக்கு வழிகாட்டும்விதமாக, பல்வேறு உயர்ந்த அம்சங்களைக் கொண்டு, அனைத்து மக்களாலும் வரவேற்பும், பாராட்டும் பெற்று மேதகு ஆளுநர் உரை அமைந்துள்ளது என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.

மனித உரிமைகளை மீறி, போராளிகள், பொது மக்கள் என்ற வித்தியாசமின்றி, வெடிகுண்டு தாக்குதல்மூலம் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைப் பலி கொண்ட இலங்கைப் போர்க் குற்றவாளிகளைப் போர்க் குற்றவாளிகள் என ஐ.நா. சபை பிரகடனப்படுத்த வேண்டுமென்றும், இலங்கையில் சிங்களவர்க்கு இணையாக அனைத்துக் குடியுரிமைகளும் இலங்கைத் தமிழர்கள் அடையும்வரை, மற்ற நாடுகளுடன் இணைந்து, இலங்கைமீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துவது என நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களால் முன்மொழியப்பெற்று, நிறைவேறியுள்ள தீர்மானத்தைச் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக ஆதரித்து, வரவேற்கின்றேன்.

பிற்பகல் 12–15

அதேபோன்று, காலையிலே கச்சத் தீவு குறித்த விவாதத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. அனைவரும் பல கருத்துகளைச் சொல்லியிருந்தாலும், நான் ஒரேயொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதை மத்திய அரசின் External Affairs Ministry கண்காணிக்க வேண்டும். காரணம், அங்குத் தமிழகம் பல போர்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கலாம். தற்போதுள்ள நிலையில் Hambantota–வில் ஒரு துறைமுகம் தொடங்கப்பட்டிருக்கிறது; அது அங்குள்ள ஜனாதிபதியின் தொகுதி. அதன் பிறகு பாகிஸ்தான் அருகே “Gwaduvara” என்று ஒரு தளம் இருக்கிறது. அங்கு சீனாவின் கப்பல்கள் நிறுத்தப்படுகின்றன. Hambantota துறைமுகத்தைக் கட்டுவதற்கான பணி சீனாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு மேற்கு வங்கத்தின் கீழே உள்ள Coco Island அருகிலேயும் சீனாவின்



2011 ஜூன் 9] [திரு. ரா. சரத்குமார்]

தளம் இருக்கிறது. ஆக, கச்சத் தீவு 1974–ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும். நமது நாட்டின் பாதுகாப்பு குறித்து இன்று இந்த அவையிலே, கச்சத் தீவைத் திரும்பப்பெற வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட அரசின் கோரிக்கைக்கு, சமத்துவ மக்கள் கட்சி முழுமையாக ஆதரவு தெரிவிக்கிறது. அதில் வருவாய்த் துறையையும் இணைத்திருப்பது பாராட்டத்தக்கது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் அதேநேரத்தில், எனது தொகுதியின் சார்பாகவும், சில முக்கிய கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன். முதலாவதாக நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க வேண்டும் என்பது, நீண்ட நாட்களாக என் தொகுதி மக்களுடைய கோரிக்கையாக இருப்பதால், அதை என் முதல் கோரிக்கையாக வைக்கின்றேன். இயற்கை வளம் மிக்க இப்பகுதி, சுற்றுலாத் துறையிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், தொழில் வளர்ச்சியிலும், பிற கட்டமைப்பு வசதிகளிலும் பின்தங்கியிருப்பதோடு விவசாய வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்பு இருக்கக்கூடிய பகுதியாக இருப்பதால், புது மாவட்டம் உருவாக்கும்போது, இப்புது மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகள் வளர்ச்சியடைந்து, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வாய்ப்பு அதிகம் ஏற்படும்.

தென் மாவட்டங்களில் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்ற அரசின் கொள்கை அடிப்படையில், நிர்வாக வசதிக்காகவும், இப்பகுதி மக்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பாகவும் இருந்து வருகின்ற புது மாவட்ட கோரிக்கைக்குச் செவிசாய்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அறிவிக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் மொத்தம் 11 தாலுகாக்கள் உள்ளன. என் தாழ்மையான கருத்தாக நெல்லை மாவட்டத்தை இரண்டாகக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்:

நெல்லையில் 5 தாலுகாக்கள் அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, நாங்குநேரி, ராதாபுரம், திருநெல்வேலி.

[திரு. ரா. சரத்குமார்] [2011 ஜூன் 9

தென்காசியில் 6 தாலுகாக்கள் சிவகிரி, சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை, ஆலங்குளம், வீரகேரளம்புதூர்.

சட்டமன்றத் தொகுதியில் நெல்லையில் 5, அம்பை, பாளையங்கோட்டை, நாங்குநேரி, ராதாபுரம், திருநெல்வேலி.

தென்காசியில் 5 என்றால் சங்கரன்கோவில், தென்காசி, ஆலங்குளம், கடையநல்லூர், வாசுதேவநல்லூர்.

இவ்வாறு மாவட்டங்களைப் பிரிப்பதில் முன்னுதாரணங்கள் இருக்கின்றன. சிறிய மாவட்டங்களெல்லாம் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அரியலூர் 3 தாலுகாக்கள், 2 தொகுதிகள். பெரம்பலூர் 3 தாலுகாக்கள், 2 தொகுதிகள். கிருஷ்ணகிரி 5 தாலுகாக்கள், 6 தொகுதிகள். இந்த அடிப்படையில் தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு புது மாவட்டம் பிரித்து உருவாக்குவது சாத்தியமாக இருக்குமென்று கருதுகிறேன்.

தென்காசி நகரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாக்கடை மற்றும் கழிவுநீர் சிற்றாற்றில் கலக்கிறது. இதனால் குடிநீர் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதோடு, தொற்று நோய் பரவ வாய்ப்புள்ளது. எனவே, தென்காசி நகரம் மற்றும் தொகுதியின் பல்வேறு பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தென்காசியில் பல ஆண்டுகளாகக் கோரிக்கையாக உள்ள, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரும் இத்தொகுதியின் சொந்த ஊர்க்காரராக இருப்பதால் அவரும் இதுகுறித்து மனதில் கொள்வார் என்று நான் கருதுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கீழ்பாவூர், சுரண்டை போன்ற பகுதிகளில் காய்கறி, பழங்கள் உற்பத்தி அதிக அளவில் உள்ளது. காய்கறி மற்றும் பழங்களைப் பாதுகாக்க, இப்பகுதிகளில் குளிர்சாதனக் கிடங்கு வசதி தேவை என்று பல ஆண்டுகளாக வேண்டப்பட்டு வருகிறது. அரசு அதற்கும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், பாவூர் சத்திரத்தில் வேளாண் விற்பனைக் கூடம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனத்தில்



2011 ஜூன் 9] [திரு. ரா. சரத்குமார்]

கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியது, தென்காசி தலைமை அரசு மருத்துவமனை மேம்பாடு குறித்ததாகும். நான் சில நாட்களுக்கு முன்பு, இம்மருத்துவனைக்கு நேரில் சென்று விசாரித்தபோது, அங்கு Specialty டாக்டர்கள் இல்லை. C.T. Scan இல்லை. Dialysis facility இல்லை. சிறுநீரக ஆபரேஷன் செய்வதற்கும், திடீரென்று விபத்து ஏற்பட்டு அங்கு கொண்டு செல்லக்கூடிய சூழ்நிலையிலே உடனடியாக சிகிச்சை அளிப்பதற்கு வசதியில்லாத சூழ்நிலையில்தான், இன்று அந்த மருத்துவமனை இருக்கிறது. இம்மருத்துவமனை 36 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்திருக்கிறது. Specialty டாக்டர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும். 36 ஏக்கர் நிலப் பரப்பு என்று மருத்துவக் கல்லூரி கட்டும் அளவிற்கு நிலம் இருப்பதால், அரசு அங்கு மருத்துவக் கல்லூரி கட்டுவது குறித்து பரிசீலிக்க வேண்டுகிறேன்.

தமிழக அரசு வேளாண் துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமாக, பாசன வசதி மேம்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில், ராமநதி மேல்மட்டக் கால்வாய்த் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும். இதை நான் ஏன் வலியுறுத்திச் சொல்கிறேன் என்றால், இத்திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களால் 2006 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. அடுத்து ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினால், மக்கள் நலனை மனதில்கொள்ளாது, தாங்கள் அடிக்கல் நாட்டியதாலே, இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. தாங்கள் அடிக்கல் நாட்டிய திட்டம் தங்களாலேயே நிறைவேறப்பெற வேண்டும்; தங்களாலேயே திறந்து வைக்கப்பட வேண்டும் என்று ஆண்டவன் வகுத்த விதியாகக் கருதி, இத்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து நிறைவேற்ற அன்போடு வேண்டுகிறேன். இதேபோல், நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைக்கப்பட்டு செயல்வடிவம் பெறாமல் இருக்கின்ற கொங்கு மண்டல விவசாயிகளின் கனவான, எதிர்பார்ப்பான அத்திக்கடவு–அவிகாசி கால்வாய்த் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிறது, உரையை முடியுங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** அரை நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

புதிய பேருந்து நிலையத்திற்கு கண்ணியமிக்க காயிதேமில்லத் அவர்களின் பெயர் சூட்டப்படவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை வைக்கின்றேன். தென்காசியில் கட்டப்பட்டுவரும் மேம்பாலப் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். சர்வீஸ் சாலை போடப்படாத நிலையில், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. மேலும் சர்வீஸ் சாலை அமைப்பதால் கடைகளை இழந்து அவதிப்படும் வியாபாரிகளுக்கு உடனடியாக தகுந்த மாற்று ஏற்பாடு செய்து தர வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கின்றேன். மேலும் மேம்பாலப் பணிகளுக்காக அரசு அப்பகுதிகளில் வீடு கட்டி வசித்து வந்தவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை மீண்டும் பரிசீலித்து அதையும் தர முன்வரவேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் தலைசிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றான குற்றாலத்தில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். வெளிநாட்டவர்களைக் கவரும் வகையில், உலகத் தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக அமைய, குற்றாலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். இயற்கை வளமிக்க சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து வசதிகள், கழிப்பிட வசதிகள், நவீன தங்கும் வசதிகள் போன்றவை ஏற்படுத்தப்பட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுக் குழு அமைத்து இப்பகுதியின் வளர்ச்சிக்கு ஆலோசனைகள் பெறப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும். சீசன் காலத்தில் தென்காசிக்குக் கூடுதல் இரயில்கள் இயக்க மத்திய இரயில்வே துறையைத் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும். அதோடு Theme Park, wellness tourism என்று ஊக்குவிக்க வேண்டும். இதனால் நம் நாடு மட்டுமன்றி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்து வருவாய் ஈட்டித் தருவதோடு, அப்பகுதியில் நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளும் பெருக வாய்ப்புள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும், மாண்புமிகு பேரவை உறுப்பினர்களும் மக்களின் வளர்ச்சிக்காக, தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக எவ்வளவுப் பெரிய கோரிக்கைப் பட்டியலை முன்வைத்தாலும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்





தலைவி அம்மா அவர்கள் அவற்றை நல்ல முறையில் பரிசீலித்து செயல்படுத்திக் காட்டுவார்கள் என்ற நம்பிக்கையுடன் சிறப்பான வகையில் அமைந்திருக்கும் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கும் நன்றியும், வாழ்த்தும் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் வெற்றியைப் பெற்று, மூன்றாவது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாகவும், என்னுடைய உசிலம்பட்டி தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் நியாயத்தின் வழியில் இந்த ஆட்சி ஒப்படைக்கப்பட்டுள்ளது. நேர்மையின் வழியில் இந்த ஆட்சி ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீதியின் கரங்களில் இந்த ஆட்சி ஒப்படைக்கப்பட்டுள்ளது. துணிச்சல் என்பதை துணிச்சலோடு துணிச்சலாக எடுத்துவைத்து, இலட்சியத்தைக் கடுகளவும் சிதைத்திடாமல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களை வழிநடத்தியும், எங்களைப் போன்ற தோழமைக் கட்சிகளை அரவணைத்தும் வருபவர் அவர். எங்களது மாபெரும் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், "வீரம் என்பது ஒரு தலைமைக்கு வேண்டும்; அந்தத் தலைவரின் தலைமையில்தான் நாட்டின் சீரான நிருவாகத்தை வழிநடத்த முடியும்" என்று சொன்னார்கள். அதேபோல, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள், "துணிச்சலோடு தலைமை தாங்கி ஒரு நாட்டைப் பாதுகாப்பது, தலைமைப் பெருமை" என்று சொன்னார்கள். அதேபோன்று, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், "ஒரு தலைமை என்பது எஃகுக் கோட்டையாக இருக்கவேண்டும்" என்று சொன்னார்கள். அந்த வழித் தோன்றல்களின் வழிவந்து, இன்று வெற்றிக் கனி பறித்து,

[திரு. பி.வி. கதிரவன்] [2011 ஜூன் 9

மகுடத்தைப் பெற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற அன்றே கோட்டைக்கு வந்து, தேர்தல் வாக்குறுதி சம்பந்தமாக ஏழு கோப்புகளில் கையெழுத்திட்டு வாக்குறுதிகளை நிறைவேற்றத் தொடங்கியிருப்பதையும், தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் ஒன்றரை ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருப்பதையும் அகில இந்திய பார்வர்டு பிளாக் சார்பாக வெகுவாகப் பாராட்டுகிறோம்.

ஆளுநர் உரையில் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவருடைய ஆழ்ந்த சிந்தனையாலும், அறிவாற்றலாலும் இம்மாநிலத்தை மீண்டும் சிறப்பான வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்று, நாட்டிலேயே தமிழக மாநிலம் முதன்மையாகச் செயல்படும் என்று நம்புகிறேன் என்ற குறிப்பிட்டிருப்பது, மாண்புமிகு அம்மா அவர்கள்மீது அசைக்க முடியாத நம்பிக்கையைக் காட்டுகிறது. மேலும், இந்த நம்பிக்கையின் பேரில்தான், தமிழக மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அம்மா அவர்களுக்கு வாக்களித்து, அமோக வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து தமிழகத்திலுள்ள அடித்தட்டு மக்கள், விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், வியாபாரிகள், வர்த்தகர்கள், தொழில் முனைவோர்கள், படித்தவர்கள், பண்பாளர்கள், திரைப்படத் துறையினர் மற்றும் அனைத்துப் பிரிவினரும் இன்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம் என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12—25

தமிழ் மொழியின் தொன்மையையும், பெருமையையும் பெருமைப்படுத்துகின்ற வகையிலே திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை உலகம் தழுவிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட இருப்பதை, அகில இந்திய பார்வர்டு பிளாக் பாராட்டுகிறது. தமிழ் மொழியை ஆட்சி மொழி ஆக்குவதற்கும், தமிழ் மொழியை நீதிமன்றங்களில் பயன்படுத்தவும் மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி இருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.



2011 ஜூன் 9] [திரு. பி.வி. கதிரவன்]

இலவச அரிசி வழங்கும் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டத்தின்கீழ், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், மேலும், முதியோர் உதவித் தொகை ரூபாய் 500—இலிருந்து ரூபாய் ஆயிரம் ஆக உயர்த்தி வழங்கும் திட்டம் ஆகியவற்றை ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே செயல்படுத்தி, மக்களின் மனதில் இடம் பிடித்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 11—ஆம் வகுப்பு, 12—ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் திட்டம் மற்றும் தாய்மார்களுக்கு மிக்சி, கிரைண்டர், ஃபேன் இலவசமாக வழங்கும் திட்டங்கள் வருகின்ற செப்டம்பர் 15 அன்று அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவில் செயல்படுத்தப்படும் என்று கூறி இருப்பது வரவேற்கத்தக்கது. இருப்பினும், கிராமப்புற மாணவர்கள் அதிகப்படியான பேர் இன்னும் தாங்கள் அணிவதற்குக் காலணி இல்லாமல் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே, புரட்சித் தலைவரின் வழியில் தாயுள்ளத்தோடு கிராமப்புற மாணவர்களுக்கு இலவசக் காலணி வழங்கும் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ச்சிக்குத் தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிந்து அவற்றை நீக்கி, வளர்ச்சிப் பாதையில் தமிழகத்தைக் கொண்டு சென்று 10 சதவிகிதம் வளர்ச்சியடைய “தமிழ்நாடு 2025 தொலைநோக்குப் பார்வைத் திட்டமானது” தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் என்பதில் ஐயம் இல்லை.

முல்லைப் பெரியாறு மற்றும் பிற நதிநீர்ப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை பேச்சுவார்த்தையின்மூலம் தீர்வு காணப்படும்; வாய்ப்பு இல்லாதபட்சத்தில் சட்டப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்னும் அரசின் திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது. மேலும், கடந்த ஆட்சியில் ஏழை எளிய வறியவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட சொத்துக்களை மீட்க, வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்ட சொத்துக்களை மீட்க, புதிய திட்டம் கொண்டுவந்து மக்கள் இழந்த சொத்தை மீட்க இந்த அரசு எடுத்திருக்கும்

[திரு. பி.வி. கதிரவன்] [2011 ஜூன் 9

நடவடிக்கையானது, தமிழ்நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

கடைக்கோடியிலிருக்கும் கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் பாதிக்காதவண்ணம் கேபிள் டி.வி. அரசுடைமையாக்கப்படும் என்று அறிவித்திருப்பதும், மரபுசாரா எரிசக்தியைப் பயன்படுத்தி மின் துறையைச் சீரமைத்து இருள் சூழ்ந்துள்ள தமிழகத்தை மீட்டு, உபரி மின்சாரம் உள்ள மாநிலமாக மாற்றுகின்ற திட்டமும் மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

மேலும், மத்திய, மாநில அரசுகளுக்கிடையே சுமுக உறவு அமையும் வகையில், தமிழக அரசு செயல்படும் என்று அறிவித்திருப்பது, தமிழக அரசு மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள அரசு என்பதை இங்கே தெளிவாகக் காட்டுகின்றது.

தமிழகத்தில் மேலவை தேவையற்றது என்று இந்தச் சட்டமன்றத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக வரவேற்று இயற்றிய இந்தத் தீர்மானத்தை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் முழு மனதோடு வரவேற்கின்றது.

1–4–2000–க்குப் பின்னால் புதிதாகப் பணியமர்த்தப்பட்ட அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்குப் பழைய ஊதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவருவோம் என்று அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, ஒரு குழு அமைத்துச் செயல்படுத்த துரித நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்ற தொழிற்சாலைகள் அமைப்பது, பெரிய தொழிற்சாலைகளை நிறுவுவது போன்ற நிகழ்வு, இதுவரை தென் மாவட்டங்களில் இருந்ததில்லை. அதனால் மாண்புமிகு முதல்வர் அவர்களை தென் மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு இடத்திலாவது தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தென் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்ற—இந்த அவையிலே, சட்டமன்றத்திலே சிறப்புச் சேர்க்கின்ற வகையிலே அமைந்திருக்கின்ற—தேசியத் தலைவர்,



2011 ஜூன் 9] [திரு. பி.வி. கதிரவன்]

தென் மாவட்ட மக்களின் இதயத்தில் வாழ்கின்ற தெய்வீகத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரை, மதுரையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள விமான நிலையத்திற்கு வைக்க வேண்டுமென்று நாங்கள் மத்திய அரசிடமும், மாநில அரசிடமும் இதற்கு முன்னால் கேட்டு வந்தோம். மத்திய விமானத் துறை அமைச்சர் அவர்களை நானும், எங்களது பார்வர்டு பிளாக் இயக்கத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினரும் நேரில் சந்தித்தபோது, மத்திய அரசு உறுதியாக விமான நிலையத்திற்குப் பசும்பொன் தேவர் பெயர் வைக்கும் என்பதை உறுதிப்படுத்தினார்கள். திறப்பதற்கு முன்பே வைக்கப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால், இதற்கு முன்னர் இருந்த தி.மு.க. அரசு அவர் பெயரை வைக்க மறுத்துவிட்டது. கடந்த 12–9–2010–ஆம் தேதி விமான நிலையம் திறக்கப்பட்டது. அவர்களிடம் நாங்கள் எவ்வளவோ வற்புறுத்திக் கேட்டும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயர் வைக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; இந்தத் தென்பாண்டி மண்டலத்தின் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான, "தியாக வாழ்வே தேசிய வாழ்வு" என்று இந்த மன்றத்தில் அலங்கரித்திருக்கிறபடி வாழ்ந்துவந்த, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், மதுரையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள விமான நிலையத்திற்கு வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–30

மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கின்ற பெரியாறு அணையின் நீர் மட்டம், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி 142 அடியாக உயர்த்தப்படவும், மேலும் கேரள அரசின் புதிய அணை கட்டும் முயற்சி தடுத்து நிறுத்தப்படவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஐந்து மாவட்டங்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கின்றது. வைகை அணையின் கிளைக் கால்வாய்களான திருமங்கலம் பிரதானக் கால்வாய் மற்றும் விரிவாக்கக் கால்வாய்களைத் தூர் வார நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியின் முக்கிய நீண்ட நாள் கோரிக்கையான தேராப்பாறை மற்றும் அசுவமா நதித் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

[திரு. பி.வி. கதிரவன்] [2011 ஜூன் 9

உசிலம்பட்டி தொகுதியின் கோரிக்கைகள் சிலவற்றை இங்கே வைக்கின்றேன். உசிலம்பட்டி தொகுதி என்பது கிராமங்கள் சூழ்ந்த பகுதி. குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதி. கிட்டத்தட்ட இந்த 100% மக்களுக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் அனைத்துமே பயன்பெறுகின்ற வகையிலே அமைந்திருக்கின்றன என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

நான் கடந்த ஜூன் மாதம் ஒன்றாம் தேதி, எனது தொகுதியில் உள்ள சேடப்பட்டியிலே நன்றி சொல்லிக்கொண்டிருந்தபோது, தாய்மார்கள் எல்லாம் கையில் அரிசியைக் கொண்டு வந்து, இந்த அரிசி எவ்வளவு அருமையான அரிசி; நல்ல அரிசியைக் கொடுத்திருக்கிறார்கள்; இவ்வளவு நாளாக இந்த அரிசி எங்கு சென்றது; இந்த நல்ல அரிசியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள் என்று மிகவும் பாராட்டுகின்ற வகையில் சொன்னார்கள். அதற்கு நாங்கள் சொன்னோம், நீங்கள் நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள். அதனால்தான் உங்களுக்கு நல்ல அரிசி கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொன்னோம்.

உசிலம்பட்டி பகுதி வறண்டு கிடக்கின்ற, வானம் பார்த்த பூமியாக இருப்பதை செழுமைப்படுத்த கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்னால், சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. பி.என். வல்லரசு அவர்களின் தீவிர முயற்சியால் 58 கால்வாய்த் திட்டம் ரூபாய் 33 கோடியில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த காலத்தில், அதனை ரூ.78 கோடியாக உயர்த்திக் கொடுத்தார்கள். அதற்குப் பின்னால் கடந்த ஐந்து ஆண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் எந்த வேலையும் நடைபெறாமல், இன்னும் 13 ஆண்டுக் காலமாக முற்றுப்பெறாமல் இருக்கின்ற திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரைவில் நடைமுறைப்படுத்தி, அவர்களே அதனைத் திறந்து வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, உசிலம்பட்டி தொகுதி, உண்மையில் பெண்கள் சிசுக் கொலை நடைபெறுகின்ற பகுதி என்பதால், அந்தப் பகுதியில் முதன்முதலாகத் தொட்டில் குழந்தைத் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். அந்தப் பகுதியில் பெண்களுக்கென்று தனியாக ஒரு பள்ளிக்கூடம் இல்லை. பெண்களுக்கென்று தனிப் பள்ளிக்கூடம் அமைத்துத் தர வேண்டும். பாலிடெக்னிக் என்பது அந்தத் தொகுதியிலே கிடையாது. அதேபோல் பெண்கள் கல்லூரி, பொறியியல் கல்லூரி இல்லை. இவற்றையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2011 ஜூன் 9] [திரு. பி.வி. கதிரவன்]

தமிழ்நாடு மின் வாரியத்தின்மூலம் வாலாந்தூரில் 110 கிலோ வாட் துணை மின் நிலையமும், அதேபோன்று விக்கிரமங்கலம் பகுதியில் 33 கிலோ வாட் துணை மின் நிலையம் 1:5 என்ற முறையில் உயர்த்தவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவை இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன. அவற்றை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்பதையும், எழுமலை, சூலப்புரம் மற்றும் சாப்டூர் பகுதியில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தின் பழங்குடி மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வனநில உரிமையை உறுதி செய்யும் வகையிலே மத்திய அரசின் வன உரிமைச் சட்டம் 2006–ஐ நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது உசிலம்பட்டி தொகுதியில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் மல்லபுரத்திலிருந்து மயிலாடும்பாறை செல்ல கிட்டத்தட்ட 120 கிலோ மீட்டர் தூரத்தில் சுற்றி வருகின்ற பாதையைச் சுருக்கி, 15 கிலோ மீட்டர் செல்லுகின்ற வகையில் மல்லபுரத்திலிருந்து மயிலாடும்பாறை வரையிலான மலைப் பாதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அமைக்கப்பட்டது. ஆனால், இன்னும் அதில் போக்குவரத்து விடவில்லை. மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற அந்தப் பகுதியில் அரசுத் தரப்பில் பஸ் போக்குவரத்து விடவேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பி.வி. கதிரவன்] [2011 ஜூன் 9

*பிற்பகல் 12–35*

கள்ளர் சீரமைப்புத் துறையைப் பொறுத்தவரையில், மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களிலே கள்ளர் சீரமைப்புத் துறைப் பள்ளிகள் இருந்து வருகின்றன. அந்தப் பள்ளிகளில் சரியான கட்டடங்கள் இல்லை. பழைய கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஆசிரியர் காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. அவற்றை நிரப்பித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக எனது தொகுதியில் செல்லம்பட்டி, உசிலம்பட்டி, சேடப்பட்டி ஆகிய ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த ஒன்றியங்களில், நிலத்தடி நீர் கீழே சென்றுவிட்டது என்பதற்காக விவசாயத் துறையிலிருந்து மின் இணைப்பிற்கு எந்த permission-ம் கொடுக்கப்படுவது இல்லை. அந்தப் பகுதியில் இருக்கிற கண்மாய்களை ஆழப்படுத்தி நீராதாரத்தைக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அதிலும் உசிலம்பட்டியில் இருக்கிற கண்மாய், தூர் வாரப்படாமல் கடந்த 10 ஆண்டுகளாகக் கிடக்கிறது. அதைத் தூர் வாரி உசிலை நகருக்குப் பயன் கிடைக்கிற வகையிலே செயல்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு இருந்ததுபோன்று கடைகளையும் கட்டித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, தாசில்தார் அலுவலகம், சப்–ரெஜிஸ்தரார் அலுவலகம் ஆகியவை ஆங்கிலேயர் காலத்திலிருந்து 25 சென்ட் நிலத்திலே இருக்கின்றன. அதிலும் முக்கிய சாலையில் இருக்கின்றன. அரசுத் தரப்பில் புதிய கட்டடங்கள் கட்ட பணம் ஒதுக்கப்பட்டும், இன்னும் அந்த வேலை நடைபெறாமல் இருக்கிறது. அவற்றை multi–storied building–ஆகக் கட்டியோ அல்லது அடிப்படை வசதிகள் செய்து வேறு இடத்தில் கட்டியோ கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** தமிழக ஆளுநருடைய உரையை ஒட்டுமொத்தமாக எங்களுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்று நன்றி தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.



2011 ஜூன் 9]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 14–ஆவது சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரைமீது புதிய தமிழகம் கட்சியின் சார்பாகக் கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கக்கூடிய உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் 200 ஆண்டுக் காலத்திற்கு முன்பே தங்களை ஈடுபடுத்திக் கொண்ட வீரபாண்டிய கட்டபொம்மன், தளபதி சுந்தரலிங்கம், உலகக் கவிஞர் பாரதியார், உமறுப் புலவர், வாஞ்சிநாதன், வ.உ.சி. போன்ற சுதந்திரப் போராட்டத் தியாகிகள், சமுதாயப் போராளிகளையெல்லாம் அடையாளப்படுத்திப் பெருமைப்படுத்தியது ஒட்டப்பிடாரம். அவர்களையெல்லாம் தமிழ் உலகிற்குத் தந்த ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலேயிருந்து என்னை 10 ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு வெற்றி பெற வைத்து, இந்த மாமன்றத்திற்கு அனுப்பி இருக்கக்கூடிய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்கள், குறிப்பாக தேவேந்திர குல வேளாளர்கள், முக்குலத்துப் பெருமக்கள், நாடார் இனப் பெருமக்கள், பிள்ளைமார் இனம் என்று அனைத்துச் சமுதாய மக்களுக்கும், சமுதாய நல்லிணக்கத்திற்கு அடிகோலக்கூடிய வகையிலே என்னை வெற்றிபெற வைத்த அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2001–க்குப் பிறகு ஏழையெளிய மக்களுக்காகத் தொடங்கப்பட்ட இந்தப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாகக் கடந்த பத்து வருடத்தில் சட்டமன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ ஒரு பிரதிநிதியும் இல்லாத வேளையிலும்கூட, நான் கடந்த 10 ஆண்டுக் காலமாக ஏழையெளிய மக்களுக்காகக் குரல் கொடுத்து, புதிய தமிழகம் கட்சியை வழி நடத்தி வருவதற்கு, எனக்குப் பல்வேறு வழிகளிலே, அவர்கள் இப்போது உயிரோடு இல்லையென்றாலும்கூட உற்றத் துணையாக விளங்கி என்னை ஈன்றெடுத்து, கடந்த 30 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக பொது வாழ்க்கையிலே நான் ஈடுபடுவதற்கு உற்ற துணையாக இன்றும் விளங்குகின்ற என்னுடைய தாய் தாமரை அம்மாள், தந்தை

கருப்பசாமி அவர்களுக்கு இந்த வெற்றியை நான் காணிக்கையாக்குகிறேன். அதுபோல, கடந்த 10 ஆண்டுக் காலமாக எல்லாச் சூழ்நிலைகளிலும் என்னோடு உற்ற துணையாக விளங்கிய புதிய தமிழகம் கட்சியினுடைய தொண்டர்கள், பொறுப்பாளர்கள் அனைவருக்கும் அதேபோல தென் தமிழக தேவேந்திர குல மக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—40

சில பேர் வரலாறுகளில் எப்போதாவது இடம் பெறுவார்கள். சில பேர் வரலாறுகளை எழுதி வைப்பார்கள். ஆனால் வரலாற்றைப் படைப்பவர்கள் ஒரு சிலர். அந்த வரிசையில் மூன்றாவது முறையாகத் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல்வேறு வரலாறுகளுக்குச் சொந்தக்காரர். கடந்த மூன்று மாதத்திற்கு முன்பு தமிழகத்தினுடைய நிலை என்னவாக இருந்தது என்று சொன்னால், ஒரு குடும்பத்தினுடைய ஆட்சி, அரசியல், சமூக, பொருளாதார வாழ்விலே ஆதிக்கம் செலுத்தி, இனிமேல் தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு விடிவுகாலம் கிடைக்குமா, ஆட்சியை மாற்றி அமைக்க முடியுமா, அதற்கு யார் தலைமைத் தாங்குவார்கள், யாராவது இந்தத் தமிழ் மக்களை விடுதலை செய்வதற்கு முன்வருவார்களா என்று இந்தத் தமிழகத்திலேயிருந்து மட்டும் அல்ல; தமிழகத்தினுடைய எல்லையிலிருந்து 10,000, 20,000 மைல்களுக்கு அப்பால் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் எண்ணி ஏங்கின. ஈழத் தமிழ் மக்கள் எண்ணி ஏங்கினார்கள். இதோ தமிழகத்திலே வாழக்கூடிய தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல; உலகெங்கும் வாழக்கூடிய தமிழ் மக்களுக்கும் நான் விடுதலை கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்று அந்த மிதமிஞ்சிய பண பலத்தையும், ஆட்சி பலத்தையும் எதிர்கொண்டு, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே தமிழக மக்களுக்கு விடிவுகாலத்தை உருவாக்கி, இன்று மகத்தான ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அதேபோல என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலேயும், எங்களுக்கு அளிக்கப்பட்ட நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலேயும் பாடுபட்ட கூட்டணிக் கட்சியினுடைய அனைத்து பொறுப்பாளர்களுக்கும், நான் எண்ணி மலைக்கின்ற வகையில் எந்தவிதமான சிறிய எதிர்பார்ப்புகளும்





இல்லாமல் அ.இ.அ.தி.மு.க. தொண்டர்கள் பாடுபட்டார்களே அந்தத் தொண்டர்கள் அனைவருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, கூட்டணிக் கட்சியினுடைய முன்னணிச் செயல்வீரர்கள் தே.மு.தி.க., இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்டு கட்சி, சமத்துவ மக்கள் கட்சி, கொங்குப் பேரவை, குடியரசுக் கட்சி, பார்வர்டு பிளாக், மனித நேய மக்கள் கட்சி ஆகிய கட்சிகளின் முன்னணிச் செயல் வீரர்களுக்கும், தூத்துக்குடி மாவட்டத்தின் வேட்பாளர்களான எங்களுக்கெல்லாம் பிரச்சாரம் செய்த அம்மா அவர்களுக்கும், அதேபோல இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய மூத்த தலைவர் நல்லக்கண்ணு அவர்கள், தா. பாண்டியன் அவர்கள், அன்புச் சகோதரர் சரத்குமார் அவர்கள், அதேபோல, முன்னாள் அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் ஆகியோர் எல்லாம் எனக்குப் பிரச்சாரம் செய்தார்கள்; அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் உரித்தாக்குகிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தமட்டிலும் தமிழகத்தினுடைய வரலாற்றில் இது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது என்று நான் கருதுகிறேன். கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு வழிகாட்டி. மாவோயிஸ்டுகளுக்கு Mao Red Book ஒரு வழிகாட்டி, லிபியாவினுடைய அதிபர் கடாபி அவருடைய பச்சைப் புத்தகம் ஒரு வழிகாட்டி. அதேபோல, இன்றைய ஆளுநர் உரை தமிழ்நாட்டு மக்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு அல்ல; அடுத்த தலைமுறைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வழிகாட்டியாக இருக்கக்கூடியதாக நான் கருதுகிறேன். இதில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய அனைத்துக் கருத்துகளையும் பேசுவதற்குப் போதிய நேரம் இருக்காது. இருந்தாலுங்கூட, ஒரு சில கருத்துகள்மீது எனது கருத்துகளைப் பதிய வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, நான்காவது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய மிக முக்கியமானது, கடந்த ஆட்சியில் பயமுறுத்தி பலருடைய சொத்துக்கள் பறிக்கப்பட்டுள்ளன; இத்தகைய சொத்துக்கள் மீட்கப்பட்டு உரிய நபர்களுக்கு மீண்டும் வழங்க ஏதுவாக புதிய சட்டம் இயற்றப்படும் என்று சொன்னது தமிழகத்திலே எந்த மாவட்டத்திற்குப் பொருந்துமோ, பொருந்தாதோ, ஆனால் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு

மிக அதிகமாகப் பொருந்தும். ஏனென்று சொன்னால், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஏழையெளிய விவசாய மக்களுடைய நிலங்கள் பெரிய, பெரிய கம்பெனிகளால் போலிப் பத்திரங்கள் செய்யப்பட்டு, பட்டா மாறுதல் செய்யப்பட்டு இருக்கின்றன. கோஸ்டல் எனர்ஜென்ட் என்ற ஒரு கம்பெனி இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்களை வளைத்து, போலிப் பத்திரம் தயார் செய்து 4 கோயில்களைக் கபளீகரம் செய்திருக்கின்றது. 4 சமுதாயத்தினருடைய சுடுகாடுகள் உள்ளடங்கி போலிப் பத்திரம் செய்துள்ளது. 6 ஏரிகள் உள்ளடங்கி இருக்கின்றன. இவை எல்லாம் அரசாங்கத்தினுடைய சொத்துக்கள். இவற்றையும் சேர்த்து பட்டா போட்டிருக்கிறார்கள். அதேபோல, இன்பாரத் என்ற கம்பெனியினர் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வரையிலும் ஏழையெளிய மக்களை ஏமாற்றி பட்டா போட்டுள்ளார்கள். எனவே, இது ஒரு சமூக evil; மிகப் பெரிய குற்றம். எந்தக் கட்சிக்காரர்கள் இதற்குத் துணை போனாலும் அவர்கள்மீது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரபட்சம் காட்டாமல் நடவடிக்கை எடுத்து அத்தனை சொத்துக்களையும் நீங்கள் மீட்டு ஏழையெளிய மக்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

பிற்பகல் 12–45

அதேபோல, இப்பொழுது குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்புத் திட்டம் (Crime and Criminal Tracking Network System) என்று ஒட்டுமொத்தமாக, சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில், குறிப்பாக கொலைகள், கொள்ளைகள் இந்த இரண்டும் தடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால், இதிலே அரசியல் தலையீடு எந்தக் காரணத்தைக்கொண்டும் இருக்கக்கூடாது. அதற்கு நாம் வழிவகை செய்தால் மட்டும்தான் இந்த இரண்டு மிகப் பெரிய சமூகக் குற்றங்களையும் தடுத்திட முடியும். எனவே, அந்த அரசியல் தலையீடு இல்லை என்று தெரிந்தாலே அதிகாரிகள் அச்சப்படுவார்கள். அவர்கள் சரியாகப் போகிறார்களா, இல்லையா என்பதை நாம் சரியாகக் கண்காணிக்க முடியும். அரசியல் தலையீடு இருக்கின்றபொழுது குற்றங்கள் தடுக்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே, விஞ்ஞான முறைகளைக் கையாளுகின்ற அதேநேரத்தில், அரசியல் தலையீடும் இல்லாத வகையிலே பார்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் இந்த ஆளுநர் உரையிலே என்னுடைய கருத்தாகும்.



அடுத்தது, தமிழ் மொழியை வளர்ப்பதற்காக, கோவையிலே செம்மொழி மாநாடு கூட்டினார்கள். ஆனால், அதே சமயத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தஞ்சையிலே துவக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு பைசாகூட நிதி கொடுக்காமல் முடக்கிய வரலாறும் உண்டு. இன்று அதே தமிழ்ப் பல்கலைக்கழகத்தை மீட்டெடுக்கக்கூடிய வகையில், போதிய நிதி ஒதுக்கப்படும் என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, திருவள்ளுவர் அவர்களுடைய உயர்ந்த திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் போன்றவர்களுடைய கவிதைகள், கட்டுரைகள் உலக மொழிகளிலே மொழிபெயர்க்கப்படும் என்று அறிவித்திருப்பது, உண்மையிலேயே தமிழை வளர்ப்பதற்குண்டான, ஆக்கப்பூர்வமான நடவடிக்கையாகும்.

மேலும், தமிழக அரசு இப்பொழுது பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறது. குறிப்பாக முதியோர் உதவித் தொகை, விதவைகள், ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர் ஆகியோருக்கு என்று பல சமூகத் திட்டங்கள் வருகின்றன. ஆனால், அந்தச் சமூகத் திட்டங்களெல்லாம் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்று சொன்னால், 2002–ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய வழிகாட்டுதலில் தயாரிக்கப்பட்டிருக்கக்கூடிய B.P.L. என்று சொல்லக்கூடிய வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்களுடைய பட்டியலை வைத்துக்கொண்டு நிச்சயமாக இந்தத் திட்டங்களை அமலாக்க முடியவே முடியாது. எனவே, புதிய வழிகாட்டுதலின்படி ஒரு B.P.L., அதாவது, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டே தீரவேண்டும். இல்லையென்று சொன்னால், என்னதான் திட்டங்கள் கொண்டுவந்தாலுங்கூட, நூற்றுக்கு ஓரிரு பேருக்காவது சென்றடையுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இப்போது முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு 17 பாயின்ட்ஸ் வேண்டுமென்று சொல்கிறார்கள். இதை யார் தயாரிக்கிறார்கள் என்று சொன்னால், விநோதமாக, விந்தையாக இருக்கிறது. சாதாரண ஒரு சத்துணவு அமைப்பாளர், ஒரு அங்கன்வாடி அமைப்பாளர்—வீட்டுக்குச் செல்வது, ஓட்டு வீடா, காரை வீடா என்று பார்ப்பது, ஆடு இருக்கிறதா, மாடு இருக்கிறதா என்று பார்ப்பது–உடனடியாக அவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2011 ஜூன் 9

இருக்கிறார்களா, இல்லையா என்று முடிவு செய்து அறிவித்துவிட்டுப் போய்விடுகிறார்கள்.

நாங்கள் கடந்த ஒரு மாத காலமாக நன்றி தெரிவிக்க செல்கின்றபொழுது பெறக்கூடிய மனுக்கள் 1,000 என்று சொன்னால், அதில் 900 மனுக்கள் முதியோர் உதவித் தொகை கேட்டே பெறப்பட்டன. எனவே, அடுத்த தேர்தலுக்கு மட்டுமல்ல; அடுத்த தலைமுறைக்கும் நிச்சயமாக இந்த அரசு தொடர்ந்து தமிழ்நாட்டிலே இருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக அம்மா அவர்கள் வீற்றிருப்பார்கள். ஆனால், நிறைய திட்டங்கள் அறிவிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்தச் சமூக நலத் திட்டங்கள், முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஊனமுற்றோர், ஆதரவற்றோர் இதுபோன்ற திட்டங்களை மட்டுமே நூற்றுக்கு நூறு அமலாக்குவதற்குண்டான சரியான வழிமுறைகளைக் கையாண்டாலே, இந்த அரசு மிகப் பெரிய வெற்றியை அடைந்துவிடும் என்பதே நான் வைக்கக்கூடிய கருத்தாகும்.

அடுத்தது, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே பல்வேறு சமூகப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஏற்கெனவே அந்தப் பகுதி வறண்ட பகுதியாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகின்றபோது, இரண்டு கருத்துகளை வலியுறுத்தியுள்ளார்கள். முதல் கருத்தாக, தன்னுடைய தொகுதியிலே ஏழை மக்களுடைய சொத்துக்கள் 2,000 ஏக்கர் நிலத்தை போலி பட்டா தயாரித்து, அதை பட்டா போட்டு ஒரு கம்பெனி நடத்திக்கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், நேற்றைக்கு முன்தினம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர், மரியாதைக்குரிய திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசியபோது, திண்டுக்கல்லிலே 5,000 ஏக்கர் நிலம் பினாமி பெயரிலே இருக்கின்றது; அதை மீட்டுத் தரவேண்டும் என்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்குரிய விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதேபோல,



2011 ஜூன் 9] [திரு. பி. தங்கமணி]

டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னதுபோல எங்களிடத்திலே அதற்குண்டான ஆவணங்களைக் கொடுத்தால், மாண்புமிகு அம்மா அவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

முதியோர் உதவித் தொகையைப் பொறுத்தவரையில், இங்கு பேசுகின்ற அனைத்து உறுப்பினர்களும் வலியுறுத்திக் கூறுவது, தவறு நடந்திருக்கிறது என்று. இந்த அவைக்கு ஒரு உண்மையைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், கடந்த ஐந்தாண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் மட்டுமே 11,65,000 பேர்களுக்கு போலியாக, அதாவது தகுதியில்லாத நபர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்ற செய்தியைச் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள் நிச்சயமாக வருங்காலத்தில் தகுதியான நபர்களுக்கு வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்ற செய்தியைச் சொல்லி, உறுப்பினர் சொன்னது குறித்து நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்னும் 5 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) 15 நிமிடம் ஆகிவிட்டது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** 20 நிமிடம் கொடுங்கள், உரையை முடித்துவிடுகிறேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி அடிக்கடி வறட்சிக்கு இலக்காகும் பகுதி. தூத்துக்குடி மாவட்டம் கடலோர மாவட்டம் ஆகும். விளாத்திக்குளம், புதூர், தூத்துக்குடி, கருங்குளம் ஒன்றியங்கள் எல்லாமே நல்ல நிலத்தடி நீர் அதிகம் இல்லாத பகுதிகள். ஆனால், அங்கே குடிப்பதற்கே இப்போது எண்ணற்ற கிராமங்களில் கிராமக் குடிநீர்த் திட்டத்தை மட்டுமே வைத்து குடிநீர்ப் பிரச்சினை சமாளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஸ்டெர்லைட் கம்பெனி, இன்பாரத் கம்பெனி மற்றும் அப்பகுதியில் உள்ள கம்பெனிகளும், சுற்றியிருக்கக்கூடிய கம்பெனிகளும் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து ஆயிரக்கணக்கான லாரிகளிலே நீர் திருடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு, ஏற்கெனவே 2003–ஆம் ஆண்டு நிலத்தடி நீர்ப் பாதுகாப்புச் சட்டம் என்று கொண்டுவரப்பட்டு, இன்னும் முழுமையாகச் சட்டமாக்கப்படாமல்

இருக்கிறது. எனவே, தமிழ்நாடு அரசின் சார்பாக அந்த நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு உடனடியாகச் சட்டம் இயற்றி, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டிலும் மிக முக்கியமாக, தூத்துக்குடி ஒன்றியம் மற்றும் கருங்குளம் பகுதிகளிலே வாழக்கூடிய ஏழையெளிய மக்கள், விவசாய மக்கள் பாதிக்கக்கூடிய வகையில், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கெனடியன் கால்வாய் என்ற ஒரு உபரிநீர் கால்வாய்மூலம் வேறு ஒரு பகுதிக்கு நீர் கொண்டு செல்வதற்காக அங்கு ஏற்கெனவே இருந்த கெனடியன் அணையினுடைய நீர் மட்டம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, தூத்துக்குடி ஒன்றியம், கருங்குளம் ஒன்றியம், ஸ்ரீவைகுண்டம் பகுதியிலே பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய நிலை இருக்கிறது. ஒரு பகுதி விவசாயிகளுடைய கண்ணீரை எடுத்து, இன்னொரு பகுதிக்குப் பன்னீராகத் தெளிப்பது நியாயமாக இருக்காது. எனவே, உயர்த்தப்பட்ட கெனடியன் அணைக்கட்டு உடனடியாக உடைத்தெறியப்பட வேண்டும். அப்போதுதான், ஏற்கெனவே அந்தப் பகுதியிலே வளம் பெற்ற விவசாயிகள் வாழ்வு மலர்ந்து இருக்க முடியும். ஆகவே, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுடைய இட ஒதுக்கீடு. கடந்த 50 ஆண்டுக் காலமாக முறையாக அமலாக்கப்படாததால் இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் எத்தனை சட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும், எத்தனை திட்டங்கள் கொண்டுவரப்பட்டாலுங்கூட, இன்னும் அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் முழுமையாக உயர்ந்தபாடில்லை. நிலமற்றவர்கள் என்ற கணக்கு பார்த்தால், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்கள் என்று கணக்கெடுத்தால், அதில் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலானவர்கள் இருப்பார்கள். எனவே, குறிப்பாகப் பல்வேறு ஆண்டுகளாக நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவுப் பணியிடங்கள், இலட்சக்கணக்கான பின்னடைவுப் பணியிடங்கள் அரசுப் பதவிகளில் இருக்கின்றன. எனவே, அந்தப் பின்னடைவுப் பணியிடங்களை எல்லாம் நிரப்புவதற்கு தமிழ்நாடு அரசு உரிய கவனம் செலுத்திட வேண்டும். அதுவும் குறிப்பாக உயர் பதவிகளிலே வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.



தமிழ்நாட்டில் 24 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஒரு பல்கலைக்கழகத்தில்கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் துணை வேந்தர்களாக இல்லை. அரசு செயலாளர்கள் 34 பேர்களில் ஓரிருவர் மட்டும் இருக்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், இரும்பு மங்கையாக இருக்கக்கூடிய அம்மா அவர்களிடத்திலேதான் நாங்கள் இந்தக் கோரிக்கையை வைக்கமுடியும். சமுதாய நலனுக்கு எப்படியெல்லாம் அவர்கள் குரல் கொடுக்கிறார்களோ, உற்ற துணையாக விளங்குகிறார்களோ அதேபோல தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலை உயர வேண்டுமென்று சொன்னாலும் அவர்கள் ஒருவரால்தான் சாத்தியம் ஆகும்.

இன்னுங்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஆளுநர் உரை வாயிலாக வேண்டிக்கொள்வது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தேவேந்திர குல மக்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு, அருந்ததிய மக்களுக்குக்கூட அமைச்சரவையிலே கூடுதல் பொறுப்பு கொடுத்து நீங்கள்தான் ஒரு அடையாளத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த அளவிற்கு உயர்ந்த பதவிகளிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களோ அந்த அளவிற்கு அந்தச் சமுதாயம் மதிக்கப்படும். பொதுவாக நாடெல்லாம் Anti–Dalit Psyche prevail ஆகி இருக்கும். அவை உடைத்தெறியப்பட வேண்டுமென்று சொன்னால், அதுவும் குறிப்பாக தமிழகத்திலே மிகப் பெரிய ஒரு சமுதாயப் புரட்சி ஏற்படவேண்டுமென்று சொன்னால் அது அம்மா அவர்களால்தான் முடியும். அதன் காரணமாகத்தான் இப்படிப் பல்வேறு கோரிக்கைகளை வைக்கிறோம்.

பிற்பகல் 12–55

அடுத்து, நீண்ட நெடுநாட்களாக, தேவேந்திர குல வேளாளர்கள், தங்களுடைய பெயரை, பள்ளர், குடும்பர், காலாடி என்ற பெயரையெல்லாம், ஒரே பெயராக தேவேந்திர குல வேளாளர்கள் என்று வைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் அன்புடன் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மேலும், மதுரையிலிருந்து தெற்கு மாவட்டங்கள் மிக மிகப் பின்தங்கியிருக்கின்றன. தென் தமிழகம் முன்னேற வேண்டுமென்று சொன்னால், முதலிலே தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், அந்தத் தொழிற்சாலைகள் எந்தக்

காரணத்தைக் கொண்டும் சுற்றுப்புறச்சூழலைப் பாதிக்கக்கூடிய தொழிற்சாலைகளாக இருக்கக்கூடாது. தூத்துக்குடியிலே ஸ்டெர்லைட் ஆலை இருக்கிறது. அந்த ஸ்டெர்லைட் ஆலையால் காற்று மாசுபடுகிறது, நிலத்தடி நீர் மாசுபடுகிறது. ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்லுகின்ற காரணத்தினாலே உயிர் இழப்பு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் வரக்கூடாது. கடந்த ஆட்சியில் 30 தொழிற்சாலைகளைக் கொண்டு வந்தார்கள். திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்திலேயே நின்றுவிட்டன. நம்முடைய ஆட்சியில் இனிமேல் எந்தத் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டாலும், தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகரிலே என்று மாறி மாறி இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தென் தமிழகத்துக்கு உரிய முக்கியத்துவம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், நான் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கேட்டுக்கொள்வது, ஆண்டுக்கு ஒருமுறையாவது சட்டமன்றக் கூட்டத்தை மதுரையிலே நடத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதன் வாயிலாகத் தென் தமிழகத்துக்கு முக்கியத்துவம் கிடைப்பதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும்.

மதுரை விமான நிலையத்திற்குப் பெயர் வைக்க கடந்த 10 ஆண்டுக் காலமாக நாங்கள் குரல் கொடுத்துவருகிறோம், ஏனென்று சொன்னால், சுதந்திரப் போராட்ட காலத்திற்கு முன்பு அப்பொழுதே ஆங்கிலேயருடைய காலத்திலேயே அந்த மதுரை விமான நிலையத்திற்கு நிலம் கொடுத்தவர்கள் சின்ன உடைப்பு கிராமத்தைச் சேர்ந்த தேவேந்திர குல வேளாளர்கள். எனவே, அரசாங்கத்தினுடைய விதிகளின்படி, யார் நிலத்தை அரசாங்கத்தினுடைய கட்டடங்களுக்குக் கொடுக்கிறார்களோ அவர்கள் விரும்பக்கூடிய பெயரைச் சூட்ட வேண்டும் என்பது மரபு. அந்த அடிப்படையிலேயும், சமுதாயத்தில் நல்லிணக்கத்தை உருவாக்கக்கூடிய வகையிலேயும் விமான நிலைய முனையத்துக்கு முத்துராமலிங்கத் தேவர் பெயரையும், இன்னொரு முனையத்துக்குத் தியாகி இம்மானுவேல் சேகர் அவர்கள் பெயரையும் சூட்டவேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை வைத்து, இதிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா. (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், பல்கலைக்கழகத் துணை வேந்தர் நியமிப்பதிலே தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்க வேண்டுமென்று சொன்னார். சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நியமிக்கப்படுகின்றபோது, எந்தத் தகுதியின் அடிப்படையில் நியமித்தார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் அப்படி நடக்காது. நிச்சயமாக தகுதியானவர்களையும், முறையானவர்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியமிப்பார்கள் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையவனுமாகிய இறைவனின் திருப்பெயரால் தொடங்குகின்றேன். ஊழல் மலிந்த, அராஜகம் நிறைந்த, சுயநல ஆட்சியை வீழ்த்த அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து மக்கள் விரும்பிய கூட்டணியை அமைத்து, மக்களின் மௌனப் புரட்சிக்கு வித்திட்டு, நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலிலே வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்று, தற்போது மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் எங்கள் அன்புச் சகோதரிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அவரது தலைமையின்கீழ் செயல்படும் இலட்சோப இலட்ச அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் முதலில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழகத்தில், ஜனநாயகத்தைக் காப்பாற்றும் இந்த அறப் பணியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் இடம்பெற்ற எங்கள் கூட்டணிக் கட்சிகளான தேசிய

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2011 ஜூன் 9

முற்போக்குத் திராவிடக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, புதிய தமிழகம், சமத்துவ மக்கள் கட்சி, இந்திய குடியரசுக் கட்சி, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி, கொங்கு இளைஞர் பேரவை, அகில இந்திய மூவேந்தர் முன்னணிக் கழகம் ஆகியவற்றின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர்களின் நலனுக்கெதிரான கூட்டணியைத் தோல்வியுறச் செய்யவேண்டுமென்று வீறுகொண்டு எழுந்து செயல்பட்ட ‘நாம் தமிழர்’ கட்சியின் தலைவர் சகோதரர் சீமானுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மிரட்டல்கள், இழிசொற்கள் எல்லாம் தாங்கிக்கொண்டு நடுநிலையுடன் செயல்பட்டு, தமிழகத்தின் ஜனநாயகம், பணநாயகமாக மாறாமல் தடுத்து நிறுத்தி அதைத் தடுத்து நிறுத்துவதையே ஒரு சவாலாகவே கருதி மன உறுதியுடன் செயல்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையாளர் திரு. குரேஷி அவர்களுக்கும், திரு. ப்ரவீண்குமார் தலைமையிலான தமிழகத் தேர்தல் ஆணையத்தின் அத்துணை அதிகாரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

அனைத்து வகையான கணிப்புகளையும் தவிடுபொடியாக்கி, சுயநலனை விட நாட்டு நலனே மேல் என்பதை நெஞ்சில் சுமந்து தங்கள் கையில் உள்ள ballot எனும் வாக்குச் சீட்டுகளை, bullet–களாக மாற்றி சமீபத்தில் எகிப்தில் நடைபெற்றதுபோல ஒரு அமைதிப் புரட்சியை தமிழகத்திலும் ஏற்படுத்தி நல்லாட்சி ஏற்பட வழிவகை செய்த தமிழக வாக்காளப் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

16 ஆண்டுகளுக்கு மேலாக, தன்னலம் பாராமல் அளப்பரிய தியாகங்களுடன் மனித நேய சேவைகளைச் செய்த தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தின் கண்மணிகளுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனித நேய மக்கள் கட்சி இடம்பெற்ற அ.தி.மு.க. கூட்டணி வெற்றிபெற அயராது உழைத்த என் கட்சியின் சொந்தங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.



2011 ஜூன் 9] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

நான் போட்டியிட்ட இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தல், உலகின் பல்வேறு பகுதிகளிலே வாழும் தமிழர்களின் கவனத்தை ஈர்த்துவிட்டது. ஈழ மண்ணில் தமிழர்களைக் கொன்று குவித்த இராஜபக்சே என் நண்பர் என்று தன்னைச் சொல்வதிலே பெருமைகொள்ளும் ஒருவர், காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனக்கு எதிராகக் களம் இறக்கப்பட்டார். அவர் மட்டும் அல்ல; காங்கிரஸ் கட்சியும்கூட இராஜபக்சேவின் நண்பராகத்தான் இருந்து வருகிறது. இதனால்தான் டெல்லியில் நடைபெற்ற ஊழல் மலிந்த Common Wealth போட்டிகளின் நிறைவு விழாவிற்கு இராஜபக்சேவிற்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு அளித்தார்கள். அந்தச் சிவப்புக் கம்பளம் என் தமிழ் மக்கள் சிந்திய இரத்தத்தின் அடையாளமாகத்தான் எனக்குக் காட்சியளித்தது.

காங்கிரஸ் கட்சியின் இராஜபக்சே ஆதரவை நிராகரித்து அவரது நண்பரான காங்கிரஸ் வேட்பாளருக்குச் சரியான பாடம் கற்பித்து என்னைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெற வைத்த இராமநாதபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் வெற்றிக்காக அரும்பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக் கட்சிகளின் நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் என்னுடைய நன்றி. நடந்து முடிந்த இந்த 14–ஆவது சட்டப் பேரவைக்கான தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் துடிப்புடனும், வேகத்துடனும், விவேகத்துடனும் இந்தப் புதிய அரசின் ஆரம்ப கால நடவடிக்கைகள் அமைந்துள்ளதை மனித நேய மக்கள் கட்சி வரவேற்கிறது.

அருமையான 6 மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்த ஆட்சி தொடங்கியுள்ளது. அனைவரையும் அரவணைக்கும் வகையில் தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் மனதில் கொண்டு ஆளுநர் உரையும் வழங்கப்பட்டுள்ளது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள பல்வேறு அம்சங்களை நிறைவேற்றுவதற்கான வழிவகை, ஆளுநர் உரையிலே இடம்பெற்றுள்ளது. அதை மனித நேய மக்கள் கட்சி மனமார வரவேற்கிறது.

கடந்த அரசு, அவசர கோலத்தில் நடைமுறைப்படுத்திய சமச்சீர் கல்விக் கொள்கையை மேல் ஆய்வுக்காக இந்த அரசு நிறுத்தி வைத்துள்ளதை மனித நேய மக்கள் கட்சி வரவேற்கிறது. சிறுபான்மை மக்களின் மொழிகளான உருது, அரபி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவற்றை, அந்த மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் மாணவர்கள் படித்து 10–ஆவது மற்றும் பிளஸ் 2–விலே தேர்வு எழுதும் வாய்ப்பை திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த சமச்சீர் கல்வி முறையிலே மறுக்கப்பட்டது. இது தொடர்பாக பழுத்த கல்வியாளர் முத்துக்குமரன் தலைமையிலான குழு அளித்த பரிந்துரை புறந்தள்ளப்பட்டது. தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சமச்சீர் கல்வி முறை, மேல் ஆய்வு செய்யப்படும்போது அரசியல் சாசன சட்டம் சிறுபான்மை மக்களுக்கு வழங்கியுள்ள உரிமையை நிலைநாட்டும் வகையில் சிறுபான்மை மக்கள் தமிழுடன் சேர்த்து தாய் மொழியைக் கற்பதற்கும், தேர்வு எழுதி மதிப்பெண் பெறுவதற்கும் வழி வகுக்கப்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், சிறுபான்மை மக்களின் நலனில் அக்கறை கொண்டு திருச்சி, வேலூர், பரமக்குடி என்று பல்வேறு ஊர்களிலே நடந்த தேர்தல் பிரச்சாரத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்திலே முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டின் அளவை அதிகரிக்க புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார். சிறுபான்மை முஸ்லீம்களின் இந்த உள்ளக்கிடக்கையை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–05*

அதேபோல, முஸ்லீம்களுக்கான இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதில் roaster முறையில் உள்ள சிக்கல்களினால், சில துறைகளில் குறிப்பாக உயர் மருத்துவப் படிப்பு சேர்க்கை, பல்கலைக்கழகங்களிலே பேராசிரியர் நியமனம் முதலியவற்றில் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கான நியாயமான வாய்ப்பு மறுக்கப்பட்டு வருகிறது. இந்தக் குளறுபடிகள் நீக்கப்படுவதற்கும், நலிந்தோர் முன்னேற்றத்தில் அக்கறை உள்ள இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களின் இட



ஒதுக்கீடு அமலாக்கத்தைக் கண்காணிக்க ஒரு குழு அமைக்கப்படும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது குறிப்பிட்டார்கள். இதற்கான அறிவிப்பும் விரைவில் வெளியிடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. அரசு, 2009–இலே தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் என்ற பெயரில் கட்டாயமாகத் திருமணங்களை அனைவரும் பதிவு செய்யும் சட்டத்தை நிறைவேற்றியது. காலங்காலமாக, முஸ்லீம்களின் திருமணங்கள் எழுத்துபூர்வமாக அதனை நடத்தும் ஜமாத்துகளில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், தி.மு.க. அரசு இந்தத் திருமணங்களைப் பதிவு செய்ய கட்டாயத் திருமணப் பதிவு சட்டத்தில் கொண்டுவந்த விதிமுறைகள், முஸ்லீம் தனியார் சட்டத்திற்கு முரணாக இருந்தன. தமிழகத்தில் உள்ள அனைத்து முஸ்லீம் அமைப்புகளும் இதற்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தின.

சென்ற 2010, மார்ச் 6–ஆம் தேதி நான் உட்பட அனைத்து முஸ்லீம்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் சட்ட அமைச்சரைச் சந்தித்து, கட்டாயத் திருமணப் பதிவுச் சட்டத்தில் முஸ்லீம்களுக்கு உள்ள ஆட்சேபணைகளை வெளிப்படுத்தினோம். ஆனால், அனைத்து முஸ்லீம் அமைப்புகளின் கோரிக்கையை சென்ற தி.மு.க. அரசு நிராகரித்தது. தேர்தலிலே படுதோல்வி அடைந்தது.

அரசினால் திருமணங்கள் பதிவு செய்யப்படுவதை முஸ்லீம்கள் எதிர்க்கவில்லை. மாறாக, இந்தப் பதிவிற்காக முந்தைய தி.மு.க. அரசு கொண்டுவந்த விதிமுறைகளைத்தான் முஸ்லீம்கள் எதிர்க்கிறார்கள். ஜமாத்துகள், காஜிகள் பதிவு செய்யும் திருமணம் தொடர்பான பதிவுச் சான்றினை அப்படியே ஏற்றுக்கொண்டு, வேறு எவ்விதப் குறிப்பாவணங்களும் இல்லாமல் பதிவுத் துறை பதிவு செய்து, சான்றிதழ் வழங்க வேண்டும் என்பதுதான் முஸ்லீம்களின் கோரிக்கையாகும். அதாவது தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் 2009 விதிமுறைகளிலே பிரிவு–5, உட்பிரிவு–4–இலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதே முஸ்லீம் சமுதாய மக்களின் கோரிக்கை. இந்தக் கோரிக்கையின் நியாயத்தை ஏற்று, இதை ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றித் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தேர்தல் பிரச்சாரத்தில் குறிப்பிட்டார்கள். இந்தக் கோரிக்கையை அவர்கள் விரைவில் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2011 ஜூன் 9

இந்த ஆண்டு தமிழ்நாடு ஹஜ் குழு சார்பாக ஹஜ் செல்வதற்கு ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இஸ்லாமியர்களின் சில கோரிக்கைகளை, திருமணப் பதிவு சம்பந்தமாகக் கூறியிருக்கின்றார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தேர்தல் நேரத்திலே அதைப் பற்றி விளக்கமாகச் சொல்லி, வாக்குறுதியிலே சொல்லியுள்ளதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோரிக்கைகளை விளக்கமாக எங்களிடம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். நியாயப்பட்ட அவர்களுடைய கோரிக்கையை, சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாவலராக, சாதி பாராத நீதிமானாக எப்போதும் விளங்கக்கூடிய புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள் உடனடியாக அதற்குரிய (மேசையைத் தட்டும் ஒலி) ஆய்வுகள் செய்து, நிவாரணம் அளிப்பதுடன் அவர்களின் கோரிக்கைகளும் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மிக்க நன்றி, அமைச்சர் அவர்களே. இந்த ஆண்டு தமிழ்நாடு ஹஜ் குழு சார்பாக ஹஜ் செல்வதற்கு 10,400 பேர் விண்ணப்பித்தார்கள். இவர்களில் மத்திய அரசு ஒதுக்கீடு செய்த 3,400 பேர்களுக்கு மட்டுமே குலுக்கல்மூலம் வாய்ப்பு கிடைத்துள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி வாய்ப்பு இழந்த சுமார் 7,000 பேரில் பாதி பேருக்காவது வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே பட்டா நிலங்களிலே சர்ச்சுகள், பள்ளிவாசல்கள் கட்டுவதற்கு இருக்கக்கூடிய சிக்கலை இந்த அரசு, அ.இ.அ.தி.மு.க. அரசு நிவர்த்தி செய்யும் என்று குறிப்பிட்டார்கள். அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2011 ஜூன் 9] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

என்னைச் சட்டமன்றத்திற்கு அனுப்பியுள்ள இராமநாதபுரம் தொகுதி, மீனவர்கள் நிறைந்த தொகுதி. மீனவர்களின் நலனில் இந்த அரசு உண்மையான அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக, தொடக்கமாக இந்த அரசு தேர்தலிலே வாக்குறுதி அளித்தபடி மீன்பிடித் தடைக் காலத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகையை மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/—ஆக உயர்த்தியதை மனமார வரவேற்கின்றேன்.

கச்சத் தீவு தொடர்பாக இன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் மீனவர்களின் நலனில் இந்த அரசுக்குள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது.

பிற்பகல் 1–10

அதேபோல, பருவ காலத்தால் நான்கு மாதங்களுக்கு மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள இயலாத சூழலில் இருக்கும் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 4,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியும் விரைவில் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

பாரம்பரிய மீனவர்கள் பயன்பெறும் வகையில், ஏற்றுமதி நோக்கோடு நடுக்கடலில் மீன் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டல் ஏற்றுமதிக் கப்பல் பூங்கா அமைக்கப்படும் என்று அ.இ.அ.தி.மு.க.–வின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பூங்கா இராமநாதபுரம் தொகுதியில் விரைவில் அமைய ஆவன செய்ய வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

13 குளிர்சாதன மீன் பதப்படுத்தும் பூங்காங்கள்–Fish Processing Parks அமைக்கப்படும் என்று அ.இ.அ.தி.மு.க.–வின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மீன் பதப்படுத்தும் பூங்காக்களில் குறைந்தது ஐந்தைத் தொழில் வளர்ச்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் இருக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைய ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, தொடர்ந்து நம்முடைய தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அந்த வகையிலேதான் அ.இ.அ.தி.மு.க.–வினுடைய தேர்தல் அறிக்கையிலே மீனவர் பாதுகாப்புப் படை அமைக்கப்படும் என்று

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2011 ஜூன் 9

குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதை ஏற்படுத்துவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தச் சூழலில் தேர்தல் நேரத்திலே நான்கு மீனவர்கள், இராமேசுவரத்தைச் சேர்ந்த மீனவர்கள், விக்டஸ், அந்தோணிராஜ், ஜான்பால் மற்றும் மாரிமுத்து என்ற இந்த நான்கு மீனவர்களும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெற்ற அந்தத் தினத்திலே, மீன் பிடிப்பதற்காக TN–10–MFB–262 என்ற படகிலே சென்றிருக்கின்றார்கள். கிரிக்கெட் போட்டியிலே இலங்கை தோல்வியடைந்தது. இலங்கை தோல்வி அடைந்ததற்குப் பழிவாங்குவதற்காக வேண்டி, நம்முடைய இந்த நான்கு மீனவர்களும் சித்திரவதை செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதிலே, மிகப் பெரிய கவலை, மிகப் பெரிய வருத்தம் என்னவென்றால், 2–ஆம் தேதியே அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்; அவர்களுடைய சடலத்தையும் இலங்கைக் கடற்படையினர் தூக்கிச் சென்றுவிட்டார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. ஆனால், தொடர்ந்து இந்தச் செய்தியை அன்றைய தமிழக அரசு மறைத்து, இந்த நான்கு மீனவர்களும் காணாமல் போய்விட்டார்கள் என்று சொல்லி, சில நாட்களாகத் தேடி, இரண்டு சடலங்கள், விக்டஸினுடைய சடலமும், இன்னொருவருடைய சடலமும் ஒதுங்கியிருக்கின்றன என்று இலங்கையிலுள்ள ஒரு பத்திரிகையிலே செய்திகளெல்லாம் வந்த பிறகு, மீனவக் குழு, 6 பேர் கொண்ட குழு இலங்கைக்குச் செல்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** அந்தக் குழுவையும் Coast Guard கப்பலிலேயே சுடும் வெயிலிலே நிறுத்தி வைத்து, பின்னர் அழைத்துச் செல்லப்பட்டார்கள். இதற்குப் பிறகு, விக்டஸினுடைய உடல் யாழ்ப்பாணத்திலே கண்டெடுக்கப்படுகின்றது. அதிலே பல காயங்கள். தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த மறுதினம், அந்தோணிராஜினுடைய உடல் தமிழகத்திலே தொண்டிக்கு அருகே கரை ஒதுங்குகிறது. தேர்தல் முடிந்த மறுநாள், 14–ஆம் தேதி ஜான்பாலினுடைய உடல் கரை ஒதுங்குகிறது. 16–ஆம் தேதி மாரிமுத்துவினுடைய உடல் தலை இல்லாமல் கரை ஒதுங்குகிறது. இதிலே மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்



2011 ஜூன் 9] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

என்னவென்றால், மீனவர்கள் காணாமல் போனால் அவர்களுடைய உடல் கிடைத்தால் மட்டும்தான் அரசாங்கம் அவர்களுடைய குடும்பத்திற்கு இழப்பீடு தரக்கூடியதொரு நிலையிலே, இந்த நான்கு மீனவர்களில் ஒருவருடைய உடல், விக்டஸினுடைய உடல் யாழ்ப்பாணத்திலே கண்டெடுக்கப்பட்ட பிறகு, நான்கு குடும்பங்களுக்கும் தமிழக அரசு, அன்றைய தமிழக அரசு, இழப்பீடு கொடுக்கின்றது. இதிலே நமக்குள்ள சந்தேகம் என்னவென்றால், தேர்தல் நேரத்திலே இந்த நான்கு மீனவர்களையும் சிங்களப் பேரினவாத இலங்கை அரசு, உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியிலே இலங்கை தோல்வியடைந்ததற்காகச் சுட்டுக் கொன்றிருக்கின்றது, சித்திரவதை செய்து கொன்றிருக்கின்றது. இந்த உண்மையை மறைத்திருக்கின்றார்கள். இதற்காக, தமிழக அரசு முழுமையான ஓர் விசாரணையை ஏற்படுத்தி இந்த நான்கு மீனவர்களினுடைய ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நான்கு இலட்சம் ரூபாய், ஒவ்வொரு குடும்பத்திற்கும் அன்றையதினமே கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துகொள்கின்றேன்.

பிற்பகல் 1–15

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** இது வேறு, அது வேறு. இந்த 4 மீனவர் குடும்பங்களுக்கும் அ.இ.அ.தி.மு.க. சார்பாக ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தார்கள். ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணையையும் இந்த உண்மையை மறைத்தவர்கள் மீதான நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, கடந்த 30 ஆண்டுகளாக 500–க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள், இலங்கை அரசினால் சித்ரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்தின் வாரிசுகளுக்கும் அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இந்த 4 மீனவர்களும் சென்ற படகு என்ன ஆனது என்பதைப் பற்றிய விவரம் இதுவரை

தெரியவில்லை. அந்தப் படகுக்காக தமிழக அரசு இழப்பீடு தர வேண்டும். இந்த 4 குடும்பங்களினுடைய உறுப்பினர்களுக்கு அரசு வேலை தருவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இறுதியாக, சுருக்கமாக சில செய்திகளை மட்டும் சொல்லி, கோரிக்கைகளை மட்டும் முன்வைத்து விடைபெறுகின்றேன்.

இராமநாதபுரம் மாவட்டம் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகளாகிவிட்டன. ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிறுவனர், ஏழைகளின் பங்காளர், பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலேதான் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான ஆட்சியர் அலுவலகமும் மற்ற அலுவலகமும் இராமநாதபுரத்திலேயே அமைக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் பின்தங்கி இருக்கக்கூடிய இந்த இராமநாதபுரம் மாவட்டத்தை, எம்.ஜி.ஆர். அவர்கள் உயிர்ப்பித்தார்கள். அதற்கு ஒரு சரியான மாவட்டத் தலைநகர் அந்தஸ்தைக் கொடுத்தார்கள். தமிழகத்தையே எப்படி இந்தியாவினுடைய முன்னோடி மாநிலமாக ஆக்க வேண்டுமென்று அ.இ.அ.தி.மு.க. அரசு முயற்சி செய்திருக்கிறதோ, அதேபோல இந்த ஆட்சியிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட, தொழில் வளம் இல்லாத, விவசாயமும் அதிகம் இல்லாத எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைத் தமிழகத்திலேயே மிகவும் முன்னோடியான மாவட்டமாக உருவாக்குவதற்கு இந்த அரசு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** இராமநாதபுரத்திலே பாதாளச் சாக்கடைத் திட்டம் முடிக்கப்பட்டிருக்கின்றது. இராமேஸ்வரத்திலே யாத்ரிகர்களும், சுற்றுலாப் பயணிகளும் ஏராளமாக வருகின்றார்கள். அதற்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அளிக்கப்பட வேண்டும். இராமநாதபுரத்திலே, சென்ற அரசு, பெயரளவிலே மருத்துவக் கல்லூரி தொடங்கியதாக அறிவிப்பு மட்டும் செய்தது. வேறு எந்த நடவடிக்கையும் இல்லை. அதைத் தொடங்க வேண்டும். இராமநாதபுரத்திலே ஓடக்கூடிய போக்குவரத்துக் கழகத்தினுடைய தலைமையகம் கும்பகோணத்திலே இருக்கின்றது. அந்தக்





கோட்டத்தைக் கும்பகோணத்திலிருந்து காரைக்குடிக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நல்ல வாய்ப்பைத் தந்தவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நாட்டின் 14–ஆவது சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேச வாய்ப்பு அளித்தமைக்காக எனது சார்பிலும், நான் சார்ந்திருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினராக ஆவதற்கு வாய்ப்பளித்த தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இந்தியத் திருநாட்டின் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்களுக்கும், தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தேர்தலில் வெற்றி பெறப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், என்னை ஈன்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய எனது தாய், தந்தையர்க்கும், இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அவையிலே உள்ள அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக எனக்கு நம்பிக்கையுடன் வாக்களித்து 28,000 வாக்குகள் வித்தியாசத்தில் மிகப் பெரிய ஒரு வெற்றியை அளித்த அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வாக்காள வள்ளல்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றியையும் அன்புகலந்த வணக்கத்தையும் நன்றி உணர்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்) தலைமை

தமிழக அரசு கொண்டு வரும் மக்கள் நலத் திட்டங்கள் அனைத்திற்கும் எங்களுடைய முழு ஆதரவை வழங்குவோம். அதேநேரத்தில் அரசு கொண்டுவரும் திட்டங்கள் எவையேனும் மக்களைப் பாதிக்குமானால் அவற்றை நாங்கள் சுட்டிக்காட்டத் தயங்க மாட்டோம்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் நோக்கத்துடன் விலைவாசியைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்துவதுடன், பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தை விற்பனையில் ஈடுபடுவோர்மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

பிற்பகல் 1–20

தமிழகத்தில் நிலவி வரும் மின் பற்றாக்குறை, உழவுத் தொழிலையும், தொழில் வளர்ச்சியையும் வெகுவாகப் பாதிக்கின்றது. எனவே, மாநிலத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு மின் துறையைச் சீரமைத்து, தடையற்ற மின்சாரம் கிடைக்க வழிவகை செய்வீர்கள் என்று நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

தமிழ் மொழியை, இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாகச் செய்திடவும், நீதிமன்றங்களில் வழக்காடு மொழியாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்தவும், மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தும் என்று கூறப்பட்டிருப்பதை வரவேற்கிறோம்.

கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் வகையில் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம் தொடங்கப்படுவதையும், ரூ.1,80,000 அளவில் அரசே வீடு கட்டிக் கொடுப்பதையும் வரவேற்கிறோம். எனினும், கழிப்பறையையும் சேர்த்துக் கட்டித் தர வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம். இந்தத் திட்டத்தில் எத்தனை வீடுகள், எவ்வளவு கால அவகாசத்தில் கட்டித் தரப்படும் என்பதையெல்லாம் அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறோம்.

மாணவர்களின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டிருக்கக்கூடிய இந்த அரசு மடிக் கணினி வழங்குவதை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம்; வரவேற்கிறோம்.

மகளிருக்குத் திருமணத்திற்கு தங்கம் வழங்குவதையும், முதியோர் ஓய்வூதியத்தை உயர்த்திக் கொடுப்பதையும் நாங்கள் வரவேற்கின்றோம். அரசு, கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு புத்துயிரூட்டும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதையும், கேபிள் டி.வி. சேவை அரசுடைமையாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதையும் வரவேற்கிறோம். கேபிள் டி.வி. கட்டணமாக இப்பொழுது பல இடங்களில் ரூ.100 முதல் ரூ.150 வரை வசூலிக்கப்படுகிறது. இந்தக் கட்டணத்தைக் குறைத்தும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்கு இலவசமாகவும் இணைப்பை வழங்கலாம் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம்.





நாட்டின் முதல் குடிமகனுக்குக் கிடைக்கும் மருத்துவ வசதி, கடைசி குடிமகனாக இருக்கும் சிற்றூர் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக முன்னாள் நடுவண் துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் எப்படிப் பணியாற்றினார் என்பதை இந்தியத் திருநாடே நன்கு அறியும். தமிழகத்திற்காக 16 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, மத்திய நல்வாழ்வுத் துறையிலிருந்து போதிய மருத்துவ உபகரணங்களையும், செவிலியர்களைப் பணியமர்த்துவதற்குமாக அந்த நிதியை ஒதுக்கித் தந்தார்கள் என்பதை நாம் அறிவோம். இதேபோல், தமிழக அரசும் நல்வாழ்வுத் துறையில் அதிக கவனம் செலுத்தி கிராமப்புற மக்களும் அனைத்து மருத்துவ வசதிகளையும் பெறும் நிலையை உருவாக்க வேண்டும்.

பொதுவாக அரசு மருத்துவமனைகளில் மருந்து, மாத்திரைகள் தரம் வாய்ந்தவையாகத் தரப்படுவது இல்லை என்கின்ற குறை எல்லோர் மனதிலும் இருக்கிறது. எனவே, அரசு மருத்துவமனைகளில் பன்னாட்டுத் தரம் வாய்ந்த மருந்து, மாத்திரைகளை ஏழை நோயாளிகளுக்கு வழங்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம். தற்போது அறிவிக்கப்பட்டிருக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்தப்படும் நாள்வரையில், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதைத் தள்ளிப்போட முடியாத காரணத்தினால், பழைய காப்பீட்டுத் திட்டம் அதுவரையில் அமலில் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

நமது மாநிலத்தின் முதல் தொழிலாகவும், ஆதாரத் தொழிலாகவும் இருக்கின்ற வேளாண்மையை மேம்படுத்துவதற்கு பாசனப் பெருக்குத் திட்டங்கள் மிக மிக அவசியமாகும். இந்த நிலையில் நதிநீர்ப் பிரச்சினையில் கையேந்தி நிற்கின்ற அவல நிலைக்குத் தமிழகம் தள்ளப்பட்டிருப்பது, தொடர்ந்து வருத்தம் அளிக்கக்கூடிய, வேதனையளிக்கக்கூடிய நிகழ்வாக உள்ளது. எனவே, காவிரி பிரச்சினை, பாலாறு பிரச்சினை, முல்லை–பெரியாறு பிரச்சினை இவற்றில் நமது உரிமையைப் பெறவும், நிரந்தரத் தீர்வை உண்டாக்கவும் தமிழக அரசு போர்க்கால

நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மழைக் காலங்களில் வீணாகக் கடலுக்குச் செல்லும் உபரி நீர், ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் முழுவதையும் பயன்படுத்திட திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். மேட்டூர் அணை உபரி நீர் வீணாகாமல் பயன்படுத்திட, பாலாற்றுடன் இணைக்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். இதனால் இடையிலேயான சேலம், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களும், வேலூர் மாவட்டமும் பயன்பெறத்தக்க காவிரி–பாலாறு இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

*பிற்பகல் 1–25*

இந்த அரசின் "தமிழ்நாடு 2025 தொலைநோக்குப் பார்வைத் திட்டம்" பாராட்டப்பட வேண்டியது. அவற்றுக்குத் தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிந்து களைவது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அதேநேரத்தில் தமிழகத்தை, அடுத்த ஐந்தாண்டுகளில் 60 இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், 40 இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளையும் ஈர்க்கக்கூடிய வகையில் சர்வதேச சுற்றுலா மையமாக மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும் திட்டம் உள்ளபடியே வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

அடுத்து, அணைக்கட்டு தொகுதியின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எனது தொகுதிக்குத் தேவையான சில கோரிக்கைகளை முன்வைக்கிறேன். அவற்றைப் பரிசீலித்து நிறைவேற்றித் தருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அணைக்கட்டு தொகுதியில், மேல் அரசம்பட்டு கிராமத்தில், தற்போது இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களால், ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் அணை கட்ட ஆணை பிறப்பித்தும், நிதியொதுக்கீடு செய்தும், இதுநாள் வரையில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்தத் தொகுதி மக்களின் நீண்டநாள் கனவாகிய இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதன்மூலம், ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் விவசாய நீர்ப் பாசனப் பிரச்சினைகளிலிருந்தும், குடிநீர்ப் பிரச்சினைகளிலிருந்தும்





விடுபட்டு நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள். ஆணை பிறப்பித்த முதல்வர் அவர்களே, தற்போது மேலும் நிதியொதுக்கீடு செய்து, அடிக்கல் நாட்டி, திறப்பு விழாவும் செய்து, தொகுதி மக்களின் கனவை நனவாக்கித் தருமாறு அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம்.

அணைக்கட்டு தொகுதியில் மலைவாழ் மக்கள் அதிகம் வசிக்கின்றனர். தீஞ்சமந்தை, யாதான்கொள்ளை, பாலாம்பட்டு போன்ற ஊராட்சிகளை உள்ளடக்கிய கிராமங்களில் சுமார் 15,000 பேர் வசிக்கின்றனர். அவர்களுக்குப் போதிய சாலை வசதி கிடையாது. சாலை வசதி செய்து தர வேண்டும் என்று சொன்னால், வனத் துறையின் நிலத்தைக் கையகப்படுத்தி, அதற்கான அரசு ஆணைகளைப் பிறப்பித்து, சாலை வசதி செய்து தர வேண்டும். அங்கு மலைவாழ் மாணவர்கள் படிப்பதற்கு அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. ஆனால், தங்கும் விடுதியோ, மருத்துவ வசதியோ கிடையாது. சாலை வசதியின்மையால் நோயாளிகளைக்கூட 'டோலி' கட்டி மருத்துவமனைக்குக் கொண்டுவருகிற நிலையில்தான் உள்ளனர். எனவே, மேற்கண்ட அனைத்து நலத் திட்டங்களையும் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மக்கள் விவசாயத்தையே பெரிதும் நம்பியுள்ளனர். இங்குப் பிரதான விவசாய விளைபொருளாக மல்லிகைப் பூ மற்றும் இதரப் பூக்கள் விளைவிக்கப்படுகின்றன. விவசாயத்தை மேம்படுத்தவும், விவசாயம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை அமைக்கவும், விவசாய விளைபொருட்களைப் பாதுகாத்திட குளிர்பதனக் கிடங்கு அமைத்திடவும், ஒரு வாசனை திரவிய தொழிற்சாலை அமைத்திடவும் அரசு தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட பொய்கை கிராமத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த, அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையை மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே செலுத்தியுங்கூட, இதுநாள் வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தக் கல்வி ஆண்டிலேயே இதற்குண்டான நடவடிக்கை எடுக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அணைக்கட்டு தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி என்பதை அறிவீர்கள். அணைக்கட்டு தொகுதியில் அரசாங்கத்தின் சார்பாகக் கலைக் கல்லூரியோ அல்லது தொழில்நுட்பக் கல்லூரியோ, விவாசாயக் கல்லூரியோ கிடையாது. அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் 50 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் தங்களுடைய படிப்பைத் தொடர வேண்டிய ஒரு கட்டாயத்தில் உள்ளனர். எனவே, இந்தத் தொகுதியில் மேற்கண்ட ஏதாவது ஒரு கல்லூரியை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் அருகில் அமைத்துள்ள உலகப் பிரசித்தி பெற்ற ஆன்மீகத் தலமான ஸ்ரீபுரம் பொற்கோயிலுக்கு இந்தியாவில் இருந்தும், உலகத்தின் பிற பகுதிகளில் இருந்தும் நாள்தோறும் இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கின்றனர். நீங்கள் வேலூருக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னால் சென்றபோது Officers Lane எப்படி இருந்ததோ, அப்படி இல்லாமல் தற்போது நெரிசல் மிக்க ஒரு பகுதியாக மாறி இருக்கிறது. போக்குவரத்து நெரிசலால் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே, வேலூருக்கு வெளியே ஒரு சுற்றுச் சாலை (Ring Road) அமைத்து, போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர்ப் பிரச்சினை, இதுநாள் வரையில் இத்தொகுதியில் தீர்க்கப்படாமல், இன்றும்கூட காலிக் குடங்களைத் தூக்கிக் கொண்டு தாய்மார்கள் அலையும் காட்சி வேதனையாக உள்ளது. இதைத் தீர்க்க ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அணைக்கட்டு தொகுதிக்கும் நீட்டித்து, மக்கள் பயன்பெறும் வகையில் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

பாலாற்றை மாசுபடுத்திக் கொண்டிருக்கும் வாணியம்பாடி முதல் வாலாஜா வரையிலான தோல் தொழிற்சாலைக் கழிவுகளை பைப் லைன் அமைத்து, கடலில் கலக்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுகிறேன். ஏற்கெனவே இந்தப் பகுதியின் சுற்றுப்புறங்களும், விவசாய நிலங்கள், குடிநீர் போன்றவை எவ்வாறு மாசுபடுகின்றன என்பதை நாள்தோறும் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதற்குண்டான துரித நடவடிக்கை வேண்டுமெனக் கோரிக்கை வைக்கிறேன்.





பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதற்கு சுமார் 55 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, கால்வாய்கள் அமைக்கும் பணியும் முடியுந்தறுவாயில் உள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள், அப்போதைய சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு நடைப்பயணமாகச் சென்று, அங்கு பேராட்டங்களை நடத்தினார் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது) அந்த ஆந்திர அரசின் முடிவை, நடவடிக்கைகளை, அவர்கள் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே மடிந்துகொண்டிருக்கும் விவசாயிகளின் மின்சாரப் பிரச்சினை, சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் ஆகியும்கூட நிறைவு செய்யப்படாத நிலையில், எனது தொகுதியில் தினமும் கிடைக்கும் குறைந்த மின்னழுத்தம் உள்ள மின்சாரத்தால் மின் மோட்டார்கள் பழுதடைந்துவிடுகின்றன. எனவே வேப்பங்குப்பம் மின் நிலையத்தில் தற்போதுள்ள 60 மெகா வாட் திறனை 110 மெகா வாட் திறன் கொண்டதாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை அருகில் மேம்பாலம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒடுக்கத்தூரில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் சார்–பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இருப்பதால், அங்கு முழுமையாக கணினிமயமாக்க முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலை அரசு, இன்னும் எத்தனை பக்கங்கள் இருக்கின்றன?

**திரு. ம. கலை அரசு:** இன்னும் ஒரு பக்கம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அந்த ஒரு பக்கத்தையும் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** எனவே, அரசு அதற்குச் சொந்தமாகக் கட்டடத்தைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அணைக்கட்டில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ம. கலை அரசு] [2011 ஜூன் 9

பொய்கை கிராமத்தில் பிரசித்திபெற்ற வாரச் சந்தை உள்ளது. அங்கு வணிக வளாகம் மற்றும் கால்நடைகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாட்கோமூலம் மலைவாழ் மக்களுக்கு ஆடு, மாடு வளர்ப்புத் தொழில் செய்ய *50* சதவிகிதம் மானியத்தில் கடன் வழங்கப்பட்டு வந்ததை நிறுத்திவிட்டார்கள். மீண்டும் மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக இது தொடர வழிவகை செய்யவேண்டும்.

பொதுவாக, பத்திரிகையாளர்களுக்கு அனைத்து மாவட்ட அளவிலும் வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக வீடுகள் கட்டித் தருமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அணைக்கட்டு ஊரில் பேருந்து நிறுத்தம் அமைக்க வேண்டும். வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையால் வெளியேற்றப்படும் கழிவு நீரை, சத்தனிபுரம் கிராம ஏரியில் கொண்டு விடுவதால் அந்தப் பகுதி மாசுபடுகிறது. இதனால் குடிநீர் மாசுபடுவதோடு, கொசுத் தொல்லையும் அதிகரித்து மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதற்கு நிரந்தரத் தீர்வு காண ஒரு திட்டம் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக, மருத்துவர் அய்யா அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, வரவேற்கப்பட வேண்டிய திட்டங்கள் மகிழ்ச்சி அளிக்கின்றன என்றபோதிலும், இந்தியாவில் தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ வேண்டுமென்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனவு நிறைவேற, மேலும் பல ஆக்கப்பூர்வமான திட்டங்களைச் செயல்படுத்துமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டு, என் வணக்கத்தைத் தெரிவித்து, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் *15* நிமிடங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினான்காவது சட்டப் பேரவையிலே, கவர்னர் உரையிலே நடைபெறும் விவாதத்தில் என்னைப் பேச அழைத்ததற்குத் தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 ஜூன் 9] [திரு. கே. கோபிநாத்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்கூட நான் சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் பேசும்போதுகூட சொன்னார்கள். தமிழ் உச்சரிப்பு என்பது ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறது. குறிப்பாக என்னைப் பற்றிச் சொல்லப்போனால், இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேருக்குத் தெரியாது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், தங்களுக்கும், இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு முதல்வருக்குக்கூட என்னுடைய தமிழ் நிலைமை நன்றாகத் தெரியும்.

பிற்பகல் *1–35*

முதன்முதலாக இந்த அவையிலே நிறைய மாண்புமிகு உறுப்பினர்கள், நண்பர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். அவர்களைப் போல நான் *2001*—இல் முதல் முதலில் இந்த அவைக்கு வரும்போது, இந்த அவையில் என்னுடைய கன்னிப் பேச்சிலே, எனக்குத் தெரிந்த மொழி, என்னுடைய தாய் மொழி, நான் படித்த மொழி, என்னுடைய பகுதி மொழியான தெலுங்கில் பேசும்போது, அன்றையதினம் நிறைய உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். எனக்கு அந்த மொழி தெரியாது என்பதால், அன்றையதினம் முதலமைச்சராக இருந்த இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாக உறுப்பினருக்கு எந்த மொழி தெரியுமோ அந்த மொழியில் அவர் பேசலாம் என்று சொல்லி, அன்றைக்கு அவர்களே தெலுங்கில் பேசினார்கள். அன்றைக்குத் தெலுங்கிலே பதில் கொடுத்தார்கள். அது தங்களுக்கும் தெரியும். இருந்தாலுங்கூட, அன்று முதல் இன்றுவரை படிப்படியாக முன்னேறி நான் இன்றைக்குத் தமிழிலேயே முழுவதுமாகப் பேச இருக்கிறேன். அதனால் *15* நிமிடங்கள் என்பது மிகக் குறைவான நேரம். இருந்தாலும் நான் maximum முடிந்த அளவிற்கு என்னுடைய நேரத்தைக் குறைத்துக்கொள்கிறேன் என்பதை உங்களுக்கு முதலில் தெரிவித்துவிட்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு மூன்றாவது முறையாக தொடர்ச்சியாக எனக்கு வாய்ப்பு தந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், இளந்தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின்

[திரு. கே. கோபிநாத்] [2011 ஜூன் 9

தலைவர் திரு. கே.வி. தங்கபாலு அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், என்னுடைய தொகுதிக்காக, என்னுடைய வெற்றிக்காக மிகவும் பாடுபட்ட மாண்புமிகு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.ஏ. மனோகரன் அவர்களுக்கும், திரு. பி. வெங்கடசாமி அவர்களுக்கும், திரு. டி. வெங்கட ரெட்டி அவர்களுக்கும் மற்றும் நான் சேர்ந்த இந்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தொண்டர்களுக்கும், தலைவர்கள் அனைவருக்கும் முதன்முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், என் தொகுதி மக்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல், மூன்றாவது முறையாக முதலமைச்சராக பதவியேற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், என்னைப்போல இரண்டாவது முறையாக, மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வாழ்த்துக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையிலே சில நல்ல திட்டங்கள் இருக்கின்றன. அவற்றை காங்கிரஸ் தரப்பில் நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அதேபோல, கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த திட்டங்கள் இந்த கவர்னர் உரையிலே இடம் பெறவில்லை என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஓர் உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், கவர்னர் உரை என்பது, வருமாண்டிலே அரசினுடைய முதல் பட்ஜெட் எந்த மாதிரியிருக்கும்; பட்ஜெட்டில் என்னென்ன இடம் பெறும் என்பதை நமக்கு முன்கூட்டியே தெரியவரும் ஒரு நகலாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில், இலவச டிவி, இலவச கேஸ் மற்றும் பல இலவச திட்டங்களைக் கொடுத்தார்கள். மக்களும் அவற்றைப் பெற்றுக்கொண்டார்கள். அதற்கு மாறாக, தற்போது கவர்னர் உரையில் இலவச மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். கொடுக்கப் போகிறார்கள் என்பது தெரியும்.



2011 ஜூன் 9] [திரு. கே. கோபிநாத்]

அதற்கு என்னுடைய பாராட்டுக்கள், நன்றி. நான் அதைக் குறை கூறவில்லை. காரணம், ஏற்கெனவே அரசாங்கத்தால் கொள்முதல் செய்யப்பட்ட டி.வி.க்கள், கேஸ் சிலிண்டர்கள், இன்னும் சொல்லப்போனால் சில பகுதிகளில், சில முனிசிபல் லிமிட்களில் மக்களைப் போய்ச் சேரவில்லை. ஆனால் purchase பண்ணியாகிவிட்டது. Godown–இல் அடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குண்டான பயனாளிகளுக்கு டோக்கன் மட்டும் issue பண்ணியாகிவிட்டது. இடையில் தேர்தல் வந்த காரணத்தினால், அது யாருக்குமே பயனில்லாமல் இருக்கிறது. தயவுசெய்து இந்த அரசாங்கம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி ஏற்கெனவே வழங்கப்பட்ட டோக்கன்களுக்கு, ஏற்கெனவே வாங்கி வைக்கப்பட்டிருக்கின்ற அந்த டிவி, கேஸ் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுகுறித்து ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் ஏற்கெனவே வாங்கப்பட்டு விட்டன. ஏற்கெனவே வாங்கி stock வைத்திருக்கிறோம். அவற்றைப் பாதுகாக்க தனி செக்யூரிட்டி வைத்து நாம் பாதுகாத்து வருகிறோம். அவற்றை மக்கள் பயன்பாட்டிற்காக வழங்கவேண்டும் என்ற ஆலோசனையைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, கவர்னர் உரையிலே linking rivers, I mean, ஆறுகளை இணைக்கும் திட்டம், உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. அதேபோல் மத்திய அரசாங்கத்துடன் இந்த அரசாங்கம் நல்ல relationship–ஐக் கடைப்பிடிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைக் காங்கிரஸ் கட்சி சார்பில் நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

பிற்பகல் 1–40

அதேபோல் மத்திய அரசிடம் 1,000 மெகா வாட், Central Pool–இலிருந்து மின்சாரம் தேவையென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். அது வரவேற்கத்தக்கது.

அதேபோல், O.A.P. என்பதைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர் சொல்லியிருக்கிறார்கள். O.A.P. என்பதை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது, மகிழ்ச்சிக்குரியது. இருந்தாலுங்கூட, இந்த அரசாங்கம் புதியதாகப் பொறுப்பேற்றுப்

[திரு. கே. கோபிநாத்] [2011 ஜூன் 9

பிறகு, O.A.P.–ஐ ஒட்டுமொத்தமாக வங்கியில் செலுத்திவிடுகிறோம்; வங்கியில் செலுத்திய பிறகு அவர்களுக்கு Smart Card கொடுத்துவிடுகிறோம்; Smart Card கொடுத்த பிறகு அவர்கள் பயன்படுத்துவதற்கு சுலபமாக இருக்கும் என்று சொன்னார்கள். இது உண்மையிலேயே மனப்பூர்வமாகப் பாராட்டக்கூடிய விஷயம்; வரவேற்கக்கூடிய விஷயம். இருந்தாலுங்கூட, O.A.P. என்பது ஆண்களுக்கு 60 வருஷம் என்றிருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், பெண்களுக்கு குறைந்தது ஐம்பதில் இருந்து 55 வயது என்று வயது வரம்பைக் குறைத்து O.A.P. கொடுத்தால் இன்னும் மக்களுக்குப் பயனாக இருக்கும் என்கிற ஆலோசனையைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இலவசமாகத் தாலிக்கு 4 கிராம் தங்கம் கொடுப்பது உண்மையிலேயே மகத்தான திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை ஆரம்பித்து விட்டார்கள். காங்கிரஸ் சார்பிலே அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், சமச்சீர் கல்வி பற்றி விவரமாகப் பேச நான் விரும்பவில்லை. சமச்சீர் கல்வியிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மீண்டும் சமச்சீர் கல்வியை நாங்கள் அமல்படுத்த இருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு அந்த விஷயம் கோர்ட்டில் இருப்பதால், deep – ஆக அதில் நான் செல்ல விரும்பவில்லை. இருந்தாலுங்கூட, சமச்சீர் கல்வி இடத்தில் Central Government–இன் நவோதயா பள்ளிக்கூடங்களை ஏன் நாம் அறிமுகம் செய்யக்கூடாது? நவோதயா பள்ளிக்கூடங்களை நாம் அறிமுகம் செய்வோமேயானால், ஒரு மாவட்டத்திற்கு ஒரு பள்ளிக்கூடம் என்கிற கணக்கிலே infrastructure–க்காகவே மத்திய அரசிடமிருந்து ஒரு மாவட்டத்திற்கு 20 கோடி ரூபாய் தருகிறார்கள். அதாவது 31 மாவட்டங்களுக்குக் கிட்டத்தட்ட 620 கோடி ரூபாய் we will get it from the Central Government. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு வருஷமும் maintenance செலவுக்காக மட்டும் இரண்டு கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். இந்தியாவிலேயே இதுவரை நவோதயா பள்ளிகள் இல்லாத இரண்டு மாநிலங்கள், ஒன்று மேற்குவங்கம், இன்னொன்று தமிழ்நாடு. கடந்த வருடம் மேற்குவங்கத்தில்கூட அதை ஆரம்பித்துவிட்டார்கள். இன்றைக்கு நவோதயா பள்ளி இல்லாத ஒரே ஒரு மாநிலம் நம்முடைய



2011 ஜூன் 9] [திரு. கே. கோபிநாத்]

மாநிலம். தயவுசெய்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்யவேண்டும். காரணம், அந்த நவோதயா பள்ளிகளில் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன; நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன என்று கருதி, அரசாங்கம் அதை implement செய்யவில்லை என்று நினைக்கின்றேன். அதில் ஏதாவது குறைகள் இருக்கும் என்று அரசாங்கம் நினைக்குமேயானால் ஒரு கமிட்டியை ஆரம்பித்து ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவோதயா பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டபோது, தமிழகத்தைப் பொறுத்த அளவில் இரு மொழிக் கொள்கை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நவோதயா பள்ளியைத் தமிழகத்தில் ஆரம்பிக்காததற்கு அதுதான் காரணம். இந்தியைக் கட்டாயமாகப் படிக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய கொள்கை. நீங்கள் கடந்த 5 ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் கூட்டணியில் இருந்து இருக்கிறீர்கள். இந்தக் கோரிக்கையை நீங்கள் ஏன் அன்றைய முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதியிடம் சொல்லி நிறைவேற்றவில்லை என்பதற்கு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே தாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தீர்களா என்று தெரியவில்லை. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு முன்னாள் உறுப்பினர் அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இதே கோரிக்கையை அன்று வலியுறுத்தினார்கள். அன்றைக்கு நீங்கள் அவையில் இருந்தீர்களா என்று தெரியவில்லை. தயவுசெய்து நூலகத்திற்குச் சென்று பார்த்தால் அது அவைக் குறிப்பில் இருக்கும். நாங்கள் இப்பொழுது மட்டுமல்ல; எப்பொழுதும் காங்கிரஸ் கட்சி ஏதாவது stand எடுத்தால், அந்த stand–இல் நிச்சயமாக நிற்போம். இதில் நான் உங்களுக்கு ஆலோசனைதான் சொன்னேன். இதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், நம்முடைய

[திரு. கே. கோபிநாத்] [2011 ஜூன் 9

அண்டை மாநிலம் பாண்டிச்சேரிக்கு ஒரு குழு அனுப்புங்கள். அந்தக் குழுவின்மூலம் ஆய்வு செய்யுங்கள்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் Two Language formula என்று சொல்கிறீர்கள். Two Language formula–வை நாங்கள் மறுக்கவில்லை. அதற்குள் deep—ஆகப் போக நான் விரும்பவில்லை. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சொல்லும்போது, இந்தச் சமச்சீர் கல்வியினால் மற்ற மொழிகள் அதாவது கன்னடம், மலையாளம், தெலுங்கு, உருது போன்ற மொழி பேசுபவர்கள் பாதிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அது உண்மைதான். கடந்த ஆட்சியிலேயும் நானே specific–ஆக என் எதிர்ப்பைச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கும் அதையே சொல்கிறேன். ஆனால் எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இல்லையென்றாலும் ஒரு காலத்தில் வேண்டுமானால் சொல்லலாம், இந்திக்கு நாம் ஏன் எதிர்ப்புத் தெரிவித்தோமென்று. அதில் deep–ஆகப் போக விரும்பவில்லை. அது Government Policy. இருந்தாலுங்கூட, மறுபரிசீலனை செய்வதில் தப்பில்லை என்பதுதான் என்னுடைய வாதம். காரணம், இன்றைக்கு இருக்கிற கிராமப்புறச் சூழ்நிலைகளில் குழந்தைகளைப் பார்ப்போமேயானல் C.B.S.E. seat–ஐத்தான் விரும்புகிறார்கள். அதனால் தமிழ் இல்லாமல் இல்லை. நவோதயா பள்ளிக்கூடங்களில் இந்தி இருக்கிறது; ஆங்கிலம் இருக்கிறது; அந்தந்த மாநில regional language இருக்கின்றது. அதனால் நீங்கள் பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரிக்கு ஒரு குழுவை அனுப்பினால் இதை ஆய்வு செய்யலாம். தயவுசெய்து நீங்கள் இதனைப் பரிசீலிக்க வேண்டும். இது Government Policy; இதில் நான் உள்ளே செல்ல விரும்பவில்லை.

பிற்பகல் 1–45

அதேபோலப் பார்த்தீர்கள் என்றால், ஏற்கெனவே நம்முடைய அரசாங்கம் சிறுபான்மையின மக்களுக்கு 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை 5 சதவிகிதமாக உயர்த்தப் போவதாகத் தேர்தல் அறிக்கையில் கூறியிருக்கிறது. உடனடியாக 5 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை, கல்வியிலும் சரி, வேலைவாய்ப்பிலும் சரி சிறுபான்மையின சமுதாய மக்களுக்கு வழங்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் வலியுறுத்த விரும்புகிறேன்.



2011 ஜூன் 9] [திரு. கே. கோபிநாத்]

ஏற்கெனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஹஜ் கமிட்டியின்மூலம் கிட்டத்தட்ட 3,000 பேர்தான் பயன்பெற்றிருக்கிறார்கள் என்றும் மீதமுள்ள 7,000 பேருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றும் சொன்னார்கள். அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எப்படிச் சிறுபான்மை இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு ஹஜ் கமிட்டி ஏற்படுத்தி அதன் மூலமாக அவர்கள் ஹஜ் செல்வதற்கு ஏற்பாடு செய்கிறோமோ, அதேபோல, கிறித்தவ சமுதாய மக்களுக்கும் ஜெருசலேம் செல்வதற்கு ஏதுவாக ஒரு கமிட்டி ஏற்படுத்தி அவர்களுக்கும் அந்த வாய்ப்பினைத் தர வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இங்கிருக்கிற பல நண்பர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் B.P.L. . list–ஐ மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையாகவே B.P.L. list–ஐ விரைவாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் குறுகிய காலத்தில், செப்டம்பரிலிருந்து இலவச மின் விசிறி—பார்த்தீர்களா? தமிழிலேயே சொல்லிவிட்டேன்—மின் விசிறி, மிக்சி, கிரைண்டர் போன்றவற்றை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு முன்னால் ஒரு கமிட்டி ஏற்படுத்தி, B.P.L. list–ஐத் தயார் செய்ய வேண்டும். உண்மையான பயனாளிகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பது என்னுடைய கருத்து. எனவே, B.P.L. list–ஐ நீங்கள் உடனடியாகத் தயார் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, ஆளுநர் உரையில், அண்ணா பல்கலைக்கழகம் 4 பிரிவாக இருப்பதை ஒன்றாக இணைத்து மீண்டும் அதற்குப் பழைய அந்தஸ்து கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே இப்போது படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு, அவர்களுடைய பெற்றோர்களுக்கு what is the next என்று தெரியவில்லை. அதை நாம் விளக்கமாகச் சொல்லவில்லை. 4 பிரிவுகளை ஒன்றாகச் சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இப்போது existing ஆகப் படிக்கிற மாணவர்களும் சரி, அந்த மாணவர்களின் பெற்றோர்களும் சரி, மிகப் பெரிய டென்ஷனில் இருக்கிறார்கள்.

[திரு. கே. கோபிநாத்] [2011 ஜூன் 9

எனவே, தயவுசெய்து அதை விளக்குமாறு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத் அவர்கள் குழப்பம் இருக்கிறதென்று சொல்கிறார். அதிலே குழப்பம் ஒன்றுமில்லை. அண்ணா பல்கலைக்கழகம் ஒரு பழைமை வாய்ந்த பல்கலைக்கழகமாகும். அதற்கு வெளிநாடுகளிலே நல்ல மரியாதை இருக்கிறது; அதற்கென்று ஒரு தரமிருக்கிறது; பாடத் திட்டங்கள் ஒரே மாதிரியாக இருக்கும். அது நல்ல திட்டமாகும். அது வரவேற்கக்கூடிய திட்டம். மானியக் கோரிக்கையில் பேசும்போது விளக்கமாகக் கூறுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்தத் திட்டத்தை நான் குறை சொல்ல வரவில்லை. அண்ணா பல்கலைக்கழகத்தை ஒன்றாக இணைக்க வேண்டுமென்று சொல்கிறேன். இப்போது படித்த மாணவர்களின் நிலைமை என்னவென்று தெரியவில்லை. அதைப் பற்றிய விளக்கம் இல்லை. அதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவு வரும்போது கருத்துகள் சொல்லப்படும். இந்தச் சட்டத்தை நிறைவேற்றும்போது எந்த மாணவர்களும் பாதிக்கப்படமாட்டார்கள். கல்வியின் தரம் நல்ல முறையில் இருக்கும். ஆகவே, இதைப்பற்றிச் சட்டமுன்வடிவிலே தெளிவாகச் சொல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.



2011 ஜூன் 9]

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சிறப்புப் பணிகள் அமலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுநர் உரையைச் சரியாகப் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக்சி, கிரைண்டர், மின் விசிறி ஆகிய மூன்றையும் பொது விநியோகத் திட்டத்தில் அரிசி பெறத் தகுதியுடைய சுமார் ஒரு கோடியே 83 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதைச் சரியாகப் படிக்கவில்லையென்று நினைக்கிறேன்.

அதேபோல, B.P.L. list–இல் குளறுபடிகள் இருக்கின்றனவென்று தெரியும். கடந்த ஐந்தாண்டுக் காலமாக, கூட்டணியில் இருந்த தி.மு.க. அரசு அதைப்பற்றிக் கவனிக்கவே இல்லை. B.P.L. list–ஐப் பொறுத்த அளவில், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒரே கருத்துதான் இருக்கிறது. கண்டிப்பாக அதை மாற்றி அமைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order–ஆ? Clarification–ஆ?

பிற்பகல் 1–50

**திரு. சு. குணசேகரன்:** Clarification–தான். ஆளுநர் உரையில் ஒரு கோடியே 83 இலட்சம் அரிசி வாங்கும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்று இந்த இலவச திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நேற்றைக்குக்கூட, எங்களுடைய உறுப்பினர் பேசுகிற நேரத்தில், அதை மறுபரிசீலனை செய்து அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். எனவே, நமது அமைச்சர் அவர்கள், நமது தமிழக முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, பதிலுரை

[திரு. சு. குணசேகரன்] [2011 ஜுன் 9

வருகிற நேரத்தில் அனைத்துக் குடும்பங்களுக்கும் இந்த மிக்சி, மின் விசிறி, கிரைண்டர் வழங்க நடவடிக்கை எடுத்தால், தொகுதியில் நாங்கள் கொடுக்கும்போது பிரச்சினை இல்லாமலிருக்கும். இல்லாவிட்டால், 10 பேருக்குக் கொடுக்கவில்லையென்றால், ஆளாளுக்கு கோஷம் போட்டுக்கொண்டிருப்பார்கள். அதனால் எல்லோருக்கும் கொடுக்கிற மாதிரி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சிறப்புப் பணிகள் அமலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடன் கலந்தாலோசித்து நல்ல முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத், உரையை முடித்துவிடுங்கள். இன்னும் எவ்வளவு நேரம் பேசுவீர்கள்?

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எது கேட்டாலும், உங்கள் தோழமைக் கட்சியோடு கடந்த ஐந்து வருடங்கள் ஆட்சியிலே இருந்தீர்கள், அப்போது சொல்லவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். தயவுசெய்து அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் செய்யவில்லை; நீங்கள் செய்யக்கூடாதா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் செய்தார்கள் அல்லது செய்யவில்லை; that is secondary. அப்பொழுது நாங்கள் கோரிக்கை வைக்காமல் இல்லை. அப்போதும் கோரிக்கை வைத்துக்கொண்டிருந்தோம். இப்போதும் கோரிக்கை வைத்திருக்கிறோம். கோரிக்கை வைப்பதற்குத்தான் மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பியிருக்கிறார்கள். தயவுசெய்து எங்கள் கோரிக்கையைத் தாங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத், விஷயத்திற்கு வாருங்கள்.



2011 ஜுன் 9]

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001–2006–இல் ஆட்சியிலிருந்த நேரத்தில் Rain Water Harvesting Scheme இருந்தது. இந்த ஆளுநர் உரையில் அது இல்லை. மீண்டும் அதனை அறிமுகம் செய்தால் நன்றாக இருக்கும் என்ற எனது கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரை, ஏற்கெனவே நம் நாட்டினுடைய முதுகெலும்பே வேளாண்மை என்பது எல்லோருக்கும் தெரியும். இதனை ஊக்குவிக்கும் வகையில், குறிப்பாக என்னுடைய தொகுதியைக் குறித்துச் சொல்லும்போது, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய மக்கள் திலகம் திரு. எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு dam; அது சம்பந்தப்பட்ட வழக்கு கிட்டத்தட்ட 30 வருடங்களாக உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. 2001–இல் முதன்முதலாக நான் இந்த அவைக்கு வந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னவுடனேயே, அந்த உச்ச நீதிமன்ற Case முடிந்து ஆறு வருடங்கள் ஆகிவிட்டன. இதுவரையிலும் அந்த Dam Channels பழுது பார்க்கப்படவில்லை. அதைப் பழுது பார்க்கச் சொல்லும்போது அன்றைக்கே இந்த அவையில் அறிவித்து, Kelavarapalli Reservoir–க்கு நான்கு கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். நான்கு கோடி ரூபாய் ஒதுக்கித் தந்த காரணத்தால், left channel, right channel இரண்டையும் பழுதுபார்த்து, விவசாயிகள் பயனடையும்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. எங்கள் தோழமைக் கட்சியினுடைய துணைத் தலைவர், அன்றைய பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார்கள். 2001–இல் நான் முதன்முதலில் சட்டமன்றத்தின் உள்ளே நுழையும்போது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நிதி கொடுத்த காரணத்தினால்தான் இது நிறைவேறியது என்று நான் அந்த மேடையிலேயே நன்றி சொல்லியிருக்கிறேன். மீண்டும் இந்த அவையிலே மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள தங்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அன்றைக்குக் கொடுத்த நான்கு கோடி ரூபாய் இன்றைக்கு 8,000 ஏக்கருக்குப் பாய்ச்சல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஜூன் 9

*__மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றியோடு இங்கு சில கருத்துகளைச் சொன்னார்கள். 2001–இல் சட்டமன்ற உறுப்பினரானபோது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே வைத்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றியதாக நன்றி கூறினார்கள். அந்தக் கோரிக்கை நிறைவு பெற்று, அது பயன்பாட்டுக்கு வருகின்றபொழுது இன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார்கள் என்று சொன்னார்கள். அந்த மேடையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி சொன்னார்களா என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுதான் எங்களுடைய வருத்தம். எங்கள் மாவட்டத்தின் அமைச்சர், என்னுடைய தமிழ் நன்றாகத் தெரிந்த அமைச்சர். நான் அந்த மேடையிலேயே நன்றி சொன்னேன் என்று முதலிலேயே குறிப்பிட்டேன். மாண்புமிகு அண்ணன் துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கும்பொழுது. தயவுசெய்து நீங்கள் வேண்டுமானால், நாளைக்கு அவர் வரும்பொழுது அவரிடமே கேட்டுப் பாருங்கள். அவர் மேடையிலேயே கேட்டார்; நான் உண்மையைத்தான் சொல்கிறேன்; இதிலே மறைப்பதற்கு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி என்பது—பொதுவாகவே மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக ஆகியிருக்கிறேன் என்று சொல்லுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அவைக்கு வருவதற்கே மூல காரணமாக இருந்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் வாழ்க்கையில் இன்று மேம்பட்டிருக்கிறார்; மகிழ்ச்சி. ஆனால், எனக்குத் தெரிந்த அளவில், அப்போது மாண்புமிகு இந்திய



2011 ஜூன் 9] [திரு. கே.பி. முனுசாமி]

கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்களும் சுயேச்சை உறுப்பினராக இருந்திருக்கிறார். அநேகமாக, அவரும் அந்த மேடையிலே இருந்திருப்பார் என்று நான் கருதுகிறேன். அப்படி இருந்திருந்தால், நிச்சயமாக இவர் சொன்ன கருத்தை அவர் ஆமோதிப்பார்; அல்லது "இல்லை" என்று சொல்வார் என்றே நான் கருதுகிறேன்.

பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில அரசியல் காரணங்களுக்காக அந்தக் கூட்டத்திலே நான் கலந்து கொள்ளவில்லை. அன்றைக்கு அமைச்சர் பங்கேற்ற அந்தக் கூட்டத்திலே நான் கலந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத் அவர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ** சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. நிச்சயமாக இந்த அவையிலே. . .(குறுக்கீடு) ஒரு நிமிடம், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற சொல் அவையில் உபயோகிக்கக்கூடிய சொல் அல்ல. அதை "உண்மைக்கு மாறான தகவல்" என்று சொல்லுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உண்மைக்கு மாறான தகவலை இங்கே சொல்லவில்லை; சொல்ல வேண்டிய அவசியமும் எனக்கில்லை. இருந்தாலுங்கூட, மாண்புமிகு அமைச்சர் சொல்லும்போது, இந்த அவைக்கு நான் 2001–இல் சட்டமன்ற உறுப்பினராக வருவதற்குக் காரணமாக இருந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்று சொன்னார்கள்; அதை நான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே. கோபிநாத்] [2011 ஜூன் 9

மறுக்கவில்லை. எதையுமே மறக்காமல் பேசுகிறவன்தான் கோபிநாத்; மறந்து பேசுபவர்கள் வேறு. என்னைப் பற்றி நன்றாகத் தெரிந்த அண்ணன் இப்படிப் பேசிவிட்டாரே என்பதிலே எனக்குக் கொஞ்சம் வருத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். இந்த அவையிலே முதன்முதலாக நான் காலடி எடுத்து வைக்கும்போது, நான் பேசிய தாய் மொழிக்கு, அதனை ஆமோதித்து (குறுக்கீடு) அதற்கு அங்கீகாரம் கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெலுங்கிலே பேசினார்கள். அது எதனாலே என்பது உங்களுக்குத் தெரியாதா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குள்ளே deep–ஆகப் போக விரும்பவில்லை. இருந்தாலும்கூட, agricultural development–க்கு சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். அதற்குக் காரணம், என்னுடைய தொகுதியைப் போன்று, தமிழ்நாட்டிலே நிறைய இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள கே.ஆர்.பி. அணைக்காக, அன்றைக்கு 4 கோடி ரூபாய் கொடுத்த காரணத்தினால், இன்றைக்கு 8 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி நடந்து கொண்டிருக்கிறது; வருடத்திற்கு 3 crop செய்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலேயே 365 நாட்களும் தண்ணீர் வருகிற ஒரே டேம், கெலவரப்பள்ளி டேம்தான். அதற்கு கர்நாடகாவிலிருந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பக்கத்திலே கெடிலம் டேம் இருக்கிறது. இந்த டேமிலேயிருந்து தண்ணீர் வீணாகப் போகிறது. சாத்தனூரிலேயிருந்து கடலிலே வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. இந்தத் தண்ணீரை waste ஆகாமல் உபயோகப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய R.D. Department–இல் வரும் அது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோபிநாத் அவர்களே, ஏற்கெனவே 24 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கே. கோபிநாத்:** அதில் அமைச்சர்கள் 10 நிமிடங்கள் பேசிவிட்டார்கள். (குறுக்கீடு) அமைச்சர் பெருமக்கள் 10 நிமிடங்கள் பேசிவிட்டார்கள். நண்பர் என்னுடைய தம்பி வேறு பேசினார்.



2011 ஜூன் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குறுக்கீடு இல்லாமல் பேச வேண்டும். சரி, உரையைப் பேசுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எப்பொழுது சொன்னாலும் முடித்து விடுகிறேன்; நான் உங்களுக்குக் கட்டுப்படுகிறேன். ஏனென்றால், நீங்கள் அவைத் தலைவர். நீங்கள் என்ன சொன்னாலும் ஏற்றுக்கொள்கிறோம். அதற்குள்ளே deep–ஆகப் போக விரும்பவில்லை. இருந்தாலும்கூட, குறிப்பாகச் சொல்லும்போது, agriculture develop–ஆக வேண்டுமென்றால், இப்படி waste–ஆகிற தண்ணீரை lift Irrigation மூலமாக நம்முடைய ஏரிகளில் நிரப்பினாலே உபயோகமாக இருக்கும். என்னுடைய பகுதியிலே 40, 45 ஏரிகள் இருப்பதனால், நல்ல வாய்ப்பிருக்கிறது. புதிதாக அமைச்சர் பதவி ஏற்றிருக்கிறார். இந்த முறை நீங்கள் வரும்போது, நானும் உங்களோடு வருகிறேன்; கொஞ்சம் பாருங்கள். நீங்கள் அதையெல்லாம் பார்த்தால், ஏதுவாக இருக்கும். இது மிகவும் உபயோகமான திட்டம். என்னுடைய தாலுகாவில் மட்டுமல்ல; எனக்குத் தெரிந்தவரையில், பக்கத்தில் உள்ள தாலுகாவான தளி, வேப்பனஹள்ளி, division ஆன பிறகு, bifurcation ஆன பிறகு உள்ளடங்கியிருக்கிறது. இந்தப் பகுதிகளிலே மட்டும், கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஏக்கர் cultivate பண்ணுவதற்கு ஏதுவாக இருக்கும். இதுபோல தமிழ்நாடு முழுவதும் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒரேயொரு கோரிக்கை. பத்து வருடங்களாக, ஒவ்வொரு முறையும் சட்டமன்றத்திலே பேசும்போது நான் வலியுறுத்துகிற கோரிக்கை. என்னுடைய தொகுதி மக்களும் சரி; பக்கத்திலே இருக்கிற தளி தொகுதி மக்களும் சரி. நாங்கள் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரிப் படிப்பு மேற்கொள்ள கல்லூரியே கிடையாது. ஒன்று, நாங்கள் கர்நாடகாவில் பெங்களூருவுக்குச் செல்லவேண்டும்; அல்லது ஆந்திராவில் குப்பம் பகுதிக்குச் செல்ல வேண்டும். எனவே, இந்த அவல நிலையைப் போக்கி, தயவுசெய்து என்னுடைய தொகுதியில் நீங்கள் ஒரு அரசுக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "முடித்துக்கொள்கிறேன்" என்று சொல்லுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்!

[2011 ஜூன் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், சரியாக 10 நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 2–00*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14–ஆவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த தாங்கள், பின் வரிசையில் இருந்து 10 நிமிடம் வேண்டுமென்பதற்காகத் தாங்கள் நடத்திய போராட்டமும், அந்தப் போராட்டத்திலே உங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதும், கடைசியாக நாம் அனைவரும் விலைவாசி உயர்வைக் கண்டித்து வெளிநடப்புச் செய்துவந்த நிகழ்வுகளும் என் நினைவில் வந்து போகிறது. அப்படி...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பசுமை நிறைந்த நினைவுகளே, . . .*

**செல்வி கே. பாலபாரதி:** *அப்படிப்பட்ட அந்த நினைவுகளோடு வெளிநடப்புச் செய்தபோது உள்ளிருந்த ஒரு குரல் ...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**செல்வி கே. பாலபாரதி:** *இங்கு இருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் அப்போது உள்ளே அமர்ந்திருந்தார்கள். கடைசியாக நாம் அந்தச் சபையை விட்டுப் பிரிகிறபோது, "இப்போது நீங்கள் வெளிநடப்புச் செய்கிறீர்கள்; எப்பொழுதுமே உள்ளே வரமாட்டீர்கள்!" என்று அங்கே ஒரு குரல் கேட்டது. ஆனால், தமிழக மக்கள் மிக அற்புதமான ஒரு பட்டனை அழுத்தி வெளியில் சென்றவர்களை உள்ளே கொண்டுவந்தார்கள். உள்ளே இருந்தவர்களை வெளியிலே தூக்கி எறிந்தார்கள். இதுதான் இந்திய அரசியல் சட்டத்தினுடைய, தேர்தல் ஜனநாயகத்தினுடைய அதி அற்புதமான விளைவுகள் என்று நான் பார்க்கின்றேன். தமிழக மக்கள் கொடுத்திருக்கக்கூடிய இந்த வெற்றியை மக்களினுடைய*



2011 ஜூன் 9] [செல்வி கே. பாலபாரதி]

*வெற்றி, இது தன்னுடைய வெற்றி, தங்கள் கூட்டணியினுடைய வெற்றி என்று சொல்லாமல், மாண்புமிகு மதிப்பிற்குரிய நமது முதல்வர் அவர்கள், இது மக்களினுடைய வெற்றி என்று மக்களுக்கு மகுடம் சூட்டியது மிகச் சரியானது என்ற முறையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வணக்கத்தைச் சமர்ப்பித்துக் கொண்டு, இந்த அவையிலே வீற்றிருக்கக்கூடிய கடந்த காலத்திலே சட்டமன்றத்திலே பல போராட்டங்களைத் தலைமை தாங்கி நடத்தி, கூட்டாகப் போராட்டங்களை நடத்தி, மக்களினுடைய பிரச்சினைகளை வெளியிலே கொண்டு சென்ற, முன் வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய மதிப்பிற்குரிய அமைச்சர் பெருமக்கள் மற்றும் இங்கு இருக்கக்கூடிய சபை உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்கள் அனைவருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் வணக்கத்தைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.*

*அப்படிப்பட்ட அந்தச் சட்டமன்றத் தேர்தலினுடைய போராட்டம் என்பதை, நாம் நடத்திய போராட்டத்தினுடைய தொடர்ச்சியாகப் பார்க்கிறேன். கோடிக்கணக்கான பணத்தை முறியடித்திருக்கிறார்கள். சாதி உணர்வைத் தோற்கடித்திருக்கிறார்கள். மத உணர்வைத்தோற்கடித்திருக்கிறார்கள். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைத் தோற்கடித்தார்கள். இலவச* Gas *சிலிண்டரைத் தோற்கடித்தார்கள். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அன்றைய முதல்வருடைய படம் போட்டு ஒரு அட்டையைக் கொடுத்து, "இது ஒரு இலட்சம் ரூபாய் கார்டு; உள்ளே வைத்துக்கொள்" என்றெல்லாம் அனுப்பிய அந்த சாதாரண எளிய மனிதன் ஏழ்மையோடு, வறுமையோடு வாழ்ந்தபோது இத்தனையையும் தோற்கடித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையில் நமது கூட்டணியை வெற்றிக் கூட்டணியாக ஆக்கி இங்கே இந்த அரசை அமைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தமிழக மக்களுக்கு நன்றியை, பாராட்டுதல்களை, வணக்கத்தை நான் சமர்ப்பித்துக்கொள்கிறேன். அதோடு இணைந்து நின்று திண்டுக்கல் தொகுதியில் வெற்றி வாய்ப்பை வழங்கிய, திண்டுக்கல் தொகுதியினுடைய மக்கள், மாவட்ட மக்கள் அனைவருக்கும் இந்த நேரத்திலே நன்றியையும், வணக்கத்தையும் சமர்ப்பித்துக்கொள்கிறேன். இந்த வெற்றியை ஆய்வு செய்கிறபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தனிப் பெரும்பான்மை. அன்றைக்கு கேப்டன் அவர்கள் தனியாக*

வந்தார். இன்றைக்கு எதிர்கட்சிகளுக்கெல்லாம் கேப்டனாக மாறி கேப்டனாக விளங்குகின்றார்.

இடதுசாரி கட்சிகளுக்கு 20 இடங்கள் வெற்றி. நாங்கள் 10, பக்கத்தில் 9, அங்கே அகில இந்திய பார்வார்டு பிளாக் ஒன்று. தமிழகத்தில் இடதுசாரி கட்சிகள் 20 இடங்களில் வெற்றி பெற்றிருப்பது என்பது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது. அதையும் மக்கள்தான் நிகழ்த்தினார்கள். ஏனென்று சொன்னால், நாங்கள் இடதுசாரி கட்சிகள். கட்சிகள் வேறாக இருக்கலாம், தத்துவம் ஒன்றுதான். மக்களுக்கான மார்க்சிய தத்துவம். ஆகவே, இந்த இடதுசாரி கட்சிகளினுடைய 20 என்ற வெற்றி எங்களுக்கு உங்களோடு இணைந்து நின்று மேலும் மக்கள் பணியாற்றுவதற்குக் கிடைத்திருக்கக்கூடிய பெரும் வெற்றி என்று நாங்கள் கருதுகின்றோம்.

அதுமட்டுமல்ல; ஆளும் அரசாங்கமாக இருந்த தி.மு.க.–வை எதிர்க்கட்சி வரிசையிலிருந்து கீழே இறக்கி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட போராட்டத்தையும் அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 63 நாயன்மார்கள் இன்றைக்கு 5 பஞ்ச பாண்டவர்களாக, பாவம் தெலுங்கில் பேசுவதா, தமிழில் பேசுவதா என்று தடுமாறிக் கொண்டு காங்கிரஸ் கட்சி பரிதாபமாக இருக்கிறது. காரணம், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆன்–லைன் வர்த்தகத்தை இரத்து செய்யவில்லை. இப்படிப் பல்வேறு வகைகளில் மக்களுக்கான, தமிழக மக்களின் உரிமைகளை நசுக்கிய காங்கிரஸ் கட்சி ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், 63 நாயன்மார்கள் என்றுதான் சொன்னார்கள். 63 காங்கிரசார் என்று சொல்லவில்லை. "எங்கப்பன் குதிருக்குள்ளே இல்லை" என்பதுபோல உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது? உட்காருங்கள் சார். (குறுக்கீடு) திரு. கோபிநாத், உட்காருங்கள்.

பிற்பகல் 2–05

**செல்வி கே. பாலபாரதி:** தமிழகத்திலே மின்சாரம் என்றால் "இருள்" என்ற பொருள் கடந்த காலத்திலே இருந்தது. இன்று மத்திய அரசுடன் நம்முடைய உரிமைக்காக வலிமையான



போராட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் நாம் நடத்த வேண்டும். இல்லையென்று சொன்னால் தமிழகத்தில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத், என்ன சொல்ல வருகிறீர்கள்? சொல்லுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்குள் வரவில்லை. அரசியலில் வெற்றி, தோல்வி என்பது சகஜம். Even West Bengal–இல்கூட 35 வருடங்கள் continue–ஆக ஆட்சியில் இருந்தார்கள்; இன்றைக்கு West Bengal தலைகீழாக மாறிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் சகோதரி பேசும்போது கம்யூனிஸ்டு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தோல்வி பற்றிக் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. 5 என்பது எண்ணிக்கையில் குறைவாக இருக்கலாம். Party. ரொம்ப பெரிய Party, பெரிய பாரம்பரியமான Party. தயவுசெய்து (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் பேசுங்கள். உங்கள் உரிமையை நான் பறிக்க விரும்பவில்லை. இருந்தாலுங்கூட, வெற்றி, தோல்வி என்பது இரண்டும் சகஜம். எப்போது யாருக்கு வரும் என்று சொல்லமுடியாது. (குறுக்கீடுகள்) இல்லை; இல்லை தயவுசெய்து. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி தோல்வி இயல்பானது என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். மேற்கு வங்க மாநிலத்தில் அந்த அரசு தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் பெற்றிருக்கக்கூடிய வாக்குகள், இடது முன்னணிக் கட்சிகள் பெற்றிருக்கக்கூடிய வாக்குகள் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் வாக்குகள் என்பது இன்றைக்கு இந்தியாவிலே புதிய நிகழ்வு. அதாவது, தோல்வியடைந்திருந்தாலும் இவ்வளவு வாக்காளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கட்சி தங்களுடைய தவறுகளை, கடந்த காலத் தவறுகளை வரக்கூடிய காலங்களில் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும். ஆனால், காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள், அன்றைக்கு இருந்தவர்கள், நம்முடைய சபாநாயகர் அவர்களுக்குத் தெரியும், நாங்கள் பேச ஆரம்பித்தால் அண்ணன்

பீட்டர் அல்போன்ஸ் எழுந்து விடுவார். காங்கிரஸ் கட்சி கடந்த காலங்களில் எம்.எல்.ஏ.–க்களுக்கு வீடு வேண்டும்; இல்லையென்றால் கார் வேண்டும், (சிரிப்பு) இப்படித்தான் கோரிக்கை வைத்தார்கள். ஆகவேதான் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியைத் தழுவியிருக்கிறது என்பதை அவர்கள் உணரவேண்டும்.

திண்டுக்கல் நகராட்சியில், கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக, குடிதண்ணீர்ப் பிரச்சினை கடுமையாக இருக்கிறது. 18 நாட்களுக்கு ஒரு முறைதான் இப்போதும் தண்ணீர் கிடைக்கிறது. கடந்த 2001–2006–இல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வந்தது. தொடர்ந்து மின்சார வெட்டின் காரணமாக குடிதண்ணீர் வழங்குவது மிகக் கடுமையான பிரச்சினையாக இருக்கிறது. பாதாளச் சாக்கடைத் திட்டம், அதலபாதாளச் சாக்கடைத் திட்டமாக மாறிவிட்டது. இன்று நகராட்சி அமைப்புகள் எல்லாமே நிலைகுலைந்து, சீர்கெட்டு மிக மோசமாக இருக்கின்றன. கடந்த காலத்தில் தி.மு.க. ஆட்சியில் முன்னாள் துணை முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பாக இருந்தார்கள். ஆனால், மாநகராட்சியினுடைய வீதிகள், நகராட்சியினுடைய வீதிகள், குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதில், இவை ஒட்டுமொத்தத்திலும் படுதோல்வியில் இருந்தது. ஆகவேதான் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கொடுத்தாலும், இந்த அடிப்படைத் தேவைகள் தீர்வு செய்யப்படாததன் காரணமாக, கடுமையான விலைவாசி உயர்வு காரணமாக, மின்வெட்டின் காரணமாகத்தான் கடந்த காலத்திலிருந்த ஆட்சியை அனைத்தையும் மீறி மக்கள் தூக்கியெறியக்கூடிய நிலைமை என்பது ஏற்பட்டது. திண்டுக்கல் நகரத்தினுடைய பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் என்னதான் ஊழல் நடந்தது என்பதனை ஆய்வு செய்யவேண்டும். அதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும். திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வைகை அணையிலிருந்து நேரடியாகக் குழாய் பதித்து தண்ணீர் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் வருகிறது. நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நேரடியாக மக்கள் வாக்களித்து, தலைவர்களைத் தேர்வு செய்யக்கூடிய முறையைக் கொண்டு வர வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்டு



கட்சி சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு என்பதை 50 சதவிகித இட ஒதுக்கீடாக மாற்றிக் கொடுப்பதற்கு நீங்கள் முன்வரவேண்டும். ஏனென்றால், இந்தச் சட்டமன்றத்தில் அ.தி.மு.க. உள்ளிட்ட எல்லாக் கட்சிகளிலும் உள்ள பெண் உறுப்பினர்களைச் சேர்த்தால், மொத்தம் 17–தான் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குறை இருந்ததால் முதலமைச்சர் பெண் என்பதால் அது நிறைவாகிவிட்டது. ஆதலால் உள்ளாட்சிகளுக்கு 33–ஐ 50–ஆக மாற்றிக் கொடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று கடந்த காலத்தில் மர்மக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், பெயர் சொல்ல முடியாத சிக்குன்குனியா எனப் பல காய்ச்சல்கள் வந்தன. இதற்கு மருந்து தேடிப் போகிறபோது மருந்து கம்பெனிகள் எல்லாம் போலி மருந்து கம்பெனிகளாக ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தக்காளிக் காய்ச்சல், வெங்காயக் காய்ச்சல் எல்லாம் விட்டுவிட்டீர்கள்!

**செல்வி கே. பாலபாரதி:** இப்படி விதவிதமான நோய்கள், மருந்துகளில் போலி மருந்துகள் தயாரிப்பு. இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் அரசுத் தலைமை மருத்துவமனைகள் பெரிய ஆரம்ப சுகாதார மையங்களாக இருக்கின்றன. அங்கு போய் பார்த்தால் போதிய டாக்டர்கள் இல்லை; போதிய நர்சுகள் இல்லை. இப்படிப்பட்ட பிரச்சினைகளோடு அங்கிருக்கக்கூடிய தலைமை மருத்துவமனைகளுக்கு தினசரி இரண்டாயிரத்திலிருந்து, மூன்றாயிரம் நோயாளிகள், ஏழைகள் மட்டுமே வருகிறார்கள். இப்படிப்பட்ட தலைமை மருத்துவமனைகளில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, இருதய சிகிச்சைப் பிரிவு, தலைக் காயம் பிரிவு, அதேபோன்று M.R.I. Scan இவையெல்லாம் சில மாவட்டங்களில், குறிப்பிட்ட சில மாவட்டங்களில்தான் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் இல்லை. ஆகவே மருத்துவத் துறை சம்பந்தமாகச் சொல்கிறபோது, இந்தத் தலைமை அரசு மருத்துவமனைகளைச் சீர்படுத்துவதற்கு, கட்டாயமாக நமது அரசு திட்டமிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–10*

கல்வி, இன்றைக்கு பயங்கரமான வியாபாரப் பொருளாக மாறிவிட்டது. சென்னையிலே மட்டும் International பள்ளிகள் என்று சொல்லக்கூடிய பள்ளிகளில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறார்கள். எங்கேயாவது ஒன்றாம் வகுப்புக்குத் தேர்வு வைத்து எம்.எல்.ஏ., கடிதத்தை வாங்குவார்களா? கீழே போனால் 500 முதல் ஆயிரம் கடிதங்கள் வரை எம்.எல்.ஏ. சிபாரிசு கடிதங்கள் போகும். ஒன்றாம் வகுப்புக்குக்கூட தேர்வு வைக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல; கல்விக் கொள்ளை என்பது கல்லூரியிலிருந்து சாதாரண பள்ளி வரை நடந்து கொண்டே இருக்கிறது. இதைத் தடுப்பதற்காக ஒரு சட்டத்தைக் கடந்த காலங்களிலே போட்டார்கள். சட்டமும் இருந்தது; கல்வியிலே கொள்ளையும் இருந்தது. ஆகவே, நமது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மக்களினுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கக்கூடிய இந்த அரசு, கல்விக் கொள்ளையை, கல்வி வியாபாரத்தை உடனடியாகத் தடுக்க வேண்டும். அதிலேயிருந்துதான் சமச்சீர் கல்வி கிடைக்கிறது. 1½ இலட்சம் ரூபாய் கொடுத்து படிக்கக்கூடிய மாணவர்களினுடைய கல்வித் தரம், நம்முடைய மூட்டை தூக்கக்கூடிய முத்துசாமி வீட்டுப் பிள்ளைக்கும் அந்தக் கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் சமச்சீர் கல்வியிலே நீங்கள் சிறு சட்டத் திருத்தம் கொண்டு வந்தாலும், அதை மிக விரைவிலே கொண்டு வந்து ஆரம்பக் கல்வியில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது. பணக்காரனுக்கு ஒரு கல்வி, ஏழைக்கு ஒரு கல்வி, மூட்டைத் தூக்கக்கூடியவர்களுக்கு ஒரு கல்வி, இன்னொருவருக்கு இன்னொரு கல்வி என்ற ஏற்றத்தாழ்வை அகற்றுவதற்கு இந்தச் சமச்சீர் கல்வியைக் கட்டாயமாகக் கொண்டுவந்து கொடுக்க வேண்டும். ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே வேலைபார்க்கக்கூடிய ஆசிரியர்கள், ஏழை மாணவர்கள் மத்தியிலே இருக்கிறார்கள். அரசு கொடுக்கக்கூடிய ஊதியத்தைப் பாருங்கள், வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம். ஆனால் தனியார் பள்ளியிலே பெரிய பணக்காரர்கள் வீட்டுக் குழந்தைகள் படிக்கிறார்கள். அதிகக் கட்டணம் வசூல் பண்ணுகிறார்கள். ஆனால் அந்த Teacher–களினுடைய சம்பளத்தைக் கேளுங்கள், வெறும் 7 ஆயிரம் ரூபாய்.





ஆகவே, பணக்காரப் பள்ளிகளில் குறைந்த ஊதியம் வழங்கப்படுகிறது. ஆரம்பப் பள்ளிகளில் ஏழை மாணவர்கள் படிக்கும் பள்ளிகளில் ஆசிரியர்கள் அரசு ஊதியம் பெறுகிறார்கள். இதிலேகூட ஒரு சமச்சீரற்ற தன்மை; ஊதிய முரண்பாடு. ஆகவே, இத்தனைக் கட்டமைப்புகளையும் நாம் ஆய்வு செய்து சமச்சீர் கல்வியைக் கொண்டுவர வேண்டும். தமிழகத்திலே ஆரம்பக் கல்வியில் சமச்சீர் கல்வி என்பது நீடிக்க வேண்டும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களினுடைய ஆணையத்தைச் செயல்படுத்துவதற்கு நமது அரசு முன்வர வேண்டும். கடந்த காலத்திலே அது செயல்படவில்லை. பெண்கள் மீதான வன்முறை தொடர்ந்துகொண்டிருக்கிறது. குழந்தைகளை பாலியல் பலாத்காரம் செய்யக்கூடிய நிலைமை என்பது இருக்கிறது.

அதேபோன்று, நம்முடைய புதிய சட்டமன்றம் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கிறது. இதனுடைய தொடர்ச்சிதான் அந்தக் கட்டடம். எங்களுடைய கருத்து என்ன என்று சொன்னால், அந்தக் கட்டடம் மக்களுடைய வரிப் பணம். நாங்கள் நன்றி சொல்லப் போய் இருந்தபோது, ஒரு அம்மா கேட்டார்கள். “ஏன் அம்மா அங்கே போகமாட்டேன் என்கிறார்கள்? எல்லோரையும் கூப்பிட்டுப் போகவேண்டியதுதானே!” என்று சொன்னார்கள். நான் சொன்னேன், “நாங்கள் சொல்லி, அவர்கள் வர மாட்டார்கள்” என்று சொன்னேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், “எங்கள் பணம்; மக்களினுடைய வரிப் பணம்; 800 கோடி ரூபாய்க்குக் கட்டப்பட்டிருக்கிறது; அதை அப்படியே ஒரு மண்டபமாக விட்டுவிட்டு வருவது சரியான ஒரு நடவடிக்கையாக இருக்குமா?” என்று கீழே இருக்கக்கூடிய அடித்தட்டு மக்கள் நம்மிடம் பேசுகின்றபோது பேசுகிறார்கள். இது, வந்த கருத்து என்ற முறையிலே நாங்கள் பகிர்கிறோம். இந்தக் கட்டடம் என்பது ஒரு one way–ஆகத்தான் இருக்கிறது. ஒருத்தரோடு ஒருத்தர் மோதிதான் போக வேண்டி இருக்கிறது. ஆகவே, நமக்கு சுகாதாரமான, ஆரோக்கியமான, பொது மக்களும் வந்து செல்லக்கூடிய, அலுவலர்களும் சுதந்திரமாக வேலை செய்யக்கூடிய ஒரு நல்ல கட்டடம் என்பது தேவைப்படுகிறது. அந்தக் கட்டடத்தை நான் பார்க்கிறபோதெல்லாம் இந்த தமிழகத்திலே ஒரு அற்புதமான சாதனையைச் செய்து கொடுத்தது நாம்தான். நீங்களெல்லாம் வெளிநடப்புப் பண்ணிவிட்டு போனீர்கள்.

அப்போது சபாநாயகரை எதிர்த்துச் சென்றவரை இப்போது, உண்மையான சபாநாயகராக மாற்றியது அந்தக் கட்டடத்தினுடைய சரித்திரமாக இருக்கிறது. ஆகவே, "நீங்கள் எல்லாம் மீண்டும் வர மாட்டீர்களா?" என்று என்னைப் பார்த்து கேட்பது போலவே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தலைமைச் செயலகக் கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பல்வேறு வகையான முறைகேடுகள் அதில் நிகழ்த்தப்பட்டதாக வந்த புகார்களின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களால் ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு, அந்த முறைகேடுகள் விசாரிக்கப்படும் வரை அதனுடைய பணிகள் நிறுத்தி வைக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்கள். முறையாக விசாரணை நடத்தப்பட்டு, விசாரணையின் அடிப்படையில் அந்தக் கட்டடத்தை எவ்வாறு அரசு கையாளும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்பார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இங்கே பாருங்கள் அம்மா, சீக்கிரம் உரையை முடியுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, அதிலே ஊழல்கள், முறைகேடுகள் நடைபெற்றிருந்தால் கட்டாயமாக விசாரிக்கப்பட வேண்டும். உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆகவே, இது எங்களுடைய கருத்து, அதுவரை இந்தக் கட்டடத்தை ஒன்று சட்டமன்றத்திற்கோ, வேறு அலுவலகத்திற்கோ பயன்படுத்த வேண்டும் என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*பிற்பகல் 2–15*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடத்தில் முறைகேடுகள்





மட்டுமல்ல; தரம் குறைவாகவும் கட்டப்பட்டிருக்கிறது என்று புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. தரம் இல்லாத ஒரு கட்டடத்தைப் பயன்படுத்துகின்றபோது, சில பல பிரச்சினைகள் அங்கே எழுந்தால் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பும், கடமையும் அரசுக்கு இருக்கின்றது. இதையெல்லாம் ஆராய்ந்துதான் முழுமையான விசாரணை முடிந்தபின் அந்தக் கட்டடம் பற்றிய நிலையை அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தக் கட்டடம், திறப்பு விழாவிற்குப் பிறகு, ஓர் ஆண்டுக் காலம் கழித்தும் கட்டி முடிக்கப்படவில்லை. இன்னும் கட்டிக்கொண்டே இருக்கிறார்கள் என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** பெருமைமிக்க இந்தப் பேரவையின் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்திசையும் போற்றுகின்ற, பத்துக் கோடி தமிழர்களும் போற்றுகின்ற தமிழக முதல்வர் அம்மா அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு இந்த அவையின் உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும், தமிழகத்தின் அடையாளமாக விளங்குகின்ற தமிழக அரசின் முத்திரைச் சின்னமான ஆண்டாள் அவதரித்த புண்ணிய பூமியாம் ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டப் பேரவையிலிருந்து என்னை இந்தப் பெருமைமிகு அவைக்குத் தேர்வு செய்த வாக்காளர்களுக்கும், உழைக்கின்ற மக்களுக்குச்

[திரு. வெ. பொன்னுப்பாண்டி] [2011 ஜூன் 9

சேவை செய்ய அடிமட்டத் தொண்டனாகிய என்னை அடையாளப்படுத்திய இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கும், அதனுடைய மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் திரு. தா. பாண்டியன் அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக அயராது உழைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தினுடைய தோழர்களுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சி, புதிய தமிழகம், சமத்துவ மக்கள் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னணிக் கழகம் போன்ற கூட்டணிக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொண்டு, என்னுடைய இந்தக் கன்னிப் பேச்சை ஆளுநர் உரைமீது நன்றி தெரிவிக்கின்ற வகையில் தொடருகிறேன்.

ஆளுநர் உரையில் உள்ள மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். முந்தைய அரசால் தொடங்கப்பட்ட அரசு கேபிள் டிவி. நிறுவனம் துவக்கப்பட்ட வேகத்திலேயே மூடப்பட்டது. அதன்மூலம் தமிழக அரசின் பணம் சுமார் 90 கோடி ரூபாய் முந்தைய அரசால் வீணடிக்கப்பட்டுள்ளது. அதற்குக் காரணம், தமிழகம் முழுவதும் கேபிள் டி.வி.–யின் முழுக் கட்டுப்பாடும் 'சன்' குழுமத்தாலும், 'ராயல் விஷன்' குழுமத்தாலும் சொந்தமாகி, ஆண்டுக்குப் பல ஆயிரம் கோடி வருமானத்தை முந்தைய தமிழக முதல்வரின் குடும்பத்தினர் பெற்றதுதான். ஆனால், இன்று நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் கேபிள் டி.வி.–யை அரசுடைமையாக்கி, ஏற்கெனவே பணியாற்றி வந்த சிறு கேபிள் டிவி. நிறுவனங்கள் பாதிக்காத வகையில் செயல்படும் என்ற அறிவிப்பினை அறிவித்திருக்கின்றார்கள். அதையும் எங்களுடைய கட்சி முழு மனதோடு வரவேற்கின்றது. குறைந்த விலையில் கேபிள் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதை வரவேற்கின்றோம். அதேநேரத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாக இணைப்புகள் வழங்கிட வேண்டுமென்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம், சாலை வசதி, நகர்ப்புறக் கட்டமைப்புகள் மற்றும் வீட்டு வசதி போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, பொருளாதார வளர்ச்சி மேம்படுத்தப்படும் என்று அறிக்கையிலே



2011 ஜூன் 9] [திரு. வெ. பொன்னுப்பாண்டி]

கூறப்பட்டிருக்கின்றது. சரியான அணுகுமுறைதான். ஆனால், அதில் அரசு, தனியார் தொழில் நிறுவனங்களின் கூட்டு முயற்சியில், அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. தனியார்கள் அடிப்படை வசதிகள் முதலீட்டை அளிப்பதன்மூலம் மக்கள் அதற்கான கட்டணங்களைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். எனவே, அடிப்படை மேம்பாடுகளில் தனியாரை அனுமதிப்பது பற்றி அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில், மக்கள் தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியைக் கல்விக்காகவும் மருத்துவச் சிகிச்சைக்காகவும் செலவிட வேண்டியுள்ளது. ஆனால், நமது அரசின் கடமை அனைத்துப் பகுதி மக்களுக்கும் சமமான கல்வி மற்றும் மருத்துவச் சிகிச்சைகளை அளிக்கின்ற வகையிலே கொள்கையை உருவாக்கிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

எனவே, தமிழகத்திலுள்ள மாவட்ட அளவிலான தலைமை மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றில் அனைத்து வகை நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கின்ற வகையில் மருத்துவமனைகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்றும், இந்த ஆண்டு தாங்கள் முன்வைக்க இருக்கின்ற வரவு–செலவுத் திட்டத்தில் மருத்துவமனைகளை முழுமையாகச் சீரமைக்க, கூடுதலான நிதிகளை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 2–20*

தமிழகத்தில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் விதத்தில் திட்டங்களை உருவாக்கிட வேண்டும். தமிழக அரசின் கொள்கையாக, வரும் ஐந்தாண்டுகளில் (மணியடிக்கப்பெற்றது) தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும், குடும்பத்திற்கு ஒருவருக்காவது வேலைவாய்ப்பினை உருவாக்குகின்ற வகையில் அரசினுடைய திட்டங்கள் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, அம்மா அவர்கள் பெருமைப்படுகின்ற வகையிலே தமிழகத்திலே சட்டம்–ஒழுங்கைப் பாதுகாக்கின்ற வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவித்து அவற்றைச் செயல்படுத்தியிருப்பது, மக்களுக்கு மேலும் ஒரு நம்பிக்கையைப் பெற வைத்திருக்கின்றது.

[திரு. வெ. பொன்னுப்பாண்டி] [2011 ஜூன் 9

மேலும், அரசு அறிவித்துள்ள திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குச் சென்றடைகின்ற வகையிலே திட்டம் மற்றும் செயலாக்கத் துறை என்ற புதிய துறையை உருவாக்கி அதற்குத் தனியாக அமைச்சர் ஒருவரையும் நியமித்துள்ளது, இந்த அரசின் செயல்பாடு அறிவிப்போடு இல்லாமல் செயல்படுத்துவதிலும் உறுதியாக இருக்கும் என்பதற்கு இது சான்றாக விளங்குகின்றது.

அறிக்கையிலே, தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கும் விதமாக, தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கின்ற விதம் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் வெளிநாட்டு முதலீட்டில் தொழிற்சாலைகள் தொடங்கும்போது, தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிலே, முன்னுரிமை கொடுப்பதை உத்தரவாதப்படுத்துவதோடு, தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கின்ற வகையில், தொழிற்சங்கம் அமைத்துக்கொள்கின்ற உரிமையையும் உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆட்சியில் கேட்டவர்களுக்கெல்லாம் நல வாரியம் தொடங்கப்பட்டது. அந்த வாரியங்கள் எல்லாம் தற்போது முடங்கிப்போய் உள்ளன. எனவே, புதிய அரசு வாரியங்களைச் செயல்படுத்துகின்ற வகையில், குறிப்பாக விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அந்த வாரியங்களை முழுமையாகச் செயல்படுத்திட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10–6–2011) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2–21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*5. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/2009) 1.9.2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 20.8.2009 ஆம் நாளிட்ட 150 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*



2011 ஜூன் 9] [திரு. வெ. பொன்னுப்பாண்டி]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—